இ. சுந்தரமூர்த்தி

சொல்வலை
வேட்டுவர்
வள்ளுவர்

சொல்வலை வேட்டுவர்
வள்ளுவர்

புலவர் இ. சுந்தரமூர்த்தி
எம். ஏ., டிப். மானிடவியல்
விரிவுரையாளர், தமிழ்த் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்.

அன்பளிப்பு
முனைவர் ம. இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைகழகம்
தஞ்சாவூர்.

தேன்மொழி நூலகம்

தேன்மொழி வெளியீடு—1
முதற் பதிப்பு : சனவரி 16, 1976 (திருவள்ளுவர் திருநாள்)

ஆசிரியரின் பிறநூல்
திருக்குறள் அணிநலம்
(சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு)

விலை : ரூ. 5

விற்பனை உரிமை :
மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை-1.

அச்சிட்டோர் :
மக்கள் அச்சகம்
சென்னை-600 002.

தமிழறிவு ஊட்டி வளர்த்த
என் அன்புத் தந்தையார்

திரு. த. இளையபெருமாள் பிள்ளை

அவர்களின்

திருவடிகட்கு

அணிந்துரை

டாக்டர் ந. சஞ்சீவி எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
டிப். மானிடவியல்,
டிப். அரசியல் & ஆட்சியியல்,

தமிழ்த்துறைத் தலைவர்-பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

செந்தமிழ்ச் செல்வர் புலவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் புது நூல் முதல் நூல் பார்த்து, படித்து அகமிக மகிழ்ந்தேன். தமிழ் இலக்கியத் திறனாய்வு உலகில் புத்தொளி பரப்ப எழும் இந்நூல் ஏழு கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதும் தனிப்பொருத்தம் போலும்! இக்கட்டுரைகளுள் 6 திருக்குறள் ஆய்வாகவே அமைந்திருப்பது புலவர் இ. சுந்தரமூர்த்தி அவர் களின் உன்னதப் பின்னணியைத் துலக்குவதாகும். ஏற்கெனவே ''திருக்குறள் அணிநலம்'' பற்றி ஆய்வு நூல் எழுதிச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக வெளியிட்டுச் சிறப்புப் பெற்றிருக் கும் புலவர் சுந்தரமூர்த்தி அவர்கள் தம் திருக்குறள் ஆராய்ச்சித் தொடர்பாக அவ்வப்போது எழுதிய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். ஏழாவது கட்டுரையாக இலங்கும் ''நடைநலமும்'' அவர்தம் திருக்குறள் ஆராய்ச்சிப் பணியை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

புலவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் கட்டுரைகளில் அவர்தம் வகைதொகை விளக்க அடிப்படை அறிவியல் போக்கு உறுதியாக உள்ளது உவப்புக்கு உரியது. ''தொட்டனைத் தூறும் மணற்கேணி'' போல மேலும் மேலும் உழைக்க உழைக்க அவர்தம் ஆராய்ச்சித் திறன் வளர்பிறை ஆகும் என்பது தெளிவு; திண்ணம்.

புலவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் புலமை அகலமான தாகவும் ஆழமானதாகவும் அமைய அவாவுவது வருங்காலத் தமிழ் இலக்கியத் திறனாய்வுக்கு நல்வாழ்வு தருவதாகும். அகல மான ஆழமான படிப்போடு நடுநிலை விளக்கமும் ஆராய்ச்சியாள னுக்கு அடிப்படைத் தேவை. இப்பண்பும் புலவர் இ. சுந்தர மூர்த்தி அவர்களிடம் பொருந்தியிருப்பது போற்றுதற்குரியதாகும்.

மிக அண்மையாக வெளிவரும் ஆராய்ச்சிகளையே நம் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் முதலில் படிக்கும் முறையை மேற்கொள்ளுதல் பயன்தரும். காரணம் வரலாற்று வழி ஆராய்ச்சி வளர்ச்சியை ஆக்க முனைந்தால் தொடங்கிய இடத்திலேயே நாம் தொங்கிக் கொண்டிருக்க நேரிடும். இன்றைய புதிய கண்ணோட்டங்களைக் காணாமலே கண்மூட நேரிடும். எனவே பார்வையும்கூடப் போர்வையாகாமல் இருப்பதற்கு அண்மையில் தொடங்கிச் சேய்மைக்குச் செல்வதே சிறப்பு எனலாம். இம்முறையிலேயே ஒரு காலத்தில் 'பன்மொழிப் புலவர்' டாக்டர் தெ. பொ. மீ. அவர்கள் முதுகலைத் தமிழ்க் கல்வியைக் கற்பித்ததும் நினைவுகூரத் தக்கது.

புலவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் நூலுக்கு ''வலையும் கலையும்'' என்று பெயர் வைக்கலாம் போலத் தோன்றுகிறது. காரணம் சொல் ஒரு வலை. அருளாளர் வினோபா அவர்கள் இவ்வாண்டு கிருஸ்துமஸ் நாளில் இயம்பியிருப்பதுபோல் இது வலிவற்ற வலையென்றாலும் அதன் வலிவற்ற நிலைகளை அளப்பதே அரியபெரிய செயலாய் உள்ளது. ஆம்! வலியற்ற நிலைமைக்கே அவ்வளவு வலிமை! வலி என்ற சொல்லுக்கு உள்ள பல பொருள்களும் ஈண்டு ஒருங்கே கருதத்தக்கது.

சொல்வலையை சொற்கலையாக்குவது இன்று எல்லாக் கலைகளுக்கும் உரிய ஏற்றமாய் ஆகி வருவது மகிழ்ச்சிக்குரியது. ஒரு காலத்தில் இலக்கியக் கலைக்கே உரியதென்று எண்ணப்பட்ட ஒன்று எல்லாக் கலைகளுக்கும் அடிப்படைத் தேவையாக இருப்பது இன்று உணரப்படுவது உயர்வுக்கு வழி செய்யும். அண்மையில் பாரிசில் நடைபெற்ற உலகப் பேரறிஞர்கள் மாநாடு இன்றைய நூற்றாண்டின் தலையாய தேவை இந்த வெளியீட்டுத் திறம் (communication skill) என்று கருதியிருப்பது கருதத் தக்கது.

புலவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் இந்நூல் இன்னும் பல முதன்மையான நூல்களுக்கு முன்னோடியாக இருக்கட்டும்.

என் நல்வாழ்த்துகள்.

வாழ்த்துரை

தமிழகப் புலவர்குழுத் தலைவர்
மகாவித்துவான்
மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை

இருபதாம் நூற்றாண்டு, தமிழகத்திற்குத் தனிப்பெருஞ் சிறப்பளிக்கும் நூற்றாண்டு. எதனால்? உறங்கிக் கிடந்த தமிழுணர்ச்சி ஓங்கி வளர்வதே காரணம். திருவெவ்வுளரின் பொருளுணராத தமிழர்கள் அதைத் திருவள்ளூர் எனச் சிதைத்து வழங்கினார்கள் என்பதை அறியாது, சிலர் திருவள்ளூர் என்பதே திருவள்ளுவர் என்பதன் முதல் வடிவம் என்று கூறியதையும் யான் அறிவேன். ஆங்கில விழைவு, அடுப்பங்கரையையும் ஆட்கொண்டிருந்த நாளில், திருவள்ளுவர் தமிழகத்தில் கற்றவர் சிலரிடையே கரந்துறை வாழ்வை மேற்கொண்டிருந்தனர்.

தமிழக அரசின் தோற்றம், தமிழரிடையே 'எங்கும் தமிழ்! யாவும் தமிழில்!' என்னும் எக்காளவொலி எழுப்பியதன் பயனே, தமிழகப் பல்கலைக்கழகங்களில் திருக்குறள் ஆய்வுத்துறை முகிழ்த்ததற்குக் கருவியாயிற்று.

தமிழறிஞர் சிலர் திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் பல கோணங்களில் ஆய்ந்து சீரிய விளக்கங்களை நூல் வடிவில் உலகில் உலாவரச் செய்து, தமிழகத்தில் மட்டுமன்றி, தமிழர் கடல்கடந்து வாழும் பிற நாடுகளிலும் தம் புகழ் நிலவத் தொண்டாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் **இ. சுந்தரமூர்த்தியவர்கள் 'சொல்வலை வேட்டுவர் வள்ளுவர்'** என்னும் உள்ளங்கவரும் தெள்ளிய மகுடமிட்டு, திறன்வாய்ந்த திருவள்ளுவரையும் திருக்குறளையும் அதற்குப் **பரிமேலழகர்** கண்ட நல்லுரையையும் பற்றித் திறனாய்வு முறையி னின்றும் பிறழாது ஏழு கட்டுரைகளைத் தீந்தமிழ் நடையில், **தேன்மொழி நூலகம்** வாயிலாக வெளியிட்டுள்ளதைப் பெரிதும் பாராட்டுகிறேன்!

நூலை முற்றும் படித்து, மட்டிலா மகிழ்ச்சியடைந்தேன்! கூர்த்தமதியும் பன்னூற்பயிற்சியும் வாய்ந்து திகழும் நூலாசிரியர் **இ. சுந்தரமூர்த்தி** பல்லாண்டு வாழ நல்வாழ்த்து நவில்கிறேன்!

'பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்' —குறள் 996.

மே. வீ. வே. பிள்ளை

மதிப்புரை

டாக்டர் **சி. பாலசுப்பிரமணியன்**, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்

உலகில் முன்தோன்றி மூத்த குடியாம் தமிழ்க்குடியின் எண்ணங்களும் செயல்களும் செந்தமிழ் இலக்கியங்களில் சிறக்கப் பொறிக்கப் பெற்றுள்ளன. முந்தையர் கனவிலும் நனவிலும் முகிழ்த்த எண்ணங்களின் வெளியீட்டினைச் 'சொல்வலை வேட்டுவர் வள்ளுவர்' என்னும் இந்நூலின்கண் அமைந்துள்ள ஏழு கட்டுரைகளில் எழில்பெறக் காணலாம்.

'சொல்வலை வேட்டுவர் வள்ளுவர்' என்ற முதலாவது கட்டுரையின் தொடக்கமே மொழியின் மாண்பினை முன்னிறுத்தி நிற்பதாயுளது. வள்ளுவரின் சொல்லாட்சியினை வகையுறக் காட்டி, குறளின் சிறுசிறு தொடர்களிலும் அமைந்துள்ள அழகு மாட்சியினையும் ஆழ்ந்த சிந்தனைப் போக்கினையும் தெளிவுறுத்தி, வள்ளுவர்தம் தனியாட்சி காட்டி அதன்வழி அவர்தம் தனிமாட்சியினைப் புலப்படுத்தும் நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலம் போற்றத்தக்கதாம். 'வள்ளுவர் கண்ட வானுலகம்' என்னும் கட்டுரையில், மண்ணகத்தில் வாழும் நெறியான, வரையறையான வாழ்க்கை முறை விண்ணகத்து வாழ்க்கையாகவே மதிக்கப்பெறும் என்று தெளிவுறுத்தும் அருமைப்பாடு சிந்தைக்கினிய செய்தியாம்.

'பரிமேலழகர்' நூலாசிரியரின் போற்றுதலுக்கு உரியவராய் விளங்குவதோடு ஆய்வுக்குரியவராகவும் அமைந்துள்ளார். 'பரிமேலழகர் உவமை விளக்கம்', 'பரிமேலழகர் மேற்கோள் விளக்கம்', 'பரிமேலழகரின் பல்கலைப்புலமை' ஆகிய மூன்று கட்டுரைகளும் அரிய ஆராய்ச்சி விருந்துகளாகும். எடுத்துக் கொண்ட பொருளை ஏற்றமும் எழிலும் புலப்பட விளக்குதற்கு உவமைகள் உறுதுணை செய்கின்றன. அவற்றினையெல்லாம் விளக்கக் காட்டி விளங்கவைக்கும் ஆசிரியர் முயற்சியும் உழைப்பும் மனம் மகிழச் செய்யும் மாண்புடைத்தாம். அடுத்து, பரிமேலழகர்

சங்க இலக்கிய நூல்கள், காப்பியங்கள், கீழ்க்கணக்கு நூல்கள், இலக்கண நூல்கள் முதலான பலதுறை நூற்கடல்களிலும் மூழ்கிக் குளித்தவர் என்பதனைச் சான்றுகள் தந்து நிறுவிச் செல்லும் நூலாசிரியரின் நுவல்திறம் உள்ளம் அள்ளும் நீர்மைத் தாகும். பரிமேலழகரின் வடநூற்புலமை, அறநூற் பயிற்சி, அரசியலறிவு, மருத்துவப் புலமை, இசை நூற் புலமை, சமய நூலறிவு ஆகிய அறிவுப் புலமைப் பேற்றினைக் கற்பவர் மனங் கொளக் காட்டிச் செல்லுங் கலையில் ஆசிரியர் வெற்றி கண்டிருப்பது வெளிப்படை.

திருக்குறளில் தோய்ந்து தோய்ந்து நயந் தேர்ந்து தெளிந்த நாமக்கல் கவிஞரின் புலமை உள்ளத்தினைத் 'திருக்குறளும் நாமக்கல் கவிஞரும்' என்னும் ஆறாவது கட்டுரை அழகுறப் புலப்படுத்துகின்றது. இறுதிக் கட்டுரை 'நடைநலம்' பற்றியதாகும். நடை நயம் உணர்ந்த சான்றோர்தம் நெறியினை மேலை நாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் காட்டும் இலக்கணத்தோடு பொருத்தி உரைத்துப் பார்த்து உயிர்ப்பொருளை, உண்மைப் பொருளை உணர்த்தி நிற்கிறார் ஆசிரியர்.

இவ்வாறாக ஆய்வாளர்க்கு அரும்பயன் விளைக்கும் இந் நூலாசிரியர் புலவர் இ. சுந்தரமூர்த்தி, எம். ஏ., அவர்கள் பழகு தற்கு இனிய பண்பாளர்; ஆழ்ந்த புலமையும் விரிந்த நோக்கும், பொறுமைப் பண்பும் அடக்கவுணர்வும் அமைந்து திகழ்பவர். இலக்கியக் கடலில் மூழ்கி முத்தெடுக்குந் திறஞ்சான்றவர். நல்லறிவும் நல்லாற்றலும் நிறைந்துகாணும் இந்நூலாசிரியரின் இவ்வினிய நூல் அனைவர்க்கும் பயன் நல்கும் தகுதி வாய்ந்தது. இலக்கிய உணர்வும் ஆராய்ச்சி வேட்கையும் நிறைந்த தமிழுலகம் இந்நூலினை ஏற்றிப் போற்றுவதாக!

தி. பாலசுப்பிரமணியன்

நுழைவாயில்

தமிழிலக்கியச் சோலையின் வாடாமலர் வள்ளுவம். அறிஞர் பலர் பல நூறு ஆண்டுகளாகப் பல்வேறு கோணங்களில் ஆய்ந்தாய்ந்து கூறுவதற்குரிய அருஞ்செல்வத்தைப் பெற்ற கருத்துக் களஞ்சியம் திருக்குறள். இதனை, 'மனித இனத்தின் சிந்தனையில் முகிழ்த்த சிறப்பும் தூய்மையும் வாய்ந்த இலக்கியப் பெட்டகம்' என்பர் அறிஞர் ஏரியல்.

முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்த் திகழும் திருக்குறள் தமிழ் இலக்கியங்களில் ஒரு தனி இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. யாப்பு, சொல், பொருள் முதலாய பல்வேறு திறத்தால் பயில்தொறும் இன்பம் நல்கும் திருக்குறளை யாத்த திருவள்ளுவர் தமிழ்கூறு நல்லுலகில் சொல்வலை வேட்டுவராகத் திகழ்கிறார். இந்நூலின் முதற் கட்டுரை வள்ளுவர் எங்ஙனம் சொல்லேருழவராக, சொல்வலை வேட்டுவராகத் திகழ்கிறார் என்பதனை ஆராய்கிறது. இரண்டாம் கட்டுரை வள்ளுவர் கண்ட வானுலகத்தைப் பற்றியும், அடுத்த மூன்று கட்டுரைகளும் திருவள்ளுவரை ஆராய்ந்த பரிமேலழகரைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன. உரையாசிரியர் உலகில் தனிச் சிறப்பைப் பெற்றுத் திகழும் பரிமேலழகரின் உவமை விளக்கம், மேற்கோள் விளக்கம், பல்கலைப் புலமை பற்றிய செய்திகள் இக் கட்டுரைகளின் பொருளாகும்.

வளர்ந்துவரும் இன்றைய நடுநிலைத் திறனாய்வு உலகின் புலமை மறுப்புகளுக்கும், போற்றுதல்களுக்கும் உரியவர் பரிமேலழகர். பரிமேலழகரின் கருத்துகளை கூர்ந்தாராய்ந்த நாமக்கல் கவிஞரின் திருக்குறள் ஆராய்ச்சி நோக்கையும் போக்கையும் ஆராய்வது ஆறாம் கட்டுரை. இறுதிக் கட்டுரையான நடை நலம் கவிஞரும் பிறரும் சொல்வலை வேட்டுவராகத் திகழ்வதற்குரிய அடிப்படைக் கொள்கைகளை ஆராய்கிறது. இந் நூற்கருத்துகள் முடிந்த முடிவுகள் அல்ல. ஆய்வின் முடிவை அணுகும் ஒரு முயற்சியே.

இந் நூற்கட்டுரைகள் அனைத்தும் பல்வேறு ஆய்வு இதழ்களில் வெளியானவை. இவற்றைத் தொகுத்து நூல்வடிவில் வெளியிட்டுக் கொள்வதற்கு உரிமை வழங்கிய சென்னைப் பல்கலைக் கழக மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கும், சீர்சால் ஆட்சிக் குழுவினருக்கும், பதிவாளர் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

தமிழாய்வையே வாழ்வாகக் கொண்டு விளங்கும் எங்கள் அன்புக்குரிய பேராசிரியர் சென்னைப்பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத்தலைவர் 'செந்தமிழ் இலக்கியச் செம்மல்' டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியருளியுள்ளார்கள். என்னை ஆய்வுநெறியில் வழிப்படுத்தி அறிவுச் செல்வம் வழங்கும் அவரை நன்றியறிதலோடு வணங்குகின்றேன். என்றும் நல்வாழ்த்தை வேண்டுவேன்.

வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்த முதுபெரும் புலவர், தமிழகப் புலவர் குழுத்தலைவர் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கும், மதிப்புரை வழங்கியருளிய துணைப்பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியது.

வாழ்வின் பணிகளையும், பொறுப்புகளையும் தங்களுடையதாகச் சுமந்து கொண்டு என்னை இலக்கிய வாழ்வில் ஈடுபடுத்தியவர்கள் என் அருமைத் தந்தையாரும் என் அன்பு அண்ணன் திரு. இ. ஞானபண்டிதன் அவர்களும் ஆவர். இவர்கள் என்னை ஊக்கியிராவிட்டால் என் கனவுகள் கனவுகளே. இவர்களை வணங்கி மகிழ்கின்றேன். வாழ்வுத்துணை திருமதி வசந்தா M.A., B. Sc., B. Lib. Sc., Cert. in German., நூலுக்கும் துணையானாள். வாழ்த்துக்கள்

இந்நூலினை அழகுற ஆக்கித்தந்த மக்கள் அச்சகத் தோழர்களுக்கும், தோழர் திரு. இராசுகுமார், புலவர் கோவேந்தன் ஆகியோருக்கும் என் நன்றி. நூல் உருவாகத் துணைபுரிந்த நண்பர் வ. செயதேவன் அவர்கட்கும் என் நன்றி உரியது.

இ. சுந்தரமூர்த்தி

உள்ளுறை

1

சொல்வலை வேட்டுவர் வள்ளுவர்

மொழி

விரிந்த உலகத்தை ஒன்றுபடுத்தும் ஒருமைப்பாட்டுணர்வின் உயிர்நிலையாகத் திகழ்வது மொழியாகும். எண்ணத்தாலும் எழுத்தாலும் உலகை அளக்கும் ஒப்பற்ற கருவியும் மொழியே ஆகும். மாந்த இனத்தின் எண்ணங்களை எளிதாக உணர்த்தும் மொழியின் இன்றியமையாப் பணி எண்ணுந்தோறும் வியப்பினையே விளைக்கும். மொழி இல்லையேல் இன்றைய உலகு இத்துணையளவு விரைவாகவும் விளக்கமாகவும் செயல்படுமா என்பது ஐயமே.

மொழி நடை

இத்தகைய சிறப்பு வாய்ந்த மொழியினை - மொழிநடையினை, நன்கு எடுத்தாளும் திறன் பெற்றவர் ஒருசிலரேயாவர். எண்ணிய எண்ணியாங்கு உணர்த்தும் திறனும், உணர்திறனும் அறிவு நிலையின் இரு கண்களாகும். இவ்விரு திறனும் கைவரப்பெற்ற சான்றோரே 'நுண்பொருள் அறிவு பெற்றவர்' எனத் திருக்குறள் கூறும்.[1] அறிவுத் திறனை அழகுத் திறன் மிளிர உணர்வார் இனிது உணருமாறு விளக்குவதுதான் ஆசிரியரின் நல்ல மொழிநடையாகும்.

சொல்லும் நடையும்

'பொருத்தமான இடத்தில் பொருத்தமான சொற்களைப் பொருந்த உரைப்பதே நடையின் இலக்கணம்' என்பர் அறிஞர்

1. குறள், 424.

ஸ்விப்ட். எனவே சொற்களைத் தக்கவாறு தேர்ந்தெடுத்து ஆளுவது தனிச்சிறப்புடையதாகும். கவிஞர் சொற்களில் எத்துணை அளவு ஈடுபாடு உடையவராய் விளங்கினர் என்பதை 'தெரிதீங்கிளவி', 'தெளிதீங் கிளவி', 'அமிழ்தத்தன்ன அந்தீம் கிளவி', 'செவி நுகர் கனி', 'செஞ்சொற்கவியின்பம்', 'செஞ்சொற் புலவன்', 'அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர்', 'சொல்வலை வேட்டுவன்', 'சொல்லேருழவர்' முதலான பழந்தமிழ்ச் சொற்கள் நன்கு எடுத்துக்காட்டும்.[2]

வள்ளுவரின் சொல்லாட்சி

சங்கப் புலவர்கள் சொற்களை மிகச் செறிவாகவும், பொருள் சிறக்கவும் பயன்படுத்தியதைப்போலவே வள்ளுவரும் தம்முடைய குறட்பாவில் பொருட்செறிவு மிகுந்த, சொற்களையும் தொடர்களையும்படைத்துள்ளார். சிறுசிறு தொடர்கள் படிப்பார் மனத்துள் நன்கு பதியத்தக்கனவாய் அமைந்துள்ளன. அடைமொழித் தொடர் நடைச்செறிவுக்கும் பொருள் விரிவுக்கும் காரணமாய் அமைந்துள்ளன. ஒரே குறளில் அவர் எண்ணியெண்ணிச் சொற்களைத் தொகுத்தவிதம் இன்பமூட்டுவன; உவம உருவக நடைகள் உணர்த்தும் கருத்தைத் தெளிவாக்குவன. எனவே நாம் வள்ளுவருடைய குறள் கேட்பாரைப் பிணிக்குந்தகையவாய்த் திகழ்கிறது. வள்ளுவரோ தம்நூல்வழி 'சொல்லேருழவராக'— 'சொல்வலை வேட்டுவராக'த் திகழ்கிறார்.

குறளில் சிறுசிறு தொடர்கள்

வள்ளுவரின் குறட்பாக்களில் செறிவுவாய்ந்த சிறுசிறு தொடர்கள் பல இருப்பதைக் காண முடியும். அவை உணர்ச்சியூட்டும் கட்டளை வாக்கியங்கள் போலத் திகழ்கின்றன:

அறததான வருவதே இனபம் (39)

மஙகலமெனப மனைமாட்சி (60)

2, குறுந். 250; நற். 164; குறுந். 206; அகம். 3; நற. 22; ஐங். 490, 499; கம்ப. பால. நாட். 51, மிதிலை. 28; . நள. 23; புறம். 252; குறள், 827.

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் (65)

யாகாவாராயினும் நாகாக்க (127)

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் (156)

ஒத்தது அறிவான உயிர்வாழ்வான் (214)

இத்தகைய சிறுதொடர்கள் வள்ளுவருடைய ஆழ்ந்த சிந்தனையின் தூய வெளிப்பாடுகள் என்பது தேற்றம். இவை ஆசிரியரின் மிகத் தெளிவான எண்ணவோட்டத்தைக் காட்டும் நுட்பமான தொடர்கள் எனலாம். இவர் ஒவ்வொரு பொருள் குறித்தும் ஆழ்ந்து எண்ணியெண்ணி ஓர் உறுதியான முடிவுக்கு வந்தபின்னரேயே - சொற்களை மிகச் சிறந்த பொருட்செறிவோடு இவ்வாறு எடுத்தாண்டிருக்க முடியும் என எண்ணத் தோன்றுகிறது. கலித்தொகைப் பாடலொன்றிலும் இவ்வாறு அழகிய நயமிகு சிறு சிறு தொடர்கள் அமைந்திருப்பது குறளுடன் ஒப்புநோக்கத் தக்கதாய் இலங்குகின்றது.

பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அறிவு எனப்படுவது பேதையார் சொல்நோன்றல்
நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை. (கலி.133)

எனவே அறநெறிகளைச் சுட்டும் கட்டளைச் சொற்களான இத்தகைய சிறுதொடர்கள் செறிவோடும், அழகோடும் விளங்குகின்றன; எண்ணவூட்டச் சக்திகளாகவும் இலங்குகின்றன எனலாம்.

அடைமொழிநயம்

ஆசிரியர் பண்படுத்திப் பண்படுத்திப் பயன்படுத்தும் சொற்களாலும், அடைமொழிகளாலுமேயே அவருடைய சொல்லாட்சிச் சிறப்பை அறிய முடியும். மிகப் பெரிய கருத்தையும் அடைமொழியுள் அடக்கிக் கூறும் கவிஞனின் திறம் பெரிதும் வியத்தற்குரியது. வள்ளுவரின் அடைமொழிச் சொற்கள் சுருங்கிய குறள் யாப்பிற்குப் பெருவிளக்கங்களாக அமைகின்றன.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. (61)

என்னும் குறட்பாவில் 'மக்கட்பேறு' என்று சுட்டுவதிலும் 'அறி வறிந்த மக்கட்பேறு' என்று கூறுவதில் அமைந்துள்ள பொருள் நயமும், செறிவும் உன்னத்தக்கன. இவ்வாறே 'பழிபிறங்காப் பண்புடை மக்கள்' என்று கூறுவதிலும் நயமும் செறிவும் அமைந் திருத்தல் காண்க. 'மறனிழுக்கா மானம்' (384), 'நுண்மாண் நுழை புலம்' (407), 'மாண்பிறந்த மானம்' (432), 'மாணு உவகை' (432) 'நெடும்புனல்' 'கால்வல் நெடுந்தேர்' (496) முதலான அடைமொழிச் சொற்கள் பெரிதும் பொருள் பொதிந்தவை.

வள்ளுவரின் தனியாட்சி

வள்ளுவர் தாம் கூறவந்த கருத்துக்களைத் தொகுத்தும் பகுத் தும் ஒப்பீடு செய்துகூறுவதுபோலப் பல இடங்களில் அவருடைய மொழிநடை அமைந்திருப்பது காணத்தக்கது. கொடிய வறுமையைக் கூற விழைந்தவர் ஏனைய 'இல்லாமை'களோடு வறுமையையும் ஒப்பிட்டு 'இன்மையுள் இன்மை' என்று கூறுவர் (53). செல்வங்கள் எல்லாரிடத்தும் - நல்லாரிடத்தும் அல்லா ரிடத்தும் அமைகின்றன. அச் செல்வ வகையின பலவாம். இவற் றுள் எது சிறந்தது என்பதனை ஒப்பிட்டு,

> அருட்செல்வம் செல்வதுள் செல்வம் பொருட்செல்வம
> பூரியார் கண்ணும் உள. (241)

என்னும் குறளால் செல்வத்துள் செல்வத்தைக் கூறுவர்.

இவ்வாறே 'அவா என்னும் துன்பத்துள் துன்பம்' 'இன்பத் துள் இன்பம் விழையாதான்' 'பேதைமையுளெல்லாம் பேதைமை' 'அறிவின்மை இன்மையுள் இன்மை' என்று ஒப்பீடு முறையில் கூறுவது உளத்தில் நன்கு பதியுமாறு அமைகின்றது. இங்ஙனம் கூறும் முறையே வள்ளுவருடைய சொல்லாட்சிக் கூறுகளுள் தனித்தசிறப்புடையது எனலாம்.

வள்ளுவரின் அரிய சொல்லாட்சி

சொற்கள் எண்ணத்தின் கருவிகளாய்த் திகழ்பவை. எனவே அவை எத்துணை அளவு கூர்மையாகவும் திட்பமாகவும் விளங்கு கின்றனவோ அத்துணை அளவு எண்ணத்தின் வெளிப்பாடும் திட்ப

மாகவும், நுட்பமாகவும் அமையும். வள்ளுவரின் சொற்கள் அத்தகையனவாய் அமைந்து அவர்தம் சிந்தனையாற்றலை இனிது புலப்படுத்துகின்றன.

கூடா நட்பினை விளக்குவதற்கு வள்ளுவர் அரிய பெரிய கருத்து விளக்கங்களைச் சிறுசிறு சொற்களால் நுட்பமாகக் கூறுகின்றார். வில்லின் வணக்கத்தால் விளையும் தீமையைப் போலவே பகைவரின் சொல்வணக்கத்தாலும் தீமை விளையும் என்பர். இதனை வள்ளுவர்,

> சொல்வணக்கம் ஒன்னாகண் கொள்ளற்க வில்வணக்கம்
> தீங்கு குறித்தமை யான் (827)

என்னும் குறளால் கூறுவர். 'சொல்வணக்கம்', 'வில்வணக்கம்' என்னும் இரு அரிய சொற்களையும் வள்ளுவர் 'வணக்கம்' என்ற சொல்லோடு பொருத்திப் படைத்திருப்பது எண்ணியெண்ணி இன்புறற்குரியது. ஒரே குறட்பாவினுள் இத்தகைய சொற்களை வள்ளுவர் பெரிதும் எண்ணியெண்ணித்தான் பெய்திருக்க முடியும். இத்தகைய சொற்கள் இன்னும் பல குறளகத்து அமைந்து படிப்பார்க்குப் பேரின்பம் விளைக்கின்றன.

மனத்தூய்மை	—	இனத்தூய்மை	(458)
மனநலம	—	இனநலம்	(458)
துணைநலம்	—	வினைநலம்	(651)
வினைத்திட்பம்	—	மனத்திட்பம்	(661)
வில்லேருழவர்	—	சொல்லேருழவா	(872)
மனைவிழைவார்	—	வினைவிழைவார	(901)
முகைமொக்கு	—	நகைமொக்கு	(614)

நடைமாற்றம்

நடைவேறுபாடுகளுக்குரிய காரணங்களாகத் திறனாய்வாளர்கள் — ஆசிரியர், காலம், நோக்கம், கருத்து, இடம், மக்கள் - ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.[3] கூறவந்த கருத்துக்கேற்ப நடையும் மாறுபாடு அடைவது தெளிவு. குறள்யாப்பில் இத்தகைய நுட்பமான மாறுபாடுகளுக்கு அதிகம் இடமில்லை

3. Ghosh, Prof. D. N., "Principles of Literary Criticism" pp. 144 Kitab Ghar., Gwaliar, 1970.

யாயினும் வள்ளுவர் காமத்துப்பாலில், நாணுத்துறவுரைத்தல் அதிகாரத்தில் தலைவன் கூற்றாகவும், தலைவி கூற்றாகவும், கூறும் குறட்பாக்களில் — நடைமாற்றம் அவருடைய சொற்களில் நுட்பமாக அமைந்து விளங்குவதைக் காணலாம். நாணுத் துறவுரைத்தல் என்னும் அதிகாரத்தில் காமத்துன்பத்தால் தலைவன் புலம்பும் முதல் ஏழு குறட்பாக்களிலும் அவனுடைய துடிப்பு, ஆற்றாமை எதையும் செய்யத் தூண்டும் - மடலேறவும் தூண்டும் - அவனுடைய வெறி உள்ளம் முதலான வற்றை வள்ளுவருடைய சொற்கள் நன்கு படம் பிடித்துக் காட்டு கின்றன.

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன
காமுற்றார் ஏறும மடல் (1133)
மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் (1136)
காமம் உழந்து வருந்ினாக்கு ஏமம
மடலல்லது இல்லை வலி (1131)

என்னும் குறட்பாக்களில் தலைவனின் 'ஆண்மைப்புலம்பலைக்'காண முடியும். அடுத்து வரும் குறட்பாக்களில் தலைவியின் நாணத்தைத் துறந்ததால் ஏற்பட்ட நாணத்தையும், அமைதியாக வருந்தும் அவளுடைய உள்ளப்போக்கையும் வள்ளுவர் நன்கு புலப்படுத்தி யுள்ளார். காமம் மன்றத்திலும் வெளிப்படுவதைத் தலைவி புலம்பிக் கூறுவது இரங்கத்தக்கதாயுள்ளது.

நிறையரியர் மன்அளியர் எனனாது காமம
மறையிறந்து மன்று படும் (1138)

என்பது தலைவியின் கூற்று. இங்குப் 'பெண்மைப் புலம்பலைக்' காண முடிகிறது. கூறும் சொற்களால் இருவேறுபட்ட மனநிலையையும் வள்ளுவர் நுட்பமாகக் காட்டுவது குறிப்பிடத் தக்கதாம்.

உவம உருவகத் தொடர்கள்

வள்ளுவர் தாம் உணர்த்த விரும்பும் சிக்கலான அறநெறிக் கருத்துகளை அனைவரும் எளிதில் புரிந்து கொள்வதற்காக உவமை களையும், உருவகங்களையும் இயலும் இடங்களிலெல்லாம் பயன் படுத்தியுள்ளார். கற்பனை வண்ணத்தில் குழைத்து அணியென்னும்

மெருகிட்டுத் தந்துள்ள குறட்பாத் தொடர்கள் பயில்தொறும் இன்பம் விளைப்பன.

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடுநேர்' (551),'என்பிலதனை வெயில் போலக்காயும் (77) 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல' (151) 'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து' போன்ற உவமைத் தொடர்களும், 'இரவென்னும் ஏமாப்பில் தோணி' (1068), 'அருளென்னும் அன்பீன் குழவி' (757), 'காமக் கடும்புனல்' (1134), 'நாணொடு நல்லாண்மை என்னும் புணை' (1134) போன்ற உருவகத் தொடர்களும் அழகும், பொருள் செறிவும் பொருந்தியன.

இவற்றில் அமைந்து கிடக்கும் உவம, உருவக நயங்களால் குறட்பாக்கள் இனிமையும், தெளிவும் பெற்று விளங்குகின்றன. அணிநயம் ஆசிரியர் முயன்று தேடாமல் தாமாகவே இயல்பாக அமைய வேண்டும் என்பர்.[4] குறட்பாக்களிலுள்ள அணிநயத் தொடர்கள் அத்தகையவையே.

சொல்லேருழவர்

வள்ளுவரின் சொல்லாட்சித் திறத்தாலும், பொருட்டிறத் தாலும்தான் அவர் யாத்த நூல் உலகம் புகழும் பேரிலக்கியமாகத் திகழ்கிறது. 'என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்'[5] விளங்குகின்றது. பொருளாலும், ஓசையாலும் சிறப்புப் பெற்ற சொற்களை வள்ளுவர் உணர்ந்து பயன்படுத்துவதால்தான் அவர் நூல் பயில் தோறும் நயம் பயக்கிறது. எனவேதான் 'சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லும் வல்லார்'[6] - வள்ளுவர் இலக்கிய உலகில் 'சொல்வலை வேட்டுவராக' இலக்கிய விளை நிலத்தில் 'சொல்லேருழவராக'த் திகழ்கிறார்.

4. Lyon, P. H. B., The Discovery of Poetry, P. 192, 193, Edward Arnold, London, 1932.

5. திருவள்ளுவமாலை, 3.

6. ,, 13

2

வள்ளுவர் கண்ட வானுலகம்

தோற்றுவாய்

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து ஆழ்ந்தகன்ற அறிவினராயும் அருள் பழுத்த நெஞ்சினராயும் விளங்கியவர் வள்ளுவப் பெருந்தகை. இதனை அவர்தம் நூலும் அவரருளிய கருத்துரைகளுமே நன்கு நிலை நாட்டும். அவரருளிய கருத்துரைகள் அவர் வாழ்ந்த காலத்தை நமக்குக் காட்டும் ஓவியங்கள். உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உறையும் வள்ளுவர், மன்பதை மாந்தர் அனைவரும் அறமும் அன்புமுணர்ந்து ஒழுக்கமும் உயரிய வாழ்வும் பெற்று வாழ ஒப்பற்ற நூலைப் படைத்தார். அவர்தம் நூலில் இல்லாத செய்திகளே இல்லை எனலாம்.

> எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
> இல்லாத எப்பொருளும் இலலையால் [1]

என்னும் மதுரைத் தமிழ் நாகனாரின் அமுத மொழியே இதற்குச் சான்றும்.

மண்ணகத்து விண்ணகம்

இங்ஙனம் பரந்த பொருளெல்லாம் பாரறிய விரித்துரைத்த வல்லாராகிய வள்ளுவர் உலகியல் வாழ்வு கூறி, உயிரியல் வாழ்வின் வெற்றியைக் காட்டுகின்றார். 'உலகியல் வாழ்வின் வழியாகவே செம்பொருளை அடையலாம்; இல்லறத்தின் வழியாகவே இறை

1. திருவள்ளுவ மாலை, 29.

நிலையைப் பெறலாம்' என்கிறார். மழித்தலும் நீட்டலும் வேண்டாது உலகம் பழித்தவற்றை ஒழித்து வாழ்தலே வாழ்வாங்கு வாழ்தல் என்னும் வலிமை மிகுந்த கருத்தை வையத்திற்கு அளித்தவர் வள்ளுவப் பெருந்தகை.

மண்ணகத்தில் வாழும் நெறியான, வரையறையான வாழ்க்கை முறை விண்ணகத்து வாழ்க்கையெனவே மதிக்கப் பெறும். தானும் இன்புற்று மற்றவரையும் இன்பமடையச் செய்து, அனைத்துயிரிடத்தும் அன்பை வளர்த்து, அருளைப் பெற்றுப் பிறரையும் அத்தகைய அருளைப் பெறுமாறு செய்வதே நல்வாழ்க்கையாம். அருளைக்காண முயல்வோருள் இத்தகையோனே தலைமையானவன். இவர்களைத்தான் வள்ளுவர் 'முயல்வாருள் எல்லாம் தலை' என்று சிறப்பித்துப் போற்றுகின்றார்.

அறங்களை முறையாகப் போற்றி இல்லறத்தை நடத்துபவன் மனிதனேயானாலும் வானுலகத்தில் வாழும் தெய்வத்தைப்போல மக்களால் நன்கு மதிக்கப்படுவான் என்கின்றார் வள்ளுவர்.

> வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும் (50)

என்னும் இக்குறட்பாவே மண்ணகத்தில் விண்ணகத்தைக் காட்ட எழுந்த சிறந்த குறட்பாவாகும். இல்லறத்தானைத் தெய்வ நிலைக்கே உயர்த்தினார் வள்ளுவர்.

திருவள்ளுவர், நபிகள் நாயகம், இராம கிருஷ்ண பரமஹம்சர், வள்ளலார், காந்தியடிகள் மற்றும் உலகில் இன்று அழியாப் புகழ் பெற்று விளங்கும் சான்றோர்கள் அனைவரையும் இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். 'வாழ்வாங்கு வாழ்பவன்' என்ற தொடருள் அமைந்து விளங்குகின்ற விழுமிய பொருள்களை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் உலக வாழ்வினையே தன்னுள் அடக்கிக் கொண்ட பெருமை அக்குறட்பாவிற்கு உரியதாகின்றது.

வானுலகு

நல்வினை தீவினைப் பயனால் உயிர்கள் சென்றடைகின்ற இடம் வானுலகு என்பர். வானுலகு என்பதற்குத் தேவருலகம்

(Celestial world)என்றும், மோட்ச லோகம் (Heaven)என்றும் பொருள் கூறுவர்.ஆயின் வானுலகு புகுதலும் வீடுபேறு பெறுதலும் ஒன்று என்பதனைச் சிந்தித்தல் வேண்டும். 'வானுலகு அடைந்தார்' என்பது இறப்பைச் சுட்டும்; 'வான்கலந்த மாணிக்க வாசக...' என்பது இறைவனோடு இரண்டறக் கலந்த நிலைமையைக் குறிக்கும். இறைவனோடு இரண்டறக் கலக்கும் பரம் பொருள் நிலையே வீடு பேறும். வானுலகம் என்பது இறையவர்களும் தேவர்களும் ஊடாடும் இடம். பொதுவாகக் காணும்போது இரண்டும் ஒன்றே எனக் கருதத் தோன்றும்.

வீடு பேற்றை 'மோக்கம்' (மோட்சம்) எனவும் கூறுவர். சூடாமணி நிகண்டு தேவருலகம், மோக்கம் என்பவற்றைப் பிரித்துத் தனித்தனியே கூறுவதையும் ஈண்டுக் கருதுதல் தகும்.

கேடி லாப வருக்கம்
    கேவலத் தோடு சித்தி
வீடுகை வல்லி யம்மே
    மீளாத கதியே நூலோர்
பாடுநிா வாணத தோடு
    பரகதி சிவமே முத்தி
நீடுமீ ரைந்து மோக்க
    மமுதமு நிகழ்தத லாமே [2]

என மோக்கத்தின் பெயர்களையும்,

உயர்நிலை யுவணை புத்தே
    ளுலகுபொன் னுலகு தானம்
வியனு லகந்து றக்க
    மேலுல கம்வி மானம்
நயனுறு சுவர்க்கங் கற்ப
    நாகம்விண் ணுலகோ டும்பர்
செயமுறு தேவ லோகஞ்
    சிறந்திடும் மீரேழ் பேரே [3]

2. சூடாமணி நிகண்டு, பக். 150. முத்துத்தம்பிபிள்ளை பதிப்பு, நாவலர் அச்சுக்கூடம், 1915.

3. சூடாமணி நிகண்டு, பக். 151.

எனத் தேவருலகத்துப் பெயர்களையும் கூறுகிறது. இதனால் வானுலகும் வீடு பேறும் வெவ்வேறு என்பது நன்கு தெளிவாகும்.[4]

வானுலகு என்பது இந்திரன் முதலிய இறையவர்கள் வாழ்கின்ற இடம்; வானுலகத்தைக் காட்டிலும் வீடு பேறு உயர்ந்தநிலை என்பதில் ஐயமில்லை. திருக்குறள் உரைப் பாயிரமும், "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும்" என இவ்விரண்டையும் தனித்தனியே வேறுபடுத்தி உரைப்பதையும் ஈண்டுக் கருதுதல் வேண்டும். எனவே 'இந்திரன் முதலிய இறையவர் பதம்' வானுலகத்தைக் குறிக்கும் என்றும், 'அந்தமில் இன்பத்து அழிவில் வீடு' அதற்கும் மேலான வீடு பேற்று நிலையைக் குறிக்கும் என்றும் கொள்ளலாம்.

திருக்குறளில் வானுலகம் பெறுமிடம்

வள்ளுவருடைய குறட்பாக்களில் வானுலகம் வான் (50), வானகம் (101), விசும்பு (25), புத்தேளிர் வாழும் உலகு (58), புத்தேள் நாடு (966, 1323), புத்தேள் உலகு (213, 234, 290), மேல் உலகம் (222) என்ற சொற்களால் குறிக்கப்படுகிறது.

அவர் கண்ட வானுலகத்தில் தெய்வங்கள் உண்டு; தேவர்களைப் பற்றிய செய்திகள் உண்டு; இம்மை மறுமை உண்டு; வீடு பேற்றிற்கான வழிவகைகளும் உண்டு; இதற்கு மாறுபட்ட நரகம் பற்றிய குறிப்புகளும் உண்டு. வள்ளுவருடைய நூல் முழுதும் வீடு பேற்றையே வலியுறுத்துகிறது. அறம், பொருள், இன்பம் என மூன்று பாலாகப் பகுத்து வள்ளுவர் கூறியிருந்தாலும் இம்மூன்றிலும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் கூறியுள்ளார்.

4. இவ்வாறே ஆங்கிலத்தில் கூறப்படும் 'Paradise' 'Heaven' என்ற இருநிலைக்கும் வேறுபாடு உண்டு எனபா. உயிர்கள் நல்வினை தீவினைக் கேற்ப Paradise-ல் தங்கி இறுதித் தீர்ப்பு நாளிற்குப் பின்னர் (Dooms day) அதனினும் உயர்ந்த நிலையான 'சொர்க்கம்' அல்லது (Heaven), வீடு பேற்றை அடைகின்றன எனறு கூறுவர்.

பரிமேலழகர் உரைப் பாயிரத்தில், "மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆதலின், துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின் நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்" என்று கூறும்பொழுது வீட்டைத் துறவறமாகிய காரண வகையால் கூறினர் என்று குறிப்பிடுகிறார்.

தொல்காப்பிய உரையாசிரியர் உச்சிமேற் 'புலவர்கொள் நச்சினார்க்கினியரும், "வள்ளுவரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்தலால் வீடு பேற்றிற்கு நிமித்தம் கூறினார்" என்று கூறுவர்.[5] மேலும் பின்வரும் பாடல்களும் வள்ளுவர் பெருமான் எவ்வெவற்றைப் பாடினார் என்பதனை நன்கு தெளிவுறுத்துவனவாம்.

அறன் அறிந்தேம் ஆன்ற பொருள் அறிந்தேம் இன்பின்
திறன் அறிந்தேம் வீடு தெளிந்தேம்-மறன் எறிந்த
வாளாரா நெடுமாற வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனஎல்லாம் கேட்டு.[6]

(கொடி ஞாழல் மாணிபூதனார்)

இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும
செம்மை நெறியில் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றின் நானகின விதிவழங்க வள்ளுவனார்
பாடினர் இன்குறள்வெண் பா.[7]

(இழிகட் பெருங்கண்ணனார்)

இப்பாடலின் கருத்தும் இவற்றைப்பாடிய புலவர்களின் உள்ளமும் வள்ளுவர் எந்தெந்தப் பொருள்களைப் பாடினார் என்பதனை நமக்கு நன்கு காட்டும். திருக்குறளை நன்கு ஓதிஓதி உணர்ந்த

5. தொல். எழுத்து. நச்சினார்க்கினியர் உரை-சிறப்புப் பாயிரம், பக். 10., கழகப்பதிபபு-1961.

6. திருவள்ளுவமாலை, 50.

7. திருவள்ளுவமாலை, 40.

இப்பெரியார்கள் வீடுபேற்றைக் கூறுவதே[8] குறளின் உட்கிடக்கை எனக் கருதினர்.

வள்ளுவர் வானுலகத்தைக் கூறக்காரணம்

பெரும் புலவர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த அல்லது உணர்ந்த, தாம் அறிந்த செய்திகளைச் சொல்லப் பெரிதும் விழைவர். இது இயல்புங்கூட. தாம் வாழ்ந்த காலத்துச் செய்திகளில் பல கவிஞர்களுடைய படைப்புக்களில் அறிந்தோ அறியாமலோ இழையோடுவதைக் காணலாம். சங்க நூல்கள் சங்க கால வாழ்வினை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. அவர்களுடைய படைப்புக்களுக்கு நிலைக்களனாய் இருப்பவை அக்காலச் சமூகமும் அக்கால மக்களின் பழக்க வழக்கங்களும் கொள்கைகளும் எண்ணங்களுமேயாம். இவைதாம் கவிஞர்களை உருவாக்குகின்றன எனலாம். எனவேதான் கவிஞர்கள் காலத்தால் உருவாக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகின்றனர் போலும்.

சங்க நூற் கருத்துக்களுக்கும் திருக்குறட் கருத்துக்களுக்கும் மிகுந்த வேற்றுமையின்மையையும், முரண்பாடின்மையையும் அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நன்கு தெளியலாம். சங்க கால மக்கள் தெய்வம், ஊழ், மறுபிறப்பு, வீடுபேறு, சடங்குகள், வேதங்கள், வேள்விகள், நரகம் முதலியவற்றில் நம்பிக்கைகொண்டு வாழ்ந்தனர் என்பது சங்கநூற்பாக்களால் அறியப்படும் உண்மையாகும். வள்ளுவருடைய குறட்பாக்களும் இத்தகைய செய்திகளை நமக்குத்தருகின்றன. சங்க காலத் தமிழர் வழிபாட்டில்[9] காணப்

8. மாமூலனார், தொடித்தலைவிழுத்தண்டினார், நரிவெரூஉத்தலையார் முதலிய புலவர் பெருமக்கள் பாடிய பாடல்களும் இககருததையே கூறுவன. திருவள்ளுவமாலைப் பாடல்கள் : 8, 22, 33.

9. திருமாலின் அவதாரத்தையும் அருஞ்செயலையும் பரிபாடல் கூறும்; இராமன் பற்றிய குறிப்புக்களைப் புறநானூறும் அகநானூறும் அறிவிக்கின்றன 'மாயோன் மேய காடுறை யுலகம்' (தொல். அகத். 5) எனத் தொலகாப்பியம் கூறும். இந்திரன பற்றிய செய்திகளைச் சிலம்பும் மேகலையும் கூறும். இந்திர விழாக் கொண்டாடும் வழக்கத்தை ஐங்குறுநூறும் 'இந்திர விழவில் பூவின் அனன' (ஐங்குறு. 62) எனக் கூறுகிறது. கலித் தொகை, திருமுருகாற்றுப்படை ஆகியவற்றிலும் இந்திரனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. காமனைப் பற்றிய செய்திகளைக் கலித்தொகையிலும் பரிபாடலிலும் காணலாம.

பட்ட திருமால், இந்திரன், காமன் ஆகியோர் பற்றிய குறிப்புக்கள் குறட்பாவில் காணப்படுகின்றன.

திருக்குறள் கூறுகின்ற வானுலகு பற்றிய கருத்துக்கள் சங்க நூலிலும் உள. 'உயர்ந்தோர் உலகம்',[10] 'புத்தேள் உலகம்',[11] 'வாரா உலகம்',[12] 'தேவர் உலகம்',[13] 'உயர்நிலையுலகம்'[14] 'தொய்யா உலகம்',[15] என்பன சங்க நூற்கள் வானுலகத்தைக் குறிக்குஞ் சொற்களாம். மலைபடுகடாம் வீரமரணம் எய்தியவர்களை,

> தொலையா நல்லிசை உலகமொடு நிற்ப [16]

என்று கூறும்.

இத்தகைய கருத்துக்களும் மக்களுடைய நம்பிக்கைகளும் அவ்வக் காலங்களில் தோன்றிய பெரும் புலவர்களின் படைப்பில் காணப்படுவது போலவே வள்ளுவருடைய படைப்பிலும் இவை விளங்குவதைக் காணலாம்.

இனித் திருக்குறளில் காணப்பெறும் வானுலகம் பற்றிய குறிப்புகள், தெய்வங்களைப் பற்றிய செய்திகள் எவ்வாறு கூறப் பட்டுள்ளன என்பதைக் காண்போம்.

வானுலகு அடைதற்குரியோர்

இல்லறத்தை நல்லறமாக நடத்தும் எவரும் துறக்க உலகிற்கு உரியோரே. வாழ்வதற்குரிய நெறிகளையும் முறைகளையும் கைக் கொண்டு எவ்வகை அறங்களினின்றும் பிறழாது வாழ்கின்றவர் அத்துறக்கத்திற்கு உரியவர் என்பதில் ஐயமில்லை.

> வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும். (50)

10. புறம். 174, 213.
11. புறம். 22.
12. புறம். 341.
13. புறம். 228.
14. ஐங்குறு. 442, குறுந். 361.
15. புறம். 214.
16. மலைபடுகடாம், வரி :70.

என்கிறார் வள்ளுவர். 'இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் வையத்தின்கண் வாழ்வான் வையத்தானே யெனினும் வானின்கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்' என்று இக் குறட்பாவிற்குப் பரிமேலழகர் உரை எழுதுகின்றார்.

பெண்டிர் தம்மை எய்திய கணவனை வழிபடுதல் எஞ்ஞான்றும் சிறப்புத் தருவதாம். கணவனைப் போற்றிக் கடமையைச் செய்யும் மகளிர் பெருஞ் சிறப்பை உடைய மேலுலக வாழ்வைப் பெறுவர் என்பதை,

> பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழும் உலகு (58)

என்னும் குறட்பா நன்கு எடுத்துக்காட்டும். பரிதியார் 'இதற்குச் சான்றாகக் கண்ணகி முதலானோரைக் கண்டு கொள்க' என்பர்.

மேலும் அடக்கம் ஒருவனை அமரர் உலகத்துச் செலுத்தும்[17] என்று வள்ளுவர் கூறுவர். சாவா அமிழ்தமாயினும் விருந்து புறத்திருக்கத் தான் உண்ணாதது தமிழ் நாகரிக முதிர்ச்சிக்கோர் தனிச் சான்று. இத்தகையோருக்கும் துறக்கம் உண்டாம். வந்த விருந்தினரைப் போற்றி இனிவரும் விருந்தினரை அன்புள்ளத்தால் வரவேற்கக் காத்திருப்பானை வானுலகத்தவரும் வரவேற்கக் காத்திருப்பாராம்.

> செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
> நல்விருந்து வானத் தவர்க்கு (86)

என்பது வள்ளுவர் வாக்கு.

எனவே இல்லறத்தை இனிது நடத்துபவர்களும், கணவனைத் தெய்வமென வழிபடுவோரும், விருந்தோம்பும் பண்பு சிறக்கப் பெற்றோரும் வானுலகத்திற்குரியோராம். வானுலகத்திற்கு உரியவர்களாக வள்ளுவரால் குறிப்பிடப் பெறும் இம் மக்கள் அனைவரும் வாழ்விலே உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்தவர்களாதல் வேண்டும்.

17. குறள், 919.

நெய் பயந்த பால்போல் ஒழுக்கத்தவரே
பரிவில்லா மேலுலகம் எய்து பவர் [18]

என்று அறநெறிச்சாரம் கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத் தகும்.

வள்ளுவர் கூறும் தெய்வங்கள்

எங்கும் எதனினும் தங்கியிருப்பதற்கு 'இறை' என்றும் கடந்தும் உள்ளும் இருப்பது கடவுள் என்றும் கூறுவர். வள்ளுவருடைய குறட்பாவில் 'கடவுள்' என்ற சொல் யாண்டும் காணப்படவில்லை. ஆயின் 'தெய்வம்' என்ற சொல்லையும்,[19] 'இறைவன்' [20] என்ற சொல்லையும் குறிப்பிடுகின்றார்.

குறளின் முதல் அதிகாரத்தில் கூறப்படும் கருத்துகள் அனைத்துமே கடவுளின் பொதுத்தன்மையினையும் இயல்பினையும் குறிப்பனவாம். அறிவும் அறமும், ஆற்றலும் இன்பமும் ஆகிய அனைத்திற்கும் முதன்மையானவன் இறைவன். கடவுள் வாழ்த்தில் வள்ளுவர் இறைவனுக்கு இட்ட பெயர்களும் புதுமையானவை. சமயச் சார்பின அல்ல; முழுவதும் சமயத்திற்கு அப்பாற்பட்ட பொதுவான இறைமைப் பெயர்கள். 'வாலறிவன்,' 'வேண்டுதல் வேண்டாமையிலான்', 'தனக்குவமை யில்லாதான்', 'எண்குணத்தான்', 'அறவாழி அந்தணன்', 'பொறி வாயிலைந்தவித்தான்' என்ற தொடர்கள் இறைவனின் பொதுத்தன்மைகளையே விளக்குவன. எல்லாச் சமயத்தாரும் ஒப்ப ஏத்தும் இறைவடிவே இத் தொடர்கள் கூறும் தெய்வமாம்.

வள்ளுவரின் குறிக்கோள்

பொய்தீர் ஒழுக்க நெறியின் மூலம் மெய்ந்நெறியைக் காட்டுவதே வள்ளுவரின் குறிக்கோளாம். எனவேதான் கடவுள் வாழ்த்-

18. அறநெறிச்சாரம், 194.
19. குறள், 43, 55, 619, 702, 1023.
20. குறள், 5, 10.

தில் வள்ளுவர் எச் சமயச்சார்புக் கடவுளரையும் குறிப்பிடாது பொது நிலையாக இறைவனின் தன்மைகளைச் சுட்டிச் சென்றார். எந்த ஒரு சமயச் சாத்திரத்துள்ளும் காணும் சிறப்புக் குறியீடுகளை எடுத்தாளாது எல்லாச் சமயத்தாரும் உடன்படுகின்ற பொதுக் குறிப்புக்களாலேயே வள்ளுவர் இறைவனைக் குறிப்பிடுகின்றார். மருள், இருள், வானம், மெய்ப்பொருள், செம்பொருள், சார்பு, நோய் எனக் குறிப்பிடப்படுஞ் சொற்களே இதற்குத் தக்க சான்றும். ஆனால் இங்ஙனம் தெய்வம் பற்றிப் பொதுப்படக்கூறிய வள்ளுவர் தம் தெள்ளுதமிழ்க் குறட்பாவில் தாமரைக்கண்ணான், அமரர் தலைவன், பிரமன், மூதேவி, திருமகள், காமன், அறக்கடவுள் முதலியோரைக் குறித்த செய்திகள் வருவதும் ஆய்தற்குரியதாம்.

தாமரைக் கண்ணான்

தலைவியின்பால் பெற்ற இன்பத்தை எண்ணி எண்ணி வியந்த தலைவன் தன்னுள் மகிழ்ந்தான்; பாராட்டமுற்படுகின்றான். அவ்வின்ப உணர்விற்கு எதனை ஒப்புமை கூறுவது என மயங்கி இறுதியில் இன்பம் நிறைந்த இறையுலகை நினைந்தான். அவனுடைய கருத்துக்கள் பாடலாய் வள்ளுவர் வழியே மலர்ந்தன.

> தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
> தாமரைக் கண்ணான் உலகு. 1103)

'தாமரைக் கண்ணானுடைய உலகம், தாம் விரும்பும் காதலியரின் மெல்லிய தோள்களில் துயிலும் துயில்போல் இனிமையுடையதோ?' என்பது இக் குறட்பாவின் கருத்தாம்.

வள்ளுவர் சுட்டுகின்ற 'தாமரைக் கண்ணான்' யார்? அவ்வுலகம் எது? என்பன சிந்தித்தற்குரியனவாம். மணக்குடவர் இதனை 'இந்திரனது சுவர்க்கம்' என்றார்; 'செங்கண்மால் உலகம்' என்றார் பரிமேலழகர். "இந்திரன் உலகு என்று உரைப்பாரும் உளர். தாமரைக்கண்ணான் என்பது அவனுக்குப் பெயரன்மையின் அஃது உரையன்மை அறிக" என்று தம் குறிப்புரையில் ஒரு மறுப்புரையும் தருகின்றார் பரிமேலழகர். 'ஆயிரம் வேள்வியின் எய்துவாராக அருமறை கூறும் அயனுலகு' என்றார் காளிங்கர். 'சுவர்க்கலோகம்' என்றே தாமரைக் கண்ணான் உலகைக் கூறினார் கவிராஜ பண்டிதர்.

மடியின்மை அதிகாரத்திலும் திருமாலைப் பற்றிய செய்தி வருகிறது.

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு (610)

என்ற குறட்பாவில் 'திருமால் தமது அடிகளால் தாவி அளந்த மூன்று உலக நிலப்பரப்பையும், இன்பங்களையும் சோம்பல் இல்லாத மன்னன் முயற்சியினால் ஒருங்கே பெறுவான்' என்று குறிக்கின்றார். ஊக்க மிகுதியின் சிறப்பையும், ஊக்கம் எச்செயலையும் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றது என்பதனையும் இதன் வழியே வள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

அமரர் தலைவன்

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. (25)

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (899)

இவ்விரு குறட்பாக்களிலும் உள்ள 'அகல் விசும்புளார் கோமான்', 'வேந்தன்' என்பனவற்றிற்குப் பரிமேலழகர் 'இந்திரன்' என்றே பொருள் கூறுகின்றார். 'தான் ஐந்து அவியாது சாபம் எய்தி நின்று அவித்தானது ஆற்றல் உணர்த்தினானாகலின் இந்திரனே சாலும் கரி' என்று இந்திரனைக் கௌதம முனிவர் சபித்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றார் என்பர் பரிமேலழகர். 'வேந்தனும் வேந்து கெடும்' என்னும் தொடருக்குப் பரிமேலழகர், 'இந்திரனும் தன் பதம் இழந்து கெடும்' என்று கூறியுள்ளார். 'வேந்தன் மேய தீம்புனல் உலகம்'[21] எனவரும் தொல்காப்பியர் கூற்று பரிமேலழகர் கருத்திற்குச் சான்றாக உள்ளது.

துறவியின் ஆற்றலுக்கு ஈடுஇணை இல்லை என்பதனைக் கூறு முகத்தான் வள்ளுவர் இவ் வரலாற்றைக் கூறுவதினின்றும் இத்தகைய புராண வரலாறு பழங்கால முதலே உலவின என்பதும்

21. தொல். அகத்திணை இயல், 5.

நன்கு தெளிவாகுமன்றோ? பெரியாரைப் பிழைத்தவர்கள் எவரா யினும் அழிவர் என்பதனையும் இது நன்கு உணர்த்தும்.

பிரமன்

வள்ளுவரின் உள்ளத்தே எழுந்த புரட்சிக் கருத்து இது. இரந்து, அலைந்து பசியால் துன்புறுகின்றவர்களைப் பார்த்த வள்ளுவருக்கு அவர்களைப் படைத்த இறைவன் மீதே கோபம் வந்து விடுகிறது!

> இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின பரந்து
> கெடுக உலகியற்றி யான்.[22] (1062)

உலகத்தைப் படைத்தவன் பிரமன்; அவனைப்பற்றிக் கூறுகின்ற ஒரே ஒரு குறட்பா இது. இறைவனாயினும் யாவனாயினும் இன்னல் தருகின்றவனைக் காணப்பொறாத வள்ளுவர்தம் உள்ளம் இப் பாடலால் நன்கு புலப்படும்.

திருமகள்

விருந்தோம்பலிலும், வெஃகாமையிலும், தெரிந்து வினையாடலிலும், ஆள்வினை உடைமையிலும் வள்ளுவர் வாக்கில் திருமகள் களிநடம் புரிகின்றாள். வந்த விருந்தினரை அகமும் முகமும் மகிழ வரவேற்றுப் போற்றுவோர் இல்லமே திருமகளின் உறைவிடம் என்கின்றார் வள்ளுவர்:

> அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
> நல்விருந்து ஓம்புவான் இல். (84)

'செய்யாள்' என்பதற்குப் பரிமேலழகர் 'திருமகள்' என்பர்.

பிறர் பொருளை விரும்பாதான் பேரொழுக்கமுடையான். அறிவு உடையோர் பிறர் பொருளை விரும்புவதை அறம் எனக்

22. 'இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன்று உயிர் வாழ்தலையன்றி இரந்தும் உயிர் வாழ்தலை வேண்டி விதித்தானாயின் அக்கொடியோன் தானும் அவரைப் போன்று எங்கும் அலமந்து கெடுவானாக' என்பது பரிமேலழகர் உரை.

கொள்ளார். அத்தகையோரையே செல்வத் திருமகள் உள்ளம் விரும்பிச் சேர்வாள்.

> அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
> திறனறிந் தாங்கே திரு. (179)

இக் குறள் உரையில், 'மகாலட்சுமி சேருகிறது, தருமமும் நீதியும் உள்ள இடத்து' எனக் கூறுவர் கவிராஜ பண்டிதர்.

பலவாற்றானும் தேர்ந்து தெளிந்து ஒருவனிடத்துத் தந்த வேலையினை அவன் முயற்சியுடன் செய்து கொண்டிருக்கும்பொழுது அவன்பால் மனம் ஐயுறவு கொள்ளுதல் கூடாது. அங்ஙனம் தவறாக நினைக்கும் தலைவனைவிட்டுத் திருமகள் நீங்குவாள்.[23] சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியிலே வாழ்கின்றாள் திருமகள். 'மடியி லான் தாளுளாள் தாமரையினாள்'[24] என்கிறார் வள்ளுவர். இங்குத் திருமகளைச் சுட்டத் 'தாமரையினாள்' என்ற சொல்லைக் குறிக் கின்றார். கம்ப நாடரும்,

> மடியிலா அரசன் மார்புளா ளோவளர்
> முடியுளா ளோதெரிந் துணர்கிலா முளரியாள்[25]

எனக் கூறுமிடத்து மேற்குறித்த குறட்கருத்தின் விளக்கத்தினைக் காணுகின்றோம்.

மேலும் பொறாமை உடையவனைத் திருமகளும் பொறாள்;[26] இருமனப் பெண்டிர் (பொது மகளிர்), கள், சூது இவை மூன்றும் திருமகளால் நீக்கப் பட்டவரின் உறவாகும்[27] எனவரும் பகுதிகளி லும் திருமகள் குறிப்பிடப் பட்டுள்ளாள்.

மூதேவி

திருமகளைப் பற்றிக் கூறிய பொய்யாமொழிப் புலவர் 'மூதேவி' யைப் பற்றியும் குறித்துள்ளார். உலகில் துன்பம் தருவன பல;

23. குறள், 519.
24. குறள், 617.
25. கம்ப. எதிர்கொள். 8.
26. குறள், 167.
27. குறள், 920.

அவற்றுள் தலையாயது சூது. அது புகழைக் கெடுக்கும்; வறுமையைக் கொடுக்கும்; பண்பைக் கெடுக்கும்; பழமையாய் வந்த செல்வத்தையும் அழிக்கும்; உண்வும் உடையும் அவனை விட்டகலுமாறு செய்யும். இத்தகைய சூதினையே மூதேவி என்கிறார் வள்ளுவர்:

அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப்பட் டார். (936)

இம் மூதேவி வயப்பட்டவர் 'இம்மைக்கண் வயிறு ஆரப் பெறார்; மறுமைக்கண் நிரயத் துன்பம் உழப்பர்.'

மடிஉளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாள்உளாள் தாமரையி னாள் (617)

என்னும் குறட்பாவில் 'மூதேவி வேறு எங்கும் வாழ்வதில்லை, ஒருவனுடைய சோம்பலிலேதான் வாழ்கிறாள்' என்கின்றார் வள்ளுவர். இவ்விரு பாக்களிலும் 'மூதேவி' என்பதனை 'முகடி' என்னும் சொல்லால் குறிக்கின்றார்.

அடுத்து வள்ளுவர் நகைச்சுவையோடு 'செய்யவள் தவ்வையை' நமக்குக் காட்டுகின்றார். செய்யவள் திருமகள்; அவளுடைய தவ்வை (தமக்கை) மூதேவிக்குப் 'பொறாமை உடையவன் இவன்தான்' எனச் சுட்டிக்காட்டிவிட்டுத் தான் அவனிடமிருந்து நீங்கிவிடுவாளாம்! பொறாமை உடையோனுக்குப் புகலிடம் மூதேவி.

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும் (167)

என்னும் பாடலில் இதனைச் சுவைபடக் கூறுகின்றார் வள்ளுவர்.

அறக்கடவுள்

அன்புடைமை, அடக்கமுடைமை, தீவினையச்சம் ஆகிய மூன்று அதிகாரங்களில் வள்ளுவர் அறக்கடவுளைச் சுட்டுகின்றார்:

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம் (77)

கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவர்ன் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. (130)

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. (204)

இம் மூன்று குறட்பாக்களிலும் 'அறம்' என்பதற்குப் பரிமேலழகர் 'அறக்கடவுள்' என்றே பொருள் கொள்கின்றார். "அன்பில்லாத உயிரை அறக்கடவுள் வருத்தும்; சினம்காத்து கல்வி கற்று அடக்கமுடையானுடைய இனிய காலத்தை அறக்கடவுள் அவன் வழியே சென்று பார்த்திருக்கும்; மறந்தும் பிறருக்குக் கேட்டினை எண்ணற்க; கேடு எண்ணியவனுக்கே கேடு விளையுமாறு அறக்கடவுள் செய்யும்" என்னும் சிறந்த கருத்துக்களையும் அறக்கடவுள் வழியே உலகிற்கு அளிக்கிறார் வள்ளுவர்.

காமன்

அறத்திற்குரிய கடவுளைப் பற்றிக்கூறுவது போலவே, காமத்திற்குரிய கடவுளாகக் காமனைச் சுட்டுகின்றார் வள்ளுவர்.

காதலன் பிரிவினால் தலைமகள் வருந்துகின்றாள். 'விழைவும் வெறுப்பும் இல்லாத கடவுளும் என்கண் வேறுபட்டான். இனி யான் எங்ஙனம் உய்வேன்? காதலர் இருவரிடத்தும் ஒப்பவில்லாமல் ஒருவரிடத்தே நின்று வருத்துகின்ற காமன் என்னிடத்து உள்ள துன்பத்தையும் வருத்தத்தையும் அறியானோ?' என்று புலம்புகின்றாள் தலைவி:

பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான் (1197)

என்னும் இக் குறட்பாவில் காமன் பற்றிய செய்தியினைக் காணலாம்.

நரகம்

வானுலகம், வானுலகத் தெய்வங்கள், அவை பற்றிய குறிப்புக்கள் முதலியவற்றை வள்ளுவர் கூறிய குறட்பாவின் வழியே கண்டோம். இனி அவர் கூறிய நரகத்தைப் பார்ப்போம். வள்ளுவர்

இதனை 'அளறு', 'ஆரிருள்', 'இருள் சேர்ந்த இன்னா உலகம்' என்பர்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (121)

அடக்கமாகிய அறம் தேவர் உலகத்துச் செலுத்தும்; அடங்காமை யாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கண் செலுத்தும் என்ற கருத்தை இக் குறட்பாவின் வழியே கூறுகிறார். 'இருள் என்பது ஓர் நரக விசேடம்' என்பர் பரிமேலழகர்.

அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு அறியாமை யாகிய இருள் சேர்ந்த இன்னா உலகத்து வாழ்க்கைஇல்லை;[28] உயர்ந்த வாழ்வு அருளாளர்கட்கு உண்டு. உயிர்கள் உடம்பு பெற்று வாழும் நிலைமை ஊன் உண்ணாதிருத்தலை அடிப்படையாகக் கொண்டது என்றும் ஊன் உண்டால் நரகம் அவனை வெளி விடாது என்றும் கூறுவர். இதனை,

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு (255)

என்னும் குறட்பா கூறும். 'அளறு' - 'குழைசேறு' 'நரகம்' என்னும் பொருள்களைக் கொண்டது. இங்குப் பரிமேலழகர் 'நிரயம்' அதாவது 'நரகம்' என்றே பொருள் கொள்வர். உயர்ந் தோர் இழிந்தோர் என்னாது விலை கொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்களை நரகம் என்கிறார் வள்ளுவர்.[29] இஃதன்றி எழு பிறப்பும் நரகத்தில் புகுந்து அழுந்துவதற்குரியவற்றைப்பேதை ஒரு பிறவியில் செய்து கொள்ள வல்லவன்[30] என்று கூறுகின்றார்.

28. குறள், 243.

இருள் சேர்ந்த இன்னா உலகத்தைத் 'திணிந்த இருளையுடைத் தாய்த் தன்கட் புக்கார்க்குத் துன்பம் செய்வதோர் நரகம்' என்று பொருள் கொள்வர் பரிமேழகர்.

29. குறள். 919.

30. குறள். 835.

அடக்கம் இல்லாதாரும், அருள் சேர்ந்த நெஞ்சினர் அல்லாதாரும், ஊனுண்பாரும், பேதைமைக் குணம் உடையாரும், வரைவின் மகளிரும் நரகத்திற்கு உரியர் எனக்கூறி இக் குறட்பாக்களின் வழியே உயர்ந்த அறங்களை உலகிற்கு எடுத்துரைக்கின்றார் வள்ளுவப் பெருந்தகை.

பிறநாடுகளில் இவ்வகைக் கருத்துக்கள்

வானுலகு, சொர்க்கம் போன்ற நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் தமிழ்மக்கள் மட்டும் கொண்டிருக்கவில்லை. பிறநாடுகளில் உள்ள மக்களும் இத்தகைய நம்பிக்கை கொண்டவர்களாய் இருந்தனர். எகிப்தியர், சுமேரியர் இறப்பிற்குப் பின்னர் மறு உலகக் கொள்கைகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். இதனைப் பற்றி டாக்டர் க. கைலாசபதி அவர்கள் கூறுவதை ஈண்டுக் காண்போம்:

"வல்ஹல்லா என்பது ஜெர்மானிய மக்களது விரசுவர்க்கம். உலகிலுள்ள புராதன மக்கள் யாவரும் மரணத்திற்குப் பிற்பட்ட வாழ்க்கையைக் கற்பனை செய்யும் பொழுது, அவ்வாழ்க்கையை வெறும் கருத்துப் பொருளாக அன்றிப் பருப்பொருளாகவே கருதினர். பிற்காலத்தில் எழுந்த சமய சாத்திரப் பரிபாஷையின் பழக்கத்தால் தூலசரீரம், சூக்கும சரீரம் என்னும் பாகுபாட்டை இங்குக் கருதுதல் தவறு. புராதன எகிப்தியர், சுமேரியர் கிரேக்கர், இந்தோ ஆரியர் முதலிய யாவரும் மறு உலகத்தை ஊனும் உதிரமும் கொண்ட மக்கள் உலாவும் உலகமாகவே கற்பித்தனர்."[31]

முடிவுரை

எனவே இத்தகைய நம்பிக்கையும் கருத்தும் உலகின் எல்லாப் பிரிவினரிடமும் இருந்தது எனலாம். அனைத்துச் சமய நூல்களும் இவை பற்றிக் கூறுகின்றன. வள்ளுவர் கண்ட வானுலகம் பற்றிய குறிப்புக்கள் அன்றைய சமுதாயத்தின் எண்ணங்களையும்,

31. கைலாசபதி, டாக்டர் க. ஒப்பியல் இலக்கியம், பக். 113. பாரி நிலையம், 1969.

கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் உலகிற்குக் காட்டுவன. மக்களுடைய வாழ்க்கையினை உலகிற்குக் காட்டுவதே இலக்கியமாகும்.

வள்ளுவர்தம் நூலிலும் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன. ஆயின் வள்ளுவர் இத்தகைய குறிப்புக்களைத் தம் நூலில் பயன்படுத்தும் போதும் ஓர் உயர்ந்த குறிக்கோளுடைய வாழ்வை மக்களுக்கு அளிக்கப் பெரிதும் விரும்பினர் என்பதும் அதுவே அவருடைய உள்ளக்கிடக்கை என்பதும் இதுகாறும் கூறிய செய்திகளால் நன்கு விளங்கும்.

3

பரிமேலழகர் உவமை விளக்கம்

உவமையின் பயன்

எண்ணியதை எண்ணியாங்கு உணர்த்துவதற்கு உவமைகள் பெரிதும் துணையாகின்றன. கவிஞர்களின் கற்பனைப் படைப்பிலும் உவமை தனி இடம் பெற்றுத் திகழ்கிறது. பொதுவாகச் செய்யுள் களிலேயே உவமையும் உருவகமும் மிகுதியாகப் பயின்றுவரும் என்றாலும் உரைநடையிலும் நடை சிறக்கக் கருத்து இனிது புல ளுக இவற்றைக் கையாளுகின்றனர். அன்றைய இலக்கணிகள் முதல் இன்றைய திறனாய்வாளர் வரை நாளும் தம் சிந்தனை யாற்ற லால் எண்ணி எண்ணித் தொடுப்பது-தொகுப்பது உவமைகளையே எனலாம்.

பரிமேலழகரின் உவமைகள்

படைப்பிலக்கியத்திற்கு நிகராக உரையிலக்கியத்தை உரு வாக்கிய பரிமேலழகரும் தம் உரையினுள் அழகிய செறிவான உவமைகளை எடுத்தாண்டு உரைக்கு எழிலையும் ஏற்றத்தையும் தந் துள்ளார். இவ்வகையில் பரிமேலழகரின் உவமைகள் வள்ளுவரின் கருத்துகளை விளக்கும் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன.

பரிமேலழகரின் உவமை விளக்கங்களை இருவகையாகப் பாகு படுத்தலாம். ஒன்று வள்ளுவர் படைத்த உவமைகளுக்குத் தம் உரைநயத்தால் மேலும் விளக்கந்தருதல்;[1] மற்றொன்று கருத்து

1. காண்க: குறள், பரிமேலழகர் உரை, 1,277,481,490,495,576 முதலியன.

விளக்கங்களுக்காகத் தாமே தம் உரையில் அரிய உவமைகளைப் பெய்து விளக்குதல். இவற்றுள் அவர் பயன்படுத்திய உவமைத் தொடர்களைப் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்க மாகும்.

பரிமேலழகர் பயன்படுத்திய உவமைகளைக் கீழ்வருமாறு வகுத்தும் தொகுத்தும் ஆராயலாம் :

1. நாட்டுப் பழமொழி உவமைகள்
2. இலக்கிய மரபு உவமைகள்
3. காப்பியச் செய்தி உவமை
4. சமய/புராணச் செய்தி உவமைகள்
5. கருத்து உவமைகள்

நாட்டுப் பழமொழி உவமைகள்

கருத்துக்களை விளக்குவதற்கு உரையாளர்கள் மக்கள் பயன் படுத்திய பழமொழிகளையும் எடுத்தாண்டனர். பழமொழிகள் மக் களின் அனுபவ மொழிகள். இவை ஒரு வகையில் அகப்பொருள் துறையில் வழங்கும் உள்ளுறை போலவும், புறப்பொருள் துறை யில் விளங்கும் பிறிதுமொழிதலணி போலவும் பொருளும் செறி வும் பெற்றுத் திகழ்வன. 'கரும்பு தின்னக் கூலியா?', 'காட்டுத் தீ முன்னர் பஞ்சுத்துய் போலும்' போன்ற பழமொழித் தொடர்கள் கருத்து விளக்கத்திற்கு வேண்டிய பொருட்செறிவு பெற்றவை. இத்தகைய பழமொழி உவமைத் தொடர்கள் பரிமேலழகர் உரை யிலும் பயின்று வந்துள்ளன.

கரும்பு தின்பதற்குக் கூலி

கல்வி ஒருவர் இன்புறுவதற்குக் காரணமாவதோடன்றிப் பிறர் மகிழ்தற்கும் காரணமாய் அமைகின்றது. எனவே அச் சிறப்பு நோக்கியே கற்றோர் மீண்டும் மீண்டும் கல்வியை விரும்பு கின்றனர். இதனைப் பரிமேலழகர்,

> 'கரும்பு அயிறற்குக் கூலிபோலத் தாம் இன்புறுதற்கு உலகு இன்புறுதல் பிறவாற்றான் இன்மையின் அதனையே காமுறுவர் என்றுங் கூறினார்' (குறள் 399)

என்பர்.

'கரும்பு தின்பதற்குக் கூலியா?', 'கரும்பு தின்பதற்குக் கூலி கொடுத்ததுபோல', முதலான பழமொழித் தொடர்கள் சுருக்கமானவை. ஆனால் உள்ள உணர்ச்சியினைத் தெற்றெனப் புலப்படுத்துபவை. திருவாய்மொழி முதல் பத்திலும், ஒன்பதாம் பத்திலும் வியாக்கியான உரைகாரர் 'கரும்பு தின்னக் கூலி போன்று', 'கரும்பயிலக் கூலி கொடுக்குங் குலத்தோன்றல்'[2] என்ற இவ்வுவமைத் தொடர்களைப் பயன்படுத்துவதும் எண்ணுவதற்குரியதாம்.

பலதுளி பெருவெள்ளம்

மழை நீர்த்துளி சிறிது சிறிதாகச் சேர்ந்து பெருவெள்ளமாகிப் பயன் தரும். கேள்வியறிவும் அவ்வாறே; சிறிது சிறிதாகச் சேர்ந்து பேரறிவாய்த் திகழும் என்பதனைப் பரிமேலழகர், 'மழைத்துளி போல' வந்து ஈண்டி எல்லா அறிவுகளையும் உளவாக்கலின்' என்பர் (குறள் 416). 'பலதுளி பெருவெள்ளம்' என்னும் நாட்டுப் பழமொழியின் உட்பொருள் இவ்வுவமையில் நயமுற விளங்குவதைக் காணலாம்.

எரியும் நெருப்பும் எண்ணெயும்

விறகிட்ட நெருப்பு மேன்மேலும் பற்றி வளர்ந்து எரியும். அதுபோலவே பொருள்கள்மேல் மனம் சென்றால் ஆசைமனம் பற்றியெரியுமே ஒழிய ஆன்ம மனம் வளராது என்பது தெளிவு. இதனைப் பரிமேலழகர்,

> அஃது (மனம்) பொருள்கள்மேல் செல்லின் அந்நுகர்ச்சி விறகு
> பெற்ற தழல் போல் முறுகுவ தல்லது (குறள் 343)

என்னும் உவமையால் விளக்குவர். 'எரிகின்ற நெருப்பினுள் எண்ணெய் வார்த்ததுபோல' என்ற நாட்டுப்புற மக்களின் பழமொழிப் பொருட்செறிவு இவ்வுவமையில் ஓரளவு ஒளிர்கின்றது தெளிவாம்.

காட்டுத் தீயும் பஞ்சும்

> காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
> நாமம் கெடக்கெடும் நோய் (360)

2. திருவாய்மொழி முதல் பத்து, ஆருந் திருமொழி.

என்பது மெய்யுணர்தலில் உள்ள குறட்பா. ஞானயோகங்களில் முதிர்ச்சி உடையார்முன் விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய இம் மூன்று குற்றங்களும் வராமற் கெடும் என்பது இதன் கருத்து. இக் கருத்தினைப் பரிமேலழகர் விளக்கும்போது பொருள் இனிது புலனாவதற்கு எளிய உவமையினைப் பயன்படுத்துகின்றார். காட்டுத்தீ முன்னர் பஞ்சு விரைவில் அழிந்துபடும். பெரும்பெரும் வலிய மரங்களே காட்டுத்தீ முன்னர் துகளாகும்போது மெல்லிய பஞ்சின் நிலை என்னாகும்? ஞானயோகத்தின் முன்னர் இம் மூவகைக் குற்றங்களும் எரிந்துவிடும் என்பதனை,

> இடையறாத ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத்தீ முன்னர் பஞ்சுத்துய் போலும்

என்னும் உவமையால் விளக்குவர்.

பரிமேலழகரின் இவ்வுவமை நயத்தால் ஞான யோகத்தின் வலிமையும், அவ் வலிமையின் முன்னர் மூன்று குற்றங்கள் அழிந்து படுகின்ற எளிமையும் இனிது புலனாகின்றன.

நாட்டுப்புற மக்களின் உள்ளங்களில் ஊறிநின்ற இப் பழமொழிகள் பரிமேலழகரின் விளக்கவுரையிலும் இடம்பெற்று விளங்குவது இவ் வுவமைகளால் நன்கு தெளிவாகின்றன.

இலக்கிய மரபுத்தொடர் உவமைகள்

பரிமேலழகர் தமக்கு முன்னும், தம்முடைய காலத்தும் இருந்த இலக்கிய இலக்கண நூல்களையெல்லாம் நன்கு கற்றுணர்ந்த அறிஞர்.[3] தங்க அணிகலனில் வைரம் பதித்தாற் போன்று உரையினிடையே அவ்விலக்கிய இலக்கண அருந்தொடர்களைப்பெய்து, உரைக்கு அழகும் அமைப்பும் சேர்த்த அருங்கலைஞர். இம் மேற்கோள்களுள் பல இலக்கிய மரபுத் தொடர் உவமைகளாகவே விளங்குவது எண்ணுவதற்கு உரியதாகும்.

3. காண்க: பரிமேலழகர் மேற்கோள் விளக்கம்-இந்நூலில் உள்ள கட்டுரை.

வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறுபோல

அறிவில்லாத பேதையரோடு நட்புக் கொண்டாலும், அந் நட்பு அறிவிலாதவர் நட்பு என அறிந்ததும் அதனை விட்டுவிடுவதே அவனுக்கு வாய்த்த பேறுகும்' என்பதனை வள்ளுவர்

ஊதிய மென்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல் (797)

என்னும் குறளால் கூறுவர். நட்பினை ஒழிந்தாலும் அவனை விட்டு நீங்காவிடில் துன்பமிகும். இதனைப் பரிமேலழகர் உவமைவழி நன்கு விளக்குவர்.

நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால் வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறு போலத் தீங்கு வரும்

என்பர். மணம் தருகின்ற சந்தனமரமும் வேங்கைமரமும் மூங்கிலின் சேர்க்கையால் வெந்தழிவது போலப் பேதையாரின் நட்பு அவரைச் சார்ந்த நல்லோரையும் அழிக்கும் என்பதே இவர் தரும் உவமை விளக்கம். நட்பாராய்ந்து ஒழுகுதற்குத் தம் சிந்தனை யாற்றலால் ஒப்பிட்டு விளக்கும் இவருடைய கருத்து நயம் பெரிதும் போற்றுவதற்கு உரியது. பன்னூல் பயிற்சி மிக்காரான பரிமேலழகர் நாலடியின் நற்றமிழை நன்கு ஓதி உணர்ந்தவர். இக் கருத்து,

மனத்தான் மறுவிலரேனுந் தாஞ் சேர்ந்த
இனத்தா லிகழப் படுவர் - புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால் [4]

என்னும் நாலடியாரிலும் உவமையாக வந்திருப்பது உளங் கொளற்குரிய ஒன்றாகும்.

பசுமட்கலத்துள் நீர்போல

வஞ்சனை வழியால் பொருள் சேர்த்து அதனைக் காப்பாற்றுதல் என்பது பச்சைமண் கலத்துள் நீரைவிட்டுக் காப்பது போன்றதாகும் என்பர் வள்ளுவர். அறத்தையும் அரிய உவமையால் உணர்த்தும் வள்ளுவப் பெருந்தகையின் அழகிய இவ்வுவமை,

4. நாலடி. நல்லினம் சேர்தல், 17.

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று (660)

என்னும் குறட்பாவில் இனிது விளங்குவதைக் காணலாம். வள்ளுவர் எடுத்தாண்ட இவ்வுவமையினையே பரிமேலழகர்,

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் (755)

என்னும் குறட்பாவின் விளக்கவுரைக்குப் பயன்படுத்துவர்.

அருளோடும் அன்போடும் பொருந்தாத வழிகளில் வந்த செல்வத்தின் ஆக்கத்தைப் பெற்றுமகிழாமல் அதைத் தீமையானது என்று நீக்கிவிடவேண்டும் என்பது இக் குறட்பாவின் கருத்தாகும்.

அவ்வாறு வாராத பொருளீட்டம் பசுமட் கலத்துள் நீர்போலச் செய்தானையும் கொண்டு இறத்தலின்

என்பது பரிமேலழகருடைய விளக்கவுரை. இங்குக் குறள் தொடரையே உவமைத் தொடராக்கும் பரிமேலழகரின் திறன் எண்ணி வியத்தற்குரியதாய் இலங்குகின்றது.

கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப்போல

அறிவுடைமையின் பயன் உலகத்தைத் தழுவுவது. முன்னே மகிழ்ந்து விரிதலும் பின்னே வருந்திக் குவிதலுமில்லாத இயல்பினது அறிவு.

உலகந் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலு மில்ல தறிவு (425)

என்னும் குறட்பாவில் வள்ளுவர் இதனைக் கூறுவர். வள்ளுவர் கருத்துக்கு விளக்கம் வரைந்த பரிமேலழகர், 'மலர்தலும் கூம்புதலுமில்லாத அறிவினுக்கு' இயற்கை நெறியோடு இயைந்த காட்சி ஒன்றினையே உவமையாக்குகின்றார்.

நீர் நிலையிலுண்டாகும் பூக்கள் மலர்தலுங் குவிதலுமாகத் தாம் அழிகிற வரை நிலைமாறுதல்களைப் பெறும். ஆனால் கோட்டுப்பூவோ (மரக்கிளையிலுண்டாகும் பூக்களோ) ஒருகால்

மலர்ந்தது மீண்டும் குவியாமலே அழிகிற வரை இருக்கும் மலர்தலும் குவிதலுமான இருவகை நிலைகள் கோட்டுப் பூக்களிடத்தில்லை. அறிவார்ந்த நட்பும் இத்தகைய இயல்பினதேயாம். எனவே தாம் பரிமேலழகர்,

> அவரோடு கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப்போல ஒரு நிலையே நட்பாயினுன் எல்லா வின்பமும் எய்தும் ஆகலின் அதனை அறிவு என்றார்

என்பர். மலர்தலும் கூம்புதலுமில்லாத அறிவினுக்குக் கோட்டுப் பூவினை உவமையாக்குகின்றார் பரிமேலழகர். இவ் உவமை விளக்கத்திலும் ஈரடியின் புகழ்பாடும் நாலடியின் நற்றமிழே எதிரொலிப்பதைக் காணலாம்.

> கோட்டுப் பூப்போல மலர்ந்து பிற்கூம்பாது
> வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட
> கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
> நயப்பாரும் நட்பாரு மில் 5

என்னும் நாலடிப் பாட்டின் உவமையே பரிமேலழகர் உவமையாக மலர்ந்திருக்கிறது எனலாம்.

ஏரலெழுத்துப் போல

கல்லாதவனுடைய அறிவுடைமை ஒரோவழி மிக நன்றாக இருப்பினும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக் கொள்ளமாட்டார் என்பதனை வள்ளுவர்,

> கல்லாதா னொட்பங் கழியநன் றாயினும்
> கொள்ளா ரறிவுடை யார் (404)

என்னும் குறளால் கூறுவர். கல்லாதவனுடையஅறிவுடைமைக்குச் சான்று தர விழைகின்றார் பரிமேலழகர். எண்ணி எண்ணி அவர் தருகின்ற உவமை விளக்கம் வள்ளுவரின் கருத்திற்கு வலிவும் பொலிவும் அளிப்பதாய்த் திகழ்கிறது.

ஆற்றின் கரையோரங்களில் நத்தை ஊர்ந்து செல்லும்போது கோடுகள் தோன்றும். அக்கோடுகள் சிலவேளைகளில் எழுத்துக்கள்

5. நாலடி. 215.

போலவும் தோற்றந்தருவன. ஆனால் அவற்றை எழுத்துக்கள் எனப் போற்றார் அறிவுடையோர். அத்தகையதே கல்லாதவனுடைய ஒட்பம் என்பர் பரிமேலழகர்.

> ஒண்மை-அறிவுடைமை அது நன்றாகாது; ஆயிற்றாயினும் ஏரலெழுத்துப்போல்வதோர் விழுக்காடு ஆகலின் நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியாரென்பதாம்.

என்பது அவர் தரும் விளக்கம்.

பழமொழி நானூற்றில் வரும், 'ஆகுமோ நந்து உழுதவெல்லாம் கணக்கு'[6] என்ற தொடரும் இங்கு ஒப்பு நோக்கற்குரியது. நான்காந் திருமொழியில் வியாக்கியான உரைகாரர், "புழுக்குறித்தது எழுத்தானாற் போலே இங்ஙனே வாய்த்துக் கொண்டு நிற்கக் கண்டதித்தினை" என்பர்.[7] திருவரங்கத் தந்தாதியிலும்,

> மானத்து வண்டல் உழ ஓர் எழுத்தின்
> வடிவுற்ற சீர்மான

என்று இக் கருத்து வருவதும் எண்ணுவதற்குரியது.[8]

> நந்து நாகு வண்டு சென்னடைவழி யெழுத்தாய்
> வந்து வீழினும் வீழும்

என்ற இலக்கியத் தொடரும் இதனோடு வைத்து எண்ணத் தக்கது.[9]

ஔவை உண்ட நெல்லிக்கனி போல

அதிகன் ஔவைக்கீந்த நெல்லிக்கனி பற்றிச் சிறுபாணாற்றுப் படையும், புறநானூறும் புகழ்ந்து பேசுகின்றன.

> ......மால்வரைக்
> கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி
> அமிழ்து விளைதீம்கனி ஔவைக்கு ஈந்த

6. பழமொழி. 245.
7. நான்காம் திருமொழி, 588, உரை.
8. திருவரங்கத்தந்தாதி, 95.
9. திருக்குறள், 404 பரிமேலழகர் உரை, வை. மு. கோ. விளக்கம்.

உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக் கடல்தானை அதிகனும்...[10]

என்று சிறுபாணாற்றுப்படையும்,

நீயே தொல் நிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீம்கனி குறியாது
ஆதல் நின் அகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத்தனையே[11]

எனப் புறநானூறும் அதிகனீந்த நெல்லிக்கனியைப் பாராட்டிப் புகழ்கின்றன.

பண்டைத் தமிழிலக்கியங்களில் பெரிதும் உளம் தோய்ந்த பரிமேலழகரோ இச் செய்தியை வள்ளுவரின் கருத்து விளக்கத்திற்கு உவமையாக்கி உரைக்கு எழில் கூட்டுகின்றார்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (100)

என்னும் குறட்பாவின் விளக்க உரையில் 'இனிய கனிகள்' என்பது 'ஔவை உண்ட நெல்லிக்கனி போல' அமிழ்தானவற்றை என்பர். இவ்வுவமையால் கருத்துத் தெளிவு பெறுவதோடன்றி வரலாற்றுச் செய்தியையும் அறிய முடிகிறது.

காப்பியச் செய்தி உவமைகள்

காப்பியங்களும், காப்பியச் செய்திகளும் பரிமேலழகரின் உரை விளக்கத்திற்குப் பெரிதும் துணை நிற்கின்றன. சிலம்பும், சிந்தாமணியும் இவர்தம் உள்ளத்தை ஈர்த்தவை என்பதனை இந் நூல்களிலிருந்து அவர் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் இனிது உணர்த்தும். காப்பியங்களுள்ளும் அவர் உரையில் மிகுதியாக இடம்பெற்றது சிந்தாமணிக் காப்பியமே. சமணக் காப்பியத்தில் உள்ளம் ஒன்றிய வைணவ உரைகாரர் பரிமேலழகர் எனலாம்.

10. சிறுபாணாற்றுப்படை, 99-103.
11. புறநானூறு, 91.

கட்டியங்காரன் போல

காப்பியமாந்தன் ஒருவனின் இயல்பை வள்ளுவரின் குறட்பா விளக்கத்திற்கு உவமையாக்குகின்றார் பரிமேலழகர். எல்லாவகையாலும் ஆராய்ந்து தெளிந்தபிறகும் செயல் வகையால் வேறுபடுகின்ற மக்களும் இவ்வுலகில் உண்டு என்பதனை வள்ளுவர்,

> எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
> வேருகும் மாந்தா பலர் (514)

என்னும் குறட்பாவால் கூறுவர்.

தன்னையே நம்பிய மன்னன் சச்சந்தனைக் காலம் வந்தபொழுது கொன்று ஆட்சியைத் தனதாக்கிக் கொண்ட 'வினைவகையால் வேறுகிய' பண்பு பெற்ற கட்டியங்காரனை 'வேருகும் மாந்தருக்கு' உவமையாக்குகின்றார் பரிமேலழகர்:

> கட்டியங்காரன் போலஅரசவின்பத்தினை வெஃகி விகாரப் படுவதல்லது அதனைக் குற்றமென்றெழிந்து, தம் இயல்பில் நிற்பார் அரியராகலின் 'வேருகுமாந்தர் பலர்' என்ருர்

என்பது பரிமேலழகர் உரை.

கட்டியங்காரனின் உள இயல்பினை உவமை விளக்கத்திற்குப் பயன்படுத்தும் பரிமேலழகரின் உரைநயம் - உவமைநயம் பெரிதும் எண்ணி மகிழ்தற்குரியதாம்.

சமய / புராணச் செய்தி உவமைகள்

கருத்து விளக்கத்திற்காக உரைகாரர்கள் சமயக் கருத்துகளையும் கதைகளையும் கூறி விளக்குதலும் உண்டு. திருக்குறள் பரிதியார் உரையில் இத்தகைய சமயக் கருத்துகளும், கதைகளும் நிறைய வந்துள்ளன.[12] பரிமேலழகரும் ஈரிடங்களில் சமயக் கருத்துப் பொதிந்துள்ள உவமைகளை எடுத்தாள்கின்ருர்.

12. குறள், (பரிதியார் உரை) 2,5,8,296,310,346,388 முதலியன.

திரிபுரம் போல

தவமுடையோர் சினந்தால் அரண், படை, பொருள், நட்பு முதலிய காப்புகளைப் பெற்றிருந்தாலும் அவரை எதிர்த்தோர் அழிந்துவிடுவர் என்பர் வள்ளுவர்.

> இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
> சிறந்தமைந்த சீரார் செறின் (900)

என்பது அக் குறட்பா.

இதன் விளக்கவுரையில் பரிமேலழகர் சிவபிரானது ஆற்றலால் மும்மதிலும் கொண்ட திரிபுரம் அழிந்த செய்தியினை உவமையாக்கி விளக்குவர்.

> அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலால் திரிபுரம்போல
> அழிந்துவிடுமாகலின் 'உய்யார்' என்றார்

என்பது பரிமேலழகர் கூற்று. இங்குத் திரிபுரம் போல என்ற புராணக் கருத்து உவமை விளக்கத்திற்குப் பயன்படுவதைக் காணமுடியும்.

இந்திரன் போல

பிறனில் விழையாமை அதிகாரத்தில்,

> எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
> தேரான் பிறனில் புகல் (144)

என்னும் குறட்பாவின் விளக்கவுரையில் எல்லாப் பெருமையும் இழந்த இந்திரனை உவமையாக்கிப் பரிமேலழகர் நயமுற விளக்குவர்.

எத்துணைப் பெருமையுடையவனானாலும் பிறனில் விழைந்தவன் விரைவில் சிறுமையடைவான் என்பது திண்ணம். சமய புராணக் கருத்துகளின்படி மிக உயர்ந்த பதவி இந்திர பதவி என்பர். அப் பெருமையினையே இழந்த இந்திரனை இதற்குச் சான்றுகாட்டி,

> இந்திரன்போல எல்லாப் பெருமையும் இழந்து சிறுமையெய்தல்
> நோக்கி 'என்னாம்' என்றார்

என்று கூறி விளக்குவர் பரிமேலழகர்.

பிறர் மனையினை விழைந்த இந்திரனின் இறுதிநிலையினைச் சிறுமை நிலையினை உவமையாக்கி, வள்ளுவர் கூறவந்த கருத்தை உள்ளத்தில் தெற்றெனப் பதிக்கின்றார் பரிமேலழகர்.

கருத்து உவமைகள்

கருத்துக்குக் கருத்து வகையாலே உவமை கூறுவதும் ஒருவகை மரபு. இருவேறு கருத்துகளை ஒருங்கிணைத்தும் ஒப்பிட்டும் காட்டித் தாம் கூற விழைந்த கருத்துக்கு வலிவையும் பொலிவையும் தருகின்றார் பரிமேலழகர். அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுக் காண்போம்:

மாண்பும் மாசும்

உயர்ந்த பண்பாளனிடத்துள்ள சிறுகுறையும் பெரிதாகத் தோன்றும். வெண்மையான ஆடையில்தானே மாசும் தெளிவாகத் தெரியும். இக் கருத்தினைப் பரிமேலழகர் உவமையாக்கி விளக்குவார். "இரந்து கேட்கத்தக்கவரைக் கண்டால் அவரிடம் இரக்க வேண்டும். அவர் இல்லையென்று ஒளிப்பாராறல் அது அவர்க்குப் பழி; தமக்குப் பழியன்று' என்பர் வள்ளுவர். பரிமேலழகர் இதனை,

> தூ வெள்ளறுவைக் கண் மாசுபோல அவர்கட் கடிதுசேறலின் அவர் பழி (குறள் 1051)

என்னும் உவமை வழி விளக்குவர்.

மடியும் நெருப்பும்

மடியின் தீயது பிறிதில்லை ஆதலால் மடியை மடியாகவே கருதி ஒழுக வேண்டும் என்று குறட்பா கூறும். இக்கருத்துக்கு இணையாக வேறொரு கருத்தினைக் கூறி உவமை விளக்கம் தருவர் பரிமேலழகர்.

> நெருப்பிற் கொடியது பிறிதின்மை பற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுக என்றாற் போல, மடியின் தீயது பிறிதின்மை பற்றி பின்னும் அப்பெயர் தன்னானே கூறினார் (குறள் 602)

என்பது பரிமேலழகரின் உவமை - உரை விளக்கமாகும்.

கடல் நடுவண் உடைந்த கலம் முதலியன

அரணாகிய காப்புப் பெருமையினை இழந்தால் கடல் நடுவண் உடைகலத்தார் போன்று (741) ஏமங்காணாது இறுவர் என்றும், பெரியார் துணையில்லாத காவலற்ற அரசன் 'பாகனில்லாத யானை போல' (448) நெறியல்லா நெறிச் சென்று கெடும் என்றும் கருத்துவமைகள் தந்து விளக்குவர். அறிவினைக் குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவனுக்கு இணையாக ஒப்பிட்டுக் காட்டுவர் (422). கண்ணோட்டமில்லாத அரசனிடத்து வாழ்வது புலியை அடைந்த புல்வாயினம் போல (571) அச்ச வாழ்வினது என்பர்.

இங்ஙனம் கருத்தினை விளக்குதற்கு ஏற்ற இணையான கருத்துகளைத் தம் சிந்தனையாற்றலால் பெய்து எளிமையாக விளக்குவது இவருடைய உரையியல்புகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.

முடிவுரை

உவமையே ஒருவரின் நுண்திறனைக் காட்டும் அளவுகோல் எனலாம். அவ்வகையில் பரிமேலழகர் நுட்பமாகக் கூறிய உவமைகள் பொருளை விளக்குவது மட்டுமன்றி அந்தப் பொருள்களை அப்படியே நம்முடைய மனத்தில் படைத்து விடுகின்றன. பரிமேலழகர் பயன்படுத்திய உவமைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது (காண்க - பின்னிணைப்பு) அவருடைய நுண்ணறிவின் நுட்பமும் இலக்கிய ஆய்வின் திட்பமும் இனிது புலனாகின்றன. நாட்டுப் பழமொழியாயினும் இலக்கிய மரபுத் தொடராயினும் ஏற்றவகையில் அவருடைய உரையில் இணைந்தும் இழைந்தும் காணப்படுவதை இவ்வுவமைகள் நன்கு புலப்படுத்துகின்றன. கற்பனைவளம், கருத்துவளம், படைப்போர் காலத்துப் பயின்ற பொருள்களின் தன்மை, பயன், பழக்க வழக்கங்கள், பண்பு, வழி வழி வந்த மரபு, மரபுத் தொடர்கள் முதலியன இவருடைய உவமை விளக்கத்தால் நன்கு புலனாகின்றன எனலாம். சுருங்கக்கூறின் பரிமேலழகரின் உவமை விளக்கத்தால் வள்ளுவர் உணர்த்த விழைந்த கருத்து மேலும் வலிவும், இனிமையும் தெளிவும் செறிவும் பெற்றுக் கற்பார்க்குப் பேரின்பம் நல்குகிறது என்பது வெள்ளிடைமலை.

பரிமேலழகர் உவமை விளக்கம்

(அகர நிரல்)

உவமை	பொருள்	குறள் உரை
இந்திரன்போல	பிறனில் விழைந்தான் அடையும் சிறுமை	144
ஏரலெழுத்துப்போல	கல்லாதான் ஒட்பம்	404
ஒருவர் கூறை எழுவர் உடுத்து என்றாற்போல	'ஒருநாள் எழுநாள் போற்செல்லும்' என்பதற் கான மேற்கோள் உவமைச்சான்று	1269
ஔவை உண்ட நெல்லிக் கனிபோல	இனிய காய்கள்	100
கட்டியங்காரன் போல	வினைவகையால் வேறுகும் மாந்தர்	514
கடல் நடுவண் உடை கலத் தார் போன்று ஏமங் காணாது இறுவர்	அரணை இழந்தவர் அழிதல்	741
கடன் கொண்டான் தோன் றக் கடன் தோன்றுமாறு போல	அரிய பிழைகள் செய்தவனைக் காணுந்தோறும் அப் பிழைகள் நினைவுக்கு வருதல்	693

கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப் போல ஒருநிலை	நிலையான நட்புணர்வு உடையார்	425
கரும்பு அயிறற்குக் கூலி போல	தாமின்புறுதற்கு உலகு இன்புறுதல்	399
காஞ்சிரங்காய் போல நஞ்சாவனவற்றை	இன்னாத காய்கள்	100
காட்டுத்தீ முன்னர் பஞ்சுத்துய்போலும்	ஞான யோகத்தின் முன்னர் காமம், வெகுளி, மயக்கம் மூன்றும் கெடல்	360
குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன் போல	மனத்தைப் புலமறிந்து செலுத்தும் அறிவு	422
சேர சோழ பாண்டியர் போல	தொன்றுதொட்டு வருகின்ற 'பழங்குடி	955
திரிபுரம் போல	தவமுடையோரின் சினத்திற்கு அரணுடையோரும் அழிதல்	900
தூவெள்ளறுவைக் கண் மாசு போல	ஈபவர் ஈதலில் குறைகாட்டின் அவரிடத்துச் சேரும் பழி	1051

நெருப்பிற் கொடியது பிறிதின்மை பற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுக என்றாற்போல	மடியை மடியாகவே கருதுதல்	602
பசுமட்கலத்துள் நீர்போல செய்தானையுங் கொண்டு இறத்தல்	தீயவழியில் தேடிய பொருள் ஈட்டியவனோடும் சேர்ந்தழிதல்	755
பாகனில்லாத யானைபோல நெறியல்லாநெறிச்சென்று கெடுதல்	பெரியாரைத் துணைக் கொள்ளாத மன்னனும் அவ்வாறே கெடுதல்	448
புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி என்புழிப் போல	நூற்பொருளறிவில்லாத கல்லாதவர் அறிஞர் அவையில் ஒருபொருள் குறித்துப் பேசுதல்	401
புலியை அடைந்த புல்வாயினம் போல	கண்ணோட்டமில்லாதவரிடத்து வாழும் குடிமக்கள்	571
மழைத்துளி போல	கேள்வியறிவு சிறிது சிறிதாகச் சேர்ந்து வளர்தல்	416
விறகுபெற்ற தழல்போல்	மனம் பொருள்கள்மேல் செல்லுதல்	343
வினைகள் போல உயிரின் கட் கிடந்து	கல்வியும் உயிர் செல்லுமிடத்துச் செல்லுதல்	398
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறு போல	அறிவிலாருடன் உள்ள தொடர்பு சேர்ந்தாரையும் அரிந்தல்	797

4

பரிமேலழகர் மேற்கோள் விளக்கம்

உரைத்திறம்

பண்டைய உரையாசிரியர்கள் புதியனவற்றைப் போற்றியும் பழையனவற்றைப் பரிவுடன் காத்தும் தத்தம் உரைகளை இலக்கியங்களாகவே படைத்துள்ளனர். மூல நூல்களின் பொருள் புலப்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரிபவை இப் பண்டை உரைகளே. எனவே மூல நூல்களோடு ஒப்ப எண்ணத்தகும் சிறப்பையும் பெற்று அவை உயர்ந்து விளங்குகின்றன.[1] இத்தகைய சீரிய உரைகளுள் திருக்குறள் பரிமேலழகர் உரையும் ஒன்று.

பரிமேலழகர் உரை

பரிமேலழகர் உரை திட்பமும் நுட்பமும் செறிந்தது. சுருக்கமுடைமையும், எளிமையும் கருத்தாழமும் இதன் தனிச் சிறப்புக்கள். பரிமேலழகரின் பல்வேறு சிறப்புகளிலும் தலையாய சிறப்பாகத் திகழ்வது அவர்தம் உரையில் காணக்கிடக்கும் பன்னூற் பயிற்சியேயாகும். பரந்துபட்ட இலக்கிய அறிவின் ஒளி அவர் உரையில் தொட்ட இடமெல்லாம் துலங்குகிறது எனலாம். 'பல்கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியராகப்' பரிமேலழகர், அவர்தம் உரையின் வாயிலாகத் திகழ்கிறார்.

1. வள்ளுவர் நூல் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம். —உமாபதி சிவனார்.

குறளை விளக்குதற்காக இவர் எடுத்தாண்ட மேற்கோள் செய்யுள்கள், கருத்துக்கு அரணாகவும், ஒப்பு நோக்கியும் உற்று நோக்கியும் ஆயும் இவர்தம் திறனாய்வுத் திறனுக்கும், உரைத் திறனுக்கும் சான்றாகவும் திகழ்கின்றன. இச்செய்யுள்களை யெல்லாம் தொகுத்தும் பகுத்தும் பார்த்தால் ஆய்வுமுறையில் பல புதிய சிந்தனைகளும், செய்திகளும் பிறக்கக்கூடும். பொதுவாக இங்ஙனம் உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டும் மேற்கோள் பாடல்களால் பல நன்மைகள் விளைகின்றன. பழைய நூல்களைப் பதிப்பிக்கும்போது இப் பாடல்கள் பெரிதும் துணைபுரிகின்றன. 'உரையைக்கொண்டு மூலத்தையும் மூலத்தைக்கொண்டு உரை யையும் பலசமயங்களில் அறிந்துகொண்டு செம்மையாகப் பதிப் பிக்க இவை துணைபுரிகின்றன' என்பர் அறிஞர் டாக்டர் உ.வே.சா. அவர்கள்.[2]

மேற்கோளாட்சி - இலக்கண மரபு

இங்ஙனம் உரையின் இடையே மேற்கோள்களை எடுத்துக் காட்டி விளக்கும் இயல்பு-தொன்றுதொட்டு இருந்துவரும் மரபே யாகும். உரையின் இலக்கணத்தைக் கூறப்போந்த பழந்தமிழ் இலக்கண நூல்களும் பல்வேறு உரைவகைகளைப் பற்றியும், அவற்றின் உறுப்புகளைப்பற்றியும் கூறுகின்றன. அவற்றுள் 'மேற்கோள் காட்டுதலும்' உரை உறுப்புகளுள் ஒன்று எனத் தொல்காப்பியம் கூறும்:

மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானும முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையுஞ் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்.[3]

இதற்கு உரையெழுதிய இளம்பூரணரும்,

2. சாமிநாதையர், உ. வே., சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், பக். 174, சென்னை, 1953.
3. தொல். பொருள். மரபியல், 650.

> உரையாவது 'மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாக ஐயப்பட்டு நிற்றலும் மருண்டு நிற்றலும் நீக்கி, தன்னூ லானுதல் அப்பொருள் முடிவுறக் கூறின நூலானுதல் தெளியவொரு பொருளை யொற்று மைப்படுத்தி இதுவே பொருளெனத் துணிதல உரையிற்கியல பென்றவாறு

என்று கூறுவர். யாப்பருங்கலமும் இதனைக் கூறுவது உளங் கொளத்தக்கது.[4] முன்னோர் மொழிகளைப் பொன்னேபோல் போற்றி எடுத்தாண்ட செய்தி நன்னூலிலும் குறிக்கப்பட் டுள்ளது, இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.[5]

இலக்கிய உரைகளைக் காட்டிலும் இலக்கண உரைகளில் மேற்கோள்கள் மிகுந்து காணப்படுகின்றன. யாப்பருங்கல விருத்தியில் ஏறக்குறைய 2500 மேற்கோள்களும், நச்சினார்க் கினியரின் சொல்லதிகார உரையில் 4000-க்கு மேற்பட்ட மேற் கோள்களும், தொல்காப்பியப் பொருளதிகார உரைகளில் 6000க்கும் மேற்பட்ட மேற்கோள்களும் காணப்படுகின்றன. ஆனால் இலக்கிய உரைகளாகிய புறநானூற்று உரையில் ஐம்ப துக்கும் குறைவான மேற்கோள்களும், பத்துப்பாட்டு உரையில் சுமார் 200 மேற்கோள்களும், திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஏறக்குறைய 300 மேற்கோள்களும் காணப்படுவதாகக் கணக்கிட் டுள்ளனர்.[6]

பரிமேலழகர் உரையில் மேற்கோளாட்சி

பரிமேலழகர் தமக்கு முன்னும், தம்முடைய காலத்தும் இருந்த இலக்கிய இலக்கண நூல்களையெல்லாம் முழுதும் கற்று ணர்ந்த முதிர்ந்த அறிஞர். தங்க அணிகலனில் வைரம் பதித்தாற் போன்று தம்முடைய உரையின் இடையே அவ்விலக்கிய இலக் கண அருந்தொடர்களைப் பெய்து, உரைக்கு அழகும் அமைப்பும்

4. யாப்பருங்கலம், பாயிர மேற்கோள்.

5. நன்னூல், 9.

6. தாமோதரன், டாக்டர். அ., திருக்குறள் மேற்கோள் விளக்கம், பக். 20, ஹைடல்பர்க் பல்கலைக்கழகம், மேற்கு ஜெர்மனி, 1970.

சேர்ந்த அருங் கலைஞர். கவிதை நடைகளையே உரைநடையாகத் தம் சொல்லாட்சித் திறத்தால் வடித்துக் கலைப்பண்பு கெழும உரை உருவில் இன்றமிழ் இலக்கியமாகவே தந்துள்ளார். சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும், இலக்கண நூல்களிலும் அவருக்கிருந்த புலமை அளவிடற்கரியதாகும். (இக்கட்டுரையின் இறுதியில் உள்ள மேற்கோள் பட்டியலைக் காண்க.)

பரிமேலழகரும் சங்க இலக்கிய நூல்களும்

சங்க இலக்கியங்களுள் அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, பொருநராற்றுப்படை முதலிய நூல்களைத் தம் உரையில் எடுத்தாண்டுள்ளார் பரிமேலழகர். இவற்றுள்ளும் முதன்மை இடம் பெற்றுத் திகழ்வது புறநானூறேயாகும். ஏறக்குறைய முப்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் புறநானூற்றுப் புலமை இவர்தம் உரையில் காணக்கிடக்கின்றது. எல்லா நூல்களைப் பற்றியும் எடுத்தியம்புவதற்கு இச்சிறு கட்டுரையில் இடமில்லையாயினும் அவர்தம் உள்ளம் கவர்ந்த புறநானூற்றுப் பகுதியில் ஒருசில மட்டும் ஈண்டுக் காண்போம் :

பரிமேலழகரின் முன்னுரையிலேயே — உரைப்பாயிரத்திலேயே புறநானூற்றின் ஆட்சி பொலிவுடன் திகழ்வதைக் காணலாம் :

> தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்க நெறியினும்
> வழீஇயினாரை அந்நெறி நிறுத்தற் பொருட்டு ஒப்பநாடி
> அதற்குத்தக ஒறுத்தல்

என்று உரைப்பாயிரத்தில் எழுதுவர் பரிமேலழகர். இங்கு 'ஒப்பநாடி அதற்குத்தக ஒறுத்தல்' என்னும் தொடர் புறநானூற்றில் வருவதாகும்.

> நீ மெய்கண்ட தீமை காணின்
> ஒப்பநாடி அத்தக ஒறுத்தி (புறம் .10)

என்னும் பாடற்பகுதியின் இறுதித்தொடரே இங்கு எடுத்தாளப் பட்டுள்ளது எண்ணுதற்குரியதாகும்.

> அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
> சிறுகை யளாவிய கூழ் (64)

என்னும் குறட்பாவிற்கு விளக்கவுரை எழுதும்போது சிறுகையான் அளாவலாவது "இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தல்,' (புறம். 188) என்ற புறநானூற்றின் நன்னடையையே தன்னடையாக்குவர் பரிமேலழகர்.

அகப்பொருள் கூறும் காமத்துப்பால் பகுதியிலும் புறப் பொருள்கூறும் புறநானூற்றுப் பகுதியைப் பொருத்தி விளக்குந் திறம் எண்ணுவதற்குரியது. 'இன்பமான நட்பிலேயே துய ரத்தை வரச்செய்ய வல்லவர், துன்பம் தரும் பகையை வெல்லும் வலிமை வேண்டும்போது என்ன ஆவாரோ?' என்று தோழியோடு புலந்து சொல்லியதை வள்ளுவர்,

> துப்பின் எவன்ஆவர் மற்கொல் துயர்வரவு
> நட்பினுள் ஆற்று பவர் (1165)

என்னும் குறட்பாவால் கூறுவர். துப்புப் பகையுமாதலுக்கு இலக்கியச் சான்று தரவிழைந்த பரிமேலழகருக்கு அவர் மனக் கண்முன் வந்து நிற்பது புறநானூற்றுப் பகுதியேயாகும். "துப் புப் பகையுமாதல், துப்பெதிர்ந்தோர்க்கே உள்ளாச் சேய்மையன், நட்பெதிர்ந்தோர்க்கே அங்கை அண்மையன் என்பதனுலும் அறிக" என்ற புறநானூற்றுத் தொடரோடு (புறம். 380) இதனை இயைபுபடுத்தி விளக்குவர் பரிமேலழகர்.

பரிமேலழகரும் காப்பியங்களும்

காப்பியங்களும், காப்பியக் கருத்துகளும் பரிமேலழகரின் விளக்கத்திற்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளன. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் முதல் தேவரின் சீவக சிந்தாமணி வரை அவர் எடுத் தாண்ட திறம் எண்ணியெண்ணி வியத்தற்குரியதாய் இலங்கு கின்றது. இராமாயணக் கருத்தும், மணிமேகலைக் குறிப்பும்

அவருடைய உரையில் ஆட்சி பெற்றுள்ளன. தமிழகத்தின் தவக் குறைவால் இழந்த பல்வேறு இலக்கியங்களுள் ஒன்ருன 'வளையா பதி' பற்றிய அரிய குறிப்பும் இவர்தம் உரையில் காணக் கிடப்பது குறிப்பிடத்தக்கது.

காப்பியங்களிலேயே அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தது சீவகசிந்தாமணி போலும்! பதினைந்திற்கும் மேற்பட்ட இடங்களில் சிந்தாமணியின் இலக்கியச் சிறப்பு அவருடைய உரை விளக்கத்தில் இழையோடியிருப்பதைக் காணலாம்.

காப்பியத் தலைவனை சீவகனின் தம்பி விபுலன் நின்ற வீரக் காட்சியினை 'மறனிழுக்கா மானத்திற்குச்' சான்று காட்டுவர் பரிமேலழகர் (குறள் 384). "குற்றமாய மானத்தின் நீக்குதற்கு, 'மறன் இழுக்கா மானம்' என்ருர். அஃதாவது,

> வீறின்மையின் விலங்காம்என மதவேழமும் எறியான்
> ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில் என்றெறியான்
> மாறன்மையின் மறம்வாடும்என் றிளையாரையும் எறியான்
> ஆறன்மையின் முதியாரையும் எறியான்அயில் உழவன்

என்னும் இச் சீவக சிந்தாமணிப் பாடலையே [7] அதற்கு விளக்கமாகக் காட்டுவர். சுருங்கச் சொல்லலையே உயிர்த்திறனுக— உரைத்திறனுகக் கொண்ட பரிமேலழகர் விபுலனின் தோற்றத்தையே தம்மாற்றத்திற்குப் பயன்படுத்திய திறம் போற்றற்குரியதன்ருே?

பல பகுதிகளைச் சீவக சிந்தாமணியிலிருந்து உரையாசிரியர் எடுத்தாண்டிருப்பினும் முத்தியிலம்பகத்திலிருந்து மிகுதியான கருத்துக்களை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ்க் காப்பியங்களிலேயே பரிமேலழகர் மிகுதியாக மேற்கோள் காட்டுவது சிந்தாமணியிலிருந்துதான் என்பதை எண்ணினுல் அவருக்குள்ள பற்றையும் படிப்பார்வத்தையும் உணரமுடிகிறது. சிந்தாமணிக் காப்பியத்தின் சின்னஞ்சிறு 'உறுப்பு முதல் அறக்கொடியோன்

7. சீவகசிந்தாமணி, 2261.

வரை பரிமேலழகரின் உரையில் விரவிவரும்போது அக்காப்பியத்தின் மணம் நூல் முழுமையும் பரவிக் கிடக்கக் காண்கின்றோம்.[8]

அவ்வாறே சிலம்பின் தலைவி கண்ணகியின் கூற்றையும் கூர்ந்து நோக்கியவர் பரிமேலழகர். 'அன்புடைமை' அதிகாரத் தோற்றுவாயில் 'வாழ்க்கைத் துணைமேல் அன்பு இல்லையாகில் இல்லறம் இனிது நடவாது' எனக் கூற விழைந்த உரையாசிரியர் பரிமேலழகர், காப்பியத்தலைவி கண்ணகியின் கூற்றையே எடுத்துக் காட்டிச் சிலம்பு தன் உள்ளத்துள் ஒலித்த ஒலியை உரையின் வாயிலாக எழுப்புகின்றார்:

> வாழ்க்கைத் துணைமேல் அன்பு இல்வழி இல் லறம் இனிது நடவாமை,
>
> அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை
>
> என்பதனானும் அறிக.

என்னும் அவர்தம் உரைக்கூற்று கண்ணகியின் கூற்றேயாகும்.[9]

மகனை முறைசெய்த மனுநீதிச் சோழனையும் தன்கை குறைத்த பொற்கைப் பாண்டியனையும் 'முட்டாமல் முறைசெய்த' மன்னர்க்குச் சான்றாகப் பரிமேலழகர் கூறுவர்.[10] 'தம்மை வெறுத்து நீங்கியவர்பின் செல்லாமல் மானத்தோடு நிற்கும் பெருந் தகைமை காமநோய் உற்றவர் அறியுந் தன்மையன்று' என்னும் கருத்துப் பொதிந்த குறளுக்கு விளக்கவுரையாகப் பரிமேலழகர் சிலம்பின் உயிர்ப்பாட்டான கானல்வரிப் பாட்டிலிருந்து மேற்கோள் காட்டுந்திறன் எண்ணி மகிழ்தற்குரியது.

8. வீராசாமி, டாக்டர். தா. வே., பரிமேலழகரும் காப்பியமும், (கட்டுரை) திருவனந்தபுரம் தமிழ்ச்சங்க 4-வது ஆண்டு மலர் – பக். 135, 1967.
9. சிலம்பு. 16 : 71-73.
10. குறள். 547, சிலம்பு. 20:53.55; 23:42-53.

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று (1255)

என்னும் குறளின்கீழ்ப் பரிமேலழகர் 'நம்மை மறந்தாரை நாமும் மறக்கற்பாலம் என்றாட்குச் சொல்லியது' என்பர். இவ்வரிகள், நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்' என்ற மாதவியின் மணிமொழிகளையன்றோ நினைவுகூர வைக்கின்றன?[11] இவ்வாறு சிலம்பின் சிறப்பும் உரையாசிரியரின் உள்ளமும் இன்னமும் பல் வேறிடங்களில் ஒன்றி விளங்குவதைக் காணலாம்.

பரிமேலழகரும் கீழ்க்கணக்கு நூல்களும்

பரிமேலழகர் உரையில் சங்கநூலான புறநானூறு முதலிடம் பெற்று விளங்குவதுபோலவே கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார் முதன்மை பெற்று விளங்குகிறது. இருபதிற்கு மேற்பட்ட இடங்களில் நாலடியின் நற்றமிழ் நனிசிறந்து விளங்குகின்றது.

'தன் இன்பத்தை விரும்பாது தான் மேற்கொண்ட செயலை முடிக்கின்றவன் தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்குகின்ற தூண்' என்னும் கருத்தமைந்த குறட்பாவிற்கு (615) ஏற்பப் பரிமேலழகரும் 'மதலையாய் மற்றதன் வீழூன்றியாங்கு' (நாலடி 197) என்னும் நாலடித் தொடரையே அரணாகக் காட்டி ஈரடிக் குறட்பாவின் எளிய கருத்தை இன்னும் எளிதாக்குவர்.

உரையில் தாம்கூறும் இலக்கணப் பொருளுக்குப் பிறிதொரு இலக்கிய மேற்கோளை எடுத்துக் காட்டுதல் இவருடைய இயல்பாகும்.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் (200)

என்னும் குறட்பாவின் விளக்கவுரையில், "சொல்லின் என்பது இருவழியும் மிகையாயினும் சொற்பொருட் பின்வருநிலையென்னும் அணிநோக்கி வந்தது, 'வைகலும் வைகல் வரக்கண்டும்' என்பது

11. சிலம்பு. 7: 32.

போல'' என்று நாலடியாரின் இலக்கியத் தொடரையே இலக்கண மேற்கோளாகக் காட்டுவர்.

'மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை' (556) என்னும் குறட்பாவின் விளக்கவுரையில் மன்னுதற்கு ஏது புகழ் ஆதல், 'இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக' என்பதனுலும் அறிக' என்று நான்மணிக்கடிகைத் தொடரை (15) மேற் கோளாகக் காட்டுவர்.

இன்னும் நீதிநூல்களுள் திரிகடுகம், பழமொழி நானூறு போன்ற நூல்களின் ஆட்சியையும் இவர்தம் உரையில் காணலாம்.

பரிமேலழகரும் இலக்கண நூல்களும்

வள்ளுவரின் சொல்லாட்சித்திறனை ஆய்வு செய்யும்போதும், சொற்களுக்கு நயமும் பொருளும் கூறும்போதும் தொல்காப்பிய மேற்கோள்களைக் காட்டி விளக்குதல் பரிமேலழகருடைய இயல் பாகும்.

> மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ் வார் (3)

என்பது குறட்பா. 'ஏகினன்' என்று இறந்த காலத்தில் கூறி யமைக்குத் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோளாகக் காட்டிப் பொருள் பொருத்தமுற இனிது உரைக்கின்றார்:

> அளபால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினன் என இறந்த காலத்தால் கூறினார்; என்னை?
>
> வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
> ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
> இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
> விரைந்த பொருள என்மனார் புலவர் (தொல். வினை. 44)
>
> என்பது ஓத்தாகலின்.''

இவ்வாறே நீத்தார் பெருமை அதிகாரத்தில் (26) 'செயற்கு அரியவாவன இயமம், நியமம் முதலாய எண்வகை யோக

உறுப்புகள்' என்று தம் கருத்தை விளக்கிவிட்டுப் பிறர் கருத்தை மறுக்கும்போது கருத்தினை மேலும் வலிவுடையதாக்கத் தொல்காப்பியச் சொல்லாட்சியையே பயன்படுத்துவதும் கருதத்தக்கது:

> நீரில் பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கில் தாபதபக்கம் என்பாரும் (தொல். புறத். 20) உளர். அவை நியமத்துள்ளே அடங்குதலின், நீத்தாரது பெருமைக்கு ஏலாமை அறிக

என்பது பரிமேலழகர் கூற்றும். இன்னும் பல குறட்பாக்களில் பரிமேலழகரது தொல்காப்பிய நுண்மாண் நுழைபுலம் அவர்தம் உரை விளக்கங்களில் கண்டு ஆய்ந்து இன்புறத்தக்கதாய் அமைந்துள்ளது. தொல்காப்பியமேயன்றிப் பின்னர்த் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலும், இறையனார் களவியலும் இவர்தம் உரையில் மேற்கோள்களாகத் துலங்குகின்றன.

குறளுரையில் குறள் மேற்கோள்

உரை எழுதிய நூலையே உரையில் எடுத்தாளுதல் பரிமேலழகரின் தனிச்சிறப்பாகும். 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறளினையும் நுணுகி நுணுகிக் கற்று, பல்வேறு குறட்பாக்களின் உரைகளிலும்-அக் கருத்துக்களையும் தொடர்களையுமே - எழுபத்தைந்திற்கும் மேற்பட்ட இடங்களில் எடுத்தாளுவது இவர்தம் நினைவுத் திறனுக்கு நிலைத்த சான்றாகும். 755-ஆம் குறட்பாவின் விளக்கவுரையில் 660-ஆம் குறட்பாத் தொடரையே எடுத்துக்கூறி விளக்குவர். அது வருமாறு :

> அவற்றோடு கூடி வருதலாவது ஆறில்ஒன்றாய வருதல். அவ்வாறு வாராத பொருளீட்டம், 'பசுமட் கலத்துணீர்' (660) போலச் செய்தானையும் கொண்டு இறத்தலின, அதனைப் புல்லார என்று ஒழியாது புரளவிடல் என்றுங் கூறினார்

இங்ஙனம் கருத்தினை விளக்குதற்கு ஏற்ற இணையான கருத்துக்களைத் தம்சிந்தனையாற்றலால் பெய்து எளிமையாக விளக்குவது இவருடைய உரையியல்புகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.

முடிவுரை

திருவாய்மொழியும், திருக்கோவையாரும் இவருடைய உரையினுள் இடம் பெற்று விளங்குகின்றன. இறைமாட்சி அதிகாரத்தில்

"திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும் என்று பெரியாரும் பணித்தார்" என்றமையான் இவர்தம் சமய உள்ளம் நனிவிளங்கும்.

இலக்கிய உலகம் இழந்த 'ஏரம்பம்' பற்றிய கணிதநூல் குறிப்பும் கல்வி அதிகாரத்தில் 392 ஆம் குறட்பா உரையினுல் அறிய முடிகிறது. இன்னும் அவர் எடுத்துக் காட்டிய சில மேற்கோள் பாடல்கள் இன்ன நூலைச் சார்ந்தவை என்றும் அறியஇயலாத நிலையிலுள்ளன.[12] இந் நூல்கள் அவர் காலத்து வழக்கிலிருந்து பின்னர் அழிந்திருக்கலாம்.

இப்படி எத்தனை எத்தனையோ அரியபல செய்திகளைப்-பற்பல நூற் செய்திகளைப் பார்க்கும்போது பன்னூற் கடலையும் கடைந்தெடுத்து அவர்தரும் அமுத மேற்கோள்கள் கற்பார்க்கு அரும் பெரும் விருந்தாக அமைகின்றன.

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த உரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி.[13]

12. குறள், 62, 392, 566, 732, 1058, 1099.

13. தொண்டை மண்டல சதகம், மேற்கோள் பாடல். 41.

பரிமேலழகர் மேற்கோள் பட்டியல் (அகரநிரல்)

எண்.	நூல்கள்	அறம்	பொருள்	இன்பம்
1.	அகநானூறு	210	—	1109,1120,1161
2.	இராமாயணம்	—	773	—
3.	இறையனார் களவியல்	—	—	1099
4.	ஏரம்பம் பற்றிய நாற்செய்தி	—	392	—
5.	கலித்தொகை	144,167,187, 205,293.	455,829, 929,1074 பண்புடைமை	1152,1221,1293, 1301 பசப்புறுபருவரல், நிறையழிதல்.
6.	குறுந்தொகை	—	—	1250,1255
7.	சிலப்பதிகாரம்	9,169, அன்புடைமை	547,743, 1034.,	1235,1255
8.	சீவகசிந்தாமணி	275,276,320,373	384,407,437,450, 624,731,739,771, 898,905,1030.	1182
9.	திரிகடுகம்	—	573	—

10.	திருக்கோவையார்	277	—	—
11.	திருவாய்மொழி	349,370	இறைமாட்சி	—
12.	தொல்காப்பியம்	3,26,377	402,899,960,1043	—
13.	நற்றிணை	—	401,580	
14.	நாலடியார்	4,87,88,96,157, 200,224,270,272, 305,330.	391,401,425,593,615, 787,797,895,971,1069, 1070.	
15.	நான்மணிக்கடிகை	77,121.	548,556.	
16.	நெடுநல்வாடை	—	—	1144
17.	பட்டினப்பாலை	120	1032	—
18.	பதிற்றுப்பத்து	—	432	—
19.	பரிபாடல்	17,23	—	—
20.	பழமொழி நானூறு	—	—	பொழுது கண்டிரங்கல்
21.	புறநானூறு	39,64,72,100,110 207,231,234, அறத்துப்பால் உரைப் பாயிரம், அறன் வலியுறுத்தல்.	384,395,399,546, 612,778,785,893, 925,948,970,989, 1029,1034 அரசியல், அங்கவியல், பெரியாரைத் துணைக்கோடல்,	1090, 1165,1313.

22.	புறப்பொருள் வெண்பாமாலை	118	384,432,566,762,764, 766,771,774,960.	—
23.	பொருநராற்றுப்படை	—	811	—
24.	மணிமேகலை	—	543,1043	—
25.	முத்தொள்ளாயிரம்	—	576	—
26.	வளையாபதி	107	822	—

குறளுரையில் குறள் மேற்கோள்கள்

அறத்துப்பால்	பொருட்பால்	இன்பத்துப்பால்
24-600, 716; 26-971;	382-383; 383-40;	1081-1082;
28-29; 36-37; 41-44;	383-672; 385-477;	1101-1328;
43-44; 43-(9); 43-1107;	385-512; 395-1069;	1122-1141;
50-240; 56-59;	435-1173; 445-389;	1128-1127;
60-268; 102-237;	481-1028; 483-484;	1131-1132;
111-561; 140-644;	541-578; 542-557;	1275-1279;
116-135; 168-1042;	581-19, 22; 582-753;	1299-76;
190-(13); 196-720;	595-596; 596-290	1317-1318.
207-208; 218-910;	634-(65); 660-755;	

222-223 ; 238-240 ;
239-240 ; 265-263 ;
265-305 ; 268-269 ;
279-144 ; 297-323 ;
300-323 ; 350-(36);
356-358 ; 357-358 ;
360-311 ; 361-362 ;
373-396.

681-70; 746-747;
752-953; 757- (8);
784-1086; 802-801;
803-801; 833-847;
906-908; 934-939;
963-1053; 980-978.

குறிப்பு :

வளைவுக் குறியினுள் உள்ள எண்கள அதிகார எண்களைச் சுட்டும். பிற குறள் எணகளைக் குறிப்பன.

5

பரிமேலழகரின் பல்கலைப் புலமை

இலக்கியம்

உலக வாழ்வின் பல்வேறு கூறுகளையும் பெற்று விளங்குவது இலக்கியம். ஒரு சமுதாயத்தின் விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை முதலியவற்றைப் பண்படுத்தி வாழ்வைச் செம்மையாக்குவதும் இலக்கியமே. எனவேதான் புலவர்களைச் சட்டமியற்றும் ஆளுநர்களைக் காட்டிலும் ஆற்றல் மிக்கவர்கள் என்றனர் அறிஞர் பெருமக்கள்.[1] இத்தகைய ஆற்றல் மிக்க புலவர்கள் படைத்த இலக்கியங்களுக்குப் பொருள் காண்பது என்பது எளிதான செயலன்று. இலக்கியம் படைத்த புலவர் பெருமக்களின் உள்ளக் கருத்தைத் தம் நுண்ணறிவால் நுணுகிக் கண்டறியும் திட்ப நுட்பமும், ஒப்பு நோக்கியும் உற்று நோக்கியும் ஆயும் திறனாய்வுத் திறனும் உரையாசிரியர்களுக்கு இல்லையேல் அவர்களுடைய பணி எளிதாகவும் சிறப்பாகவும் அமையாது.

பல் துறை அறிவு

ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக் கூறுகள் வேண்டும் என்பர் அறிஞர். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற காலவறிவும், இக்காலத்து இச் சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்க வழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத்தொடர் ஒடிக்கிடக்கும் முறை இதுவென்ற நடை

1. Shairp. J. C., Aspects of Poetry P. 105.

யறிவும், நாட்டின் வரலாற்றறிவும் இன்னபிறவும் இருந்தால்தான்-உரையெழுதும்போது நினைவுக்கு வந்தால்தான்-பொருளை முரணின்றிக் காண முடியும்.[2] எனவே நூலின் பொருள் காண விழைவார்க்குப் பல்துறையறிவு பெரிதும் வேண்டும் என்பது தேற்றம். இத்தகைய பல்துறையறிவினையும் பெற்றுப் புலமைத்திறத்தில் சிறந்து விளங்கியவர்கள் பண்டைய உரையாசிரியர்கள். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட முதல் நூல்களுக்கு-உரைகள் செய்த உரையாசிரியர்களைத் தலைசிறந்த திறனாய்வாளர்கள் என்றே கூறலாம்.

பரிமேலழகர்

இத்தகைய உரையாசிரியர்களுள் சிறந்தவராகக் கருதப்படுபவர் பரிமேலழகர்; வடமொழி தமிழ் ஆகிய இருமொழிப் புலமையும் நிரம்பப்பெற்றவர்; நுட்பமாகப் பொருளுணர்ந்து ஆழ்ந்து சிந்தனை செய்து அரிய கருத்துக்களை விளக்குவதில் வல்லவர்; வடமொழி நூல்களின் கருத்துக்களைத் தழுவியும், ஒப்பிட்டும் உரையெழுதும் போக்குடையவர். அதனால் சில இடங்களில் நூலாசிரியரின் உண்மைக் கருத்தை உணரமுடியாமற் போயினும், பல இடங்களில் திருக்குறளின் பொருளாழத்தையும் நயத்தையும் புலப்படுத்தியவர்.[3] இவர்தம் உரை நுட்பமாகவும், செறிவாகவும் அமைவதற்கு உறுதுணையாய் அமைந்தவை அவர்தம் இருமொழிப் புலமையறிவும், சமய அறிவும், அரசியலறிவும், அறநூலறிவும் இன்னபிற துறைப் புலமையுமே காரணம் எனலாம்.

பரிமேலழகரின் வடமொழிப்புலமை

பரிமேலழகர் வாழ்ந்த காலம் வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடை வழங்கி வந்த காலம். அக் காலத்தில் வாழ்ந்த இவரும் அச் சூழலோடு ஒன்றி வாழ்ந்திருத்தல் இயல்பே. ஆயினும்

2. மாணிக்கம், டாக்டர், வ. சுப., உரைநெறிகள் (கட்டுரை), An Insight into Tamilology, Dr. T.E.G. 61st Birthday Comme• moration Volume, 1972, p. 24.
3. வரதராசன், டாக்டர், மு, தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1972, பக். 184.

அவருடைய உரைநடை இதற்கு விதிவிலக்காக அமைந்தது. மணிப் பிரவாள நடையைக் கொள்ளாது, வடமொழியறிவினைச் சுட்டிக் காட்டும் தூயதமிழ் நடையுடன் அமைந்துள்ளது போற்றற்குரிய தாகும்.

வடநூல் துறையும் தென்திசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்

என்று திருக்குறள் உரைச் சிறப்புப்பாயிரம் இவரைப் புகழ்ந்து கூறுவது இங்கு எண்ணத்தக்கது.

பரிமேலழகர் வடமொழியில் உள்ள இலக்கணம், இலக்கிய இயல்புகள் ஆகியவற்றை நன்குணர்ந்து தக்க இடங்களில் அவற்றைப் பயன்படுத்தியுள்ளார். முதற்குறட்பாவிலேயே 'ஆதி பகவன்' என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை, 'வடநூன் முடிவு'[4] என்று கூறுவர்.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்[5]

என்னும் குறட்பாவின் விளக்கவுரையில் பரிமேலழகர் 'குற்றங்கள் ஐந்தாவன. அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்பன; இவற்றை வடநூலார் பஞ்சகிலேசம் என்ப' என்று கூறிச் செல்வர்.

> 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்'[6]
>
> 'தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூல் உடையார் கூறியவாறு கூறுகின்றமையின் ஈண்டு வினைத் தூய்மையும் உடன் கூறினார்.'[7]

4. குறள், 1.
5. குறள், 38.
6. குறள், உரைப்பாயிரம்.
7. குறள், 662.

'இது புணர்ச்சி பிரிவு என இருவகைப்படும், ஏனை இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவோ எனின், இவர் பொருட் பாகுபாட்டினை அறம், பொருள், இன்பம் என வடநூல் வழக்குப் பற்றி ஓதுதலான் அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினார் என்க.'[8]

'ஈண்டுப் பிரிவினை வடநூலார் மதம் பற்றிச் செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவி என நால்வகைத்தாக்கிக் கூறினார்'[9]

முதலான எடுத்துக் காட்டுகள் பரிமேலழகரின் வடமொழிப் புலமைக்குச் சான்றாகும்.

இவ்வாறே 'குற்றங்கடிதல்' அதிகாரத்தின் முன்னுரையிலும் வடநூலார் கருத்தை இயைபுபடுத்திக் காட்டுவர்: "குற்றங்கடிதல், அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட குற்றங்கள் ஆறனையும் அரசன் தன்கண் நிகழாமற் கடிதல். இவற்றை வடநூலார் பகைவர்க்கம் என்பர்."

இல்லறவியலின் இறுதிக் குறட்பாவில் "இனி மனு முதலிய அற நூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங்கும்."[10] என்று வடநூற் பொருளோடு தொடர்பு படுத்துவர்.

கொடியவர்களை அரசன் ஒறுப்பது இயல்பு என்பது குறட்பாக் கருத்து. 'கொடியவர் என்றது - தீக் கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், பிறனில் விழைவார் என்ற இவர் முதலாயினாரை; இவரை வடநூலார் ஆததாயிகள் என்ப.'[11] வடநூலார் குறிப்பிடும் ஆததாயிகளைக் கொடியவர்களோடு பொருத்தி ஆய்கிறார். வடநூலார் பொருந்துதலைச் சந்தி என்றும், பிரித்தலை விக்கிரகம் என்றும்

8. குறள், காமத்துப்பால் உரை, அவதாரிகை.
9. குறள், 1330.
10. குறள், 240.
11. குறள், 550.

கூறுப[12] என்று கூறுவதாலும் இவர்தம் வடமொழிப் புலமை நன்கு புலனாகும்.

இத்தகைய புலமையினை உணர்த்தும் குறிப்புகள் பல இன்னும் குறள் உரையகத்துக் காணலாம்.

அறநூல் அறிவு

பன்னூல்களையும் கற்றுப் பேரறிவு பெற்று விளங்கிய பரி மேலழகர் ''அறநூல்''களையும் நன்கு ஆய்ந்தவர் என்பது கீழ்வரும் உரைவிளக்கங்களால் நன்கு புலனாகும்.

'கொல்லாமையின்' சிறப்பை வள்ளுவர் 'கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது வாழ்நாளின் மேல் கூற்றுச் செல்லாது' என்று கூறுவர். இதற்குப் பரிமேலழகர் விளக்கம் அளிக்கும்போது,

> 'மிகப் பெரிய அறம் செய்தாரும் மிகப் பெரிய பாவம் செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பர் என்றும் அறநூல் துணிபு, பற்றி. இப்பேரறம் செய்தான் தானும் கொல்லப்படான்; படானாகவே, அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றி எய்தும் என்பார், வாழ்நாள் மேல்கூற்றுச் செல்லாது என்றார்''[13]

என்று கூறுவர்.

இவ்வாறே வினைத்தூய்மை அதிகாரத்தில்,

> 'இறந்த மூப்பினராய இருமுது குரவரும் கற்புடைய மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண், தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக என்னும் அறநூற் பொது விதியை'

12. குறள், 663.
13. குறள், 326.

விளக்கிக் கூறி அதன் பொருத்தமின்மையையும்[14] கூறித் தம் தமிழ் உள்ளத்தை இனிது புலப்படுத்துவர் பரிமேலழகர்.

எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு[15]

என்னும் குறட்பாவில், 'செய்யத்தக்கனவற்றை முடிக்கும் உபாயம் அறிந்து தொடங்குக' என்று விளக்கவுரை தரும் பரிமேலழகர் 'உபாயமாவது கொடுத்தல், இன்சொற் சொல்லல் வேறுபடுத்தல், ஒறுத்தல் என நால்வகைப்படும்' என்று கூறுவர். இவற்றை வடநூலார் 'தான, சாம, பேத தண்டம் என்பர்' என்று இயைபு படுத்தியும் கூறுவர். இக் கருத்தினை இனிய தமிழால் தந்திருப்பது எண்ணி மகிழ்தற்குரியதாம். அவர்தம் சொல்லாற் றலும் இங்கு இனிது புலனாகும்.

நீதி நூலுடையார் இவை அரசர்க்குரிய என்று கூறும் செய்திகளைப் 'பொச்சாவாமை' அதிகாரத்தில்[16] விரித்துக் கூறுவர். மூவகையாற்றல், நால்வகை உபாயம், ஐவகைத் தொழில், அறுவகைக் குணம் முதலாய செயல்களைக் குறிப்பிட்டுவிளக்குவர். 'தெரிந்து தெளிதல்' அதிகாரத்தில் 'உயிரச்சம் நான்கின்' என்பதற்குத் தம் வடநூற் புலமை கொண்டு அவர் விளக்கம் தருகின்றார்.[17] இவற்றாலும் 'நீதிநூல் வழக்குப்பற்றி நாநலம் என்னும் நலன் என்றும் கூறினார்[18] என்பதனாலும், பொருட் பாலில் அரசியலின் தொடர்புடைய பல பொருள்களை விரிக்கும் பகுதியாலும் இவருடைய நீதிநூற் புலமை தெளிவாகும்.

அரசியலறிவு

திருக்குறள் பொருட்பால் பகுதி வள்ளுவரின் அரசியற் புலமைத்திறத்தைத் தெளிவாக உணர்த்துவது போலவே

14. குறள், 656.
15. குறள், 467.
16. குறள், 538.
17. குறள், 501.
18. குறள், 641.

இப்பகுதிக்குப் பரிமேலழகர் வரைந்த உரை விளக்கங்களும் பரிமேலழகரின் அரசியற் புலமையை இனிது உணர்த்துகின்றன

'அரசியல்' அதிகாரத் தோற்றுவாய் கூறும்போழ்தே 'விங்கு நீர் வேலி வாழ்பவருக்கு ஆவியாம் அரசரான' மன்னனது இயல்பினைத் தெளிவாகக் கூறுகின்றார். இறைமாட்சி அதிகார வைப்பு முறைக்கான காரணத்தை விளக்கும்போது,

> "அரசனீதியாவது - காவலை நடாத்தும்முறை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்து, மலர்தலையுலகிற்கு உயிரெனச் சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்"

என்று மன்னன் மக்கள் வாழ்வில் இடம் பெறும் முதன்மைத் தன்மையினைச் சுட்டுவர்.

> மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்[19]
> மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன தன்னுயிர்[20]
> மன்னுயிர் ஞாலக்கு இனனுயிர ஓககும்இறை[21]

என்பதனை நன்குணர்ந்த பரிமேலழகர் 'மலர்தலையுலகிற்கு உயிரெனச் சிறந்த அரசர்' என்று சிறப்பிக்கின்றார் போலும். "'திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும் (திருவாய்மொழி, பதிகம் 34, பா. 8) என்று பெரியாரும் பணித்தார்" என்று தன்வழிபடு கடவுளையே மன்னனாகக் கண்ட பான்மையையும் அவர்தம் உரைவாயிலாக அறியலாம்.

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறும் உடையான் அரசருள் ஏறுபோல்வான் (381) என்றார் வள்ளுவர். இதன் இன்றியமையாமையை உணர்ந்த பரிமேலழகர் 'ஆறும் உடையான்' என்றதனால், அவற்றுள் ஒன்றில் வழியும் அரசநீதி

19. புறநானூறு, 186.
20. மணிமேகலை, துயிலெழுப்பிய காதை, 11-12.
21. பெருங்கதை, இலாவாண காண்டம், அவலந்தீர்ந்தது, 17-18.

செல்லாது என்று விளக்குவது அவர்தம் அரசியல் அறிவுக்குக் குறிக்கத்தக்க சான்றாகத் திகழ்கிறது.

> இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு[22]

என்னும் குறட்பா அரசனது முக்கியமான பணிகளைச் சுட்டிச் செல்கிறது. இக் குறட்பாவிற்கு விளக்கம் வரைந்த பரிமேலழகர் உரை விளக்கத்தில் பொருள்கள், அவை வரும் வழிகள், அவற்றைச் செலவிடும் வழிகள் முதலானவற்றை இனிது விளக்குகின்றார்:

> "பொருள்களாவன—மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன—பகைவரை அழித்தலும், திறை கோடலும், தன்நாடு தலையளித்தலும் முதலாயின. 'பிறர்' என்றது—பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினார். கடவுளர், அந்தணர் என்ற இவர்க்கும் புகழிற்கும் கொடுத்தலை அறப் பொருட்டாகவும், யானை, குதிரை, படை, நாடு, அரண் என்ற இவற்றிற்கும், பகையொடு கூடலிற் பிரிக்கப் படுவார்க்கும், தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவார்க்கும் கொடுத்தலைப் பொருட் பொருட்டாகவும், மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா முதலிய செய்தற்கும் இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களால் நுகர்வனவற்றிற்கும் கொடுத்தலை இன்பப் பொருட்டா கவும் கொள்க".

இயற்றல், ஈட்டல் காத்தல் வகுத்தல் முதலானவற்றிற்குப் பரிமேலழகர் இங்குத் தருகின்ற உரைவிளக்கம் அரசியலறிவுத் திறன் மிகுந்த அவர்தம் ஆற்றலையன்றோ விளக்குகின்றது? இவ்வாறே மக்கட்கு அரசனது சுற்றங்களாலும், பரிவாரங்களாலும் நலிவு வாராமல் காக்கவேண்டும் என்பதனையும் 387 ஆம் குறட்பாவில் நுட்பமாகக் கூறுவர்.

22. குறள், 385.

'குடியோம்பல், [23] என்று கூறுமிடத்து 'தளர்ந்த குடிகளைப் பேணல்' என்றார். இவ்விடத்து அவர் கூறுகின்ற விளக்கம் அக்காலத்து வழக்கிலிருந்த 'ஆறிலொருபங்கு' வரிப்பொருள் பற்றியதாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாம்.

> 'அஃதாவது ஆறில் ஒன்றாய பொருள்தன்னையும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல் வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல் வேண்டின் இழத்தலுமாம்'

என்று விளக்கம் தருகின்றார். இதனால் தளர்ந்த குடிகளைப் பாதுகாக்கும் வழிமுறை குறித்த விளக்கம் நன்கு தெளிவாகின்றது.

இவ்வாறே மன்னன் எவ்வாறு மக்களுக்கு வரும் துன்பங்களைப் போக்க வேண்டும் என்பதையும் தெளிவுறுத்துகிறார் :

> உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
> பெற்றியார்ப் பேணிக் கொளல் [24]

என்பது குறட்பா. இதன் உரைவிளக்கத்தில் தெய்வத்தான் வரும் துன்பங்கள், மக்களான் வரும் துன்பங்கள், அவற்றைக் காக்கும் முறை முதலானவற்றைப் புலப்படுத்துகின்றார் :

> 'தெய்வத்தான் வருந் துன்பங்களாவன—மழையினது இன்மை மிகுதிகளானும், காற்றுந் தீப் பிணி என்றிவற்றானும் வருவன; அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யுஞ் சாந்திகளால் நீக்கப்படும். மக்களான் வருந் துன்பங்களாவன—பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் என்றிவர்களான் வருவன; அவை சாமபேத தான தண்டங்களாகிய நால்வகை உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும். முற்காத்தலாவது — தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களான் அறிந்து அச் சாந்திகளாற் காத்தலும், மக்களான் வருவனவற்றை அவர் குணம் இங்கித-

23. குறள், 390.
24. குறள், 442.

> ஆகாரம் செயல் என்பனவற்றான் அறிந்து அவ் வுபாயங்களுள் ஒன்றாற் காத்தலுமாம்.'

இவ் விளக்கத்தால் அரசியலறிவு மட்டுமேயன்றி மக்களுடைய இயல்பினையும், செயல்களையும் அவர்களுடைய உள்ளமறிந்தும், உளவியலறிவு கொண்டும் ஆய்தல் வேண்டும் என்னும் உளவியலறிவுக் குறிப்பும் இங்குப் பெறப்படுதல் எண்ணுதற்குரியது. இங்கிதம் — குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில் [25] ஆகாரம் - குறிப்பின்றி நிகழும் வேறுபாடு [26] என உரைவிளக்கம் தருவதும் இங்கு உற்றுநோக்கற்குரியது. எனவே இங்கிதம் அறிதலினும் ஆகாரமறிதல் அரிதாம்.

தக்கவழியில் செய்யப்படாத முயற்சி பலர்துணையாக நின்று காத்தபோதிலும், குறையாகிவிடும். [27] எனவே 'முடிந்த உபாயத்தால்' முயன்று வெற்றிபெற வேண்டும் என்று விளக்கம் தருவர் பரிமேலழகர்.

> 'முடியும் உபாயத்தான் முயறலாவது—கொடுத்தலைப் பொருள் நசையாளன் கண்ணும், இன்சொல்லைச் செப்பமுடையான், மடியாளன், முன்னே பிறரொடு பொருது நொந்தவன் என இவர்கண்ணும், வேறுபடுத்தலைத் துணைப்படையாளன், தன் பகுதியோடு பொருந்தாதான் என இவர்கண்ணும், தேறப்படாத சிறுமக்கள் கண்ணும், செய்து, வெல்லும் ஆற்றான் முயறல்'

இவ் விளக்கத்தால் எவ்வெவ் இடத்து எவ்வெவ் வுபாயத்தைச் செலுத்த வேண்டுமோ அவ்வாறு செலுத்தி முயன்று வெற்றிபெறுதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. அரசியல் அமைப்பிற்கும்,

25. இங்கிதம : முகம், கண, கை, முதலிய உறுப்புகளின் செய்கையால் குறிப்பாகத் தெரிவிப்பது.
26. ஆகாரம் : அவரவருடைய குறிப்பில்லாமலே தானகவே முகத்திலும உடம்பிலும் தோன்றும் வேறுபாடு.
27. குறள், 468.

ஆட்சித் திறனுக்கும் இவ் விளக்கக் குறிப்பு இக் காலத்தும் பொருத்தமுற விளங்குவதைக் காணலாம்.

அரசனுக்குரிய பொருள்கள் உறுபொருள், உல்குபொருள், தன் ஒன்னார்த் தெறுபொருள் என்பனவாம்.[28] உறுபொருள் என்பதற்கு 'வைத்தார் இறந்து போக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்த பின் கண்டு எடுத்ததூஉம், தாயத்தார் பெறுததூஉமாம்' என்றும், உல்குபொருளைச் சுங்கப்பொருள் (கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது) என்றும், தெறுபொருள் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருள் என்றும் விளக்குவதும் இவர்தம் அரசியலறிவுக்குச் சான்றாகத் திகழ்கின்றன.

பொருட்பால் விளக்கம் முழுவதும் இவருடைய அரசியலறிவின் அடிப்படையால் எழுந்த உரை விளக்கம் என்று கூறினும் அஃது மிகையன்று.

மருத்துவப் புலமை

'மருந்து' அதிகாரத்திற்கு எழுதப்பட்ட உரை பரிமேலழகரின் மருத்துவப் புலமையினை இனிது உணர்த்துகின்றது. அதிகாரத்தின் தோற்றுவாயிலேயே மக்களுக்குப் பிணிவரும் காரணத்தைக் கூறி விளக்குகிறார். பழவினையானும், உணவு, செயல்களது ஒவ்வாமையானும் பிணிகள் வரும் என்று கூறுவர்.

> மிகினும் குறையினு நோய்செய்யு நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று[29]

என்பது குறட்பா. 'உணவும் செயல்களும் ஒருவன் பகுதிக்கு ஒத்தவளவினவன்றி அதனின் மிகுமாயினும், குறையுமாயினும் ஆயுள் வேதமுடையோரால் வாதம் முதலாக எண்ணப்பட்ட மூன்று நோயும் அவனுக்குத் துன்பம் செய்யும்' என்பது பரிமேலழகர் உரை. ஆயுள் வேதத்தில் (வைத்திய நூல்)

28. குறள், 756.
29. குறள், 941.

கூறப்படும் கருத்துக்களை அவர் சுட்டுவது இங்கு எண்ணுதற் குரியது. அவ்வாறே வாதப்பகுதி, பித்தப்பகுதி, ஐப்பகுதி என மூன்று பகுப்புகளையும் கூறி விளக்குகின்றார். இறுதியாக 'யாக்கைகட்கு இயல்பாய நோய் மூவகைத்து என்றும், அவை துன்பஞ் செய்தற்குக் காரணம் இருவகைத்து' என்றும், பகுத்தும் தொகுத்தும் கூறுவர்.

உண்ட உணவு செரித்த தன்மையைச் சில குறிகளால் அறிந்து கொள்ளலாம் என்பர். அவை யாவன: யாக்கை நொய்ம்மை, தேக்கின் தூய்மை, கரணங்கள் தொழிற்கு உரியவாதல், பசிமிகுதல் என இவை முதலாயின என்பர். உடலியல் அறிவு இவர்தம் உரை விளக்கத்திற்கு எத்துணை அளவு துணைபுரிந்துள்ளது என்பது இதனால் நன்கு போதரும்.

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து[30]

என்னும் குறட்பாவின் விளக்கவுரையில் மருத்துவ இயலின் நுட்பம் ஒளிர்வதை நன்கு காணலாம். அது வருமாறு:

> "உண்டது அற்றாலும் அதன் பயனாகிய இரதம் அற்றதாகலான் அதுவும் அறல் வேண்டுமென்பார், 'மிகப் பசித்து' என்றார்... மாறுகொள்ளாமையாவது—உண்பான் பகுதியொடு மாறு கொள்ளாமையும், காலவியல்பொடு மாறுகொள்ளாமையும் சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளாமையுமாம். அவை யாவன முறையே வாத பித்த ஐகளான் ஆய பகுதிகட்கு அடாதவற்றைச் செய்வனவாதலும், பெரும்பொழுது சிறுபொழுது என்னுங் கால வேறுபாடுகளுள் ஒன்றற்கு ஆவன பிறிதொன்றற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தம்முள் ஒத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம் பட்டவாற்றால் துய்ப்பின் அதனானே நோயும் மரணமும் வருதலின்."

30. குறள், 944.

மருத்துவன் நோய் இன்னது என்பதனையும், தோன்றிய காரணத்தையும், அது தீர்க்கும் உபாயத்தையும் அறிந்து பழைய மருத்துவர் செய்து வருகின்ற முறைமையினின்றும் தப்பாது மருந்துதரல் வேண்டும் என்றும் உரையில் கூறுகின்றார்.[31] நோய் தோன்றுதற்குக் காரணம் - உணவு, செயல் ஆகியன என்பர். இவற்றை 'ஆயுள்வேத முடையார் நிதானம் என்பர்' என்று மருத்துவ நூலினின்றும் மேற்கோள் காட்டி விளக்குவதாலும் இவர்தம் மருத்துவ அறிவு இனிது புலனாகும். இவர் காலத்தில் நோயைத் தீர்த்தற்குப் பயன்பட்ட முறைகளையும் இவருடைய உரையால் அறிய முடிகிறது. 'மருந்து செய்தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல்' முதலானவற்றை விளக்கியுரைப்பதும் ஈண்டு உளங்கொளற் குரியது.

உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான் என்ற இவையெல்லாம் கூடினாலல்லாமல் நோய் தீராமையால் இந் நான்கும் சேர்ந்த தொகுதியே 'மருந்து' என்பதாகும். இதனை,

> உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
> அப்பானாற் கூற்றே மருந்து[32]

என்று குறட்பாக் கூறும். இதற்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரை விளக்கத்தில் மருத்துவக் கலையின் ஒட்பமும் திட்பமும் நனி விளங்குவதைக் காணலாம்:

> 'உற்றவன் வகை நான்காவன—பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய் நிலையுணர்த்தல் வன்மை, மருந்துத்துன்பம் பொறுத்தல் என இவை. தீர்ப்பான் வகை நான்காவன - நோய் கண்டஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டு ஓதிய கல்வியும் நுண்ணறிவுமுடைமை பலகாலும் தீர்த்துவருதல், மனமொழி மெய்கள் தூய வாதல் என இவை. மருந்தின் வகை நான்காவன-

31. குறள், 948.
32. குறள், 950.

பல பிணிகட்கும்ஏற்றல், சுவை, வீரியம்,விளைவு,ஆற்றல் களான் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதி யோடு பொருந்துதல் என இவை. இயற்றுவான் வகை நான்காவன-ஆதுரன்மாட்டு அன்புடைமை, மனமொழி மெய்கள் தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமை என இவை. இவையெல்லாம் கூடிய வழியல்லது பிணி தீராமையின், இத் தொகுதி யையும் 'மருந்து' என்றார். ஆயுள் வேதமுடையாரும் இவை கால்களாக நடக்குமென்பதுபற்றிப் 'பாதம்' என்றும், இவை மாறுபட்ட வழிச் சாத்தியமும் முதிர்ந்து அசாத்தியமா மென்றுங் கூறினர்.'

இவ் விளக்கத்தில் மட்டுமேயன்றி, இவ்வதிகார முழுவதிலும் பரிமேலழகரின் மருத்துவப் புலமைத்திறத்தை அவர்தம் உரை யகத்தே இனிது காணலாம்.

இசை நூற் புலமை

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும்
கண்ணோட்ட மிலலாத கண்[33]

என்னும் குறட்பாவின் விளக்கவுரையில் இசைப்புலமை தோன்ற உரையெழுதுகின்றார் பரிமேலழகர் :

'பண்களாவன-பாலையாழ் முதலிய நூற்றுமூன்று. பாடற்றொழில்களாவன-யாழின்கண் வார்தல் முதலிய எட்டும், பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடு இயையாத வழிப்பண்ணாற் பயனில்லாத வாறு போல, கண்ணோட்டத்து இயையாத வழிக் கண்ணாற் பயனில்லை என்பதாம்.'

33. குறள், 573.

இவ் வுரைவிளக்கம் அக்கால வழக்கத்திலிருந்த பண்கள் வகையினையும், பாடற்றொழிலினையும் சிறப்புற எடுத்துரைப்பது நினைவுறத்தக்கது. பண்கள் எங்ஙனம் இவற்றோடு இயைந்து விளங்கவேண்டும் என்பதையும் இவை இனிது சுட்டுகின்றன.

சமய நூலறிவு

பரிமேலழகர் வைணவ சமயத்தைச் சார்ந்தவராய் இருக்கக் கூடும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.[34] இறைமாட்சி அதிகார அவதாரிகையில், 'உலக பாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறை என்றார்' என்று எழுதிய பரிமேலழகர், 'திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்ற நம்மாழ்வார் பாசுரத்தைக் காட்டியிருப்பதே இதற்குத் தக்க சான்றாகத் திகழ்கிறது.

'தாமரைக் கண்ணான் உலகு' என்பதற்குத் 'துறந்த யோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்' என்று கூறுவதோடன்றி 'இந்திரன் உலகு' என்று கூறிய மணக்குடவரையும் மறுத்துரைக்கின்றார்.[35] 'அடியளந்தான்' என்பதற்குத் 'தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன்'[36] என உரை கூறும் சிறப்புகளினாலும் இவர் வைணவ சமயத்தவரே என்பது வலியுறும்.

வைணவ சமயத்தவரானாலும் பிற சமய நூல்களிலும் ஆழ்ந்த பயிற்சியுடையவர் என்பது அவருடைய உரை விளக்கங்களால் நன்கு தெளிவாகும்.

> 'உயிர் உடம்பின் நீங்குங் காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது, அஃது அதுவாய்த் தோன்றும் என்பது எல்லா ஆகமங்கட்குந் துணிபு ஆகலின்'

என்று 358 ஆம் குறட்பாவின் விளக்கவுரையில் கூறுவதும்,

34. அருணாசலம், மு., தமிழிலக்கிய வரலாறு - 13ஆம் நூ., பக். 65-66.
35. குறள், 1103.
36. குறள், 610.

'எண் குணங்களாவன : தன் வயத்தனாதல், தூயவுடம் பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றும் முணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என இவை; இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது'

என்று விளக்குவதும் இங்குக் கருதத்தக்கன. வைணவராகிய இவர் பிற சமயக் கருத்துக்களையும் எடுத்துக்கூறும் பொதுமை இயல்புடையவர் என்பதும் இதனால் போதரும்.

'உயிர் முதலியவற்றை அளத்தலாவது - காட்சி முதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக் குற்ற விளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுட் பிறந்து இறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும் அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும் அளந்து உள்ள வாறு அறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானம் என்ப'

என்று ஆருகதர் கூறும் முறையையும் கூறுவர் (குறள் 286). இவ்வாறே 359ஆம் குறட்பாவின் உரை விளக்கத்திலும் 'ஆருகதர் உவர்ப்பென்ப' என்று கூறி விளக்குவர். உலோகாயதர் கொள்கையையும்,[37] சாங்கிய நூல் கருத்தையும்[38], வைசேடிகர் மதத்தையும் [39] அங்கங்கே குறித்துரைக்கின்றார்.

நிலையாமை என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில்,

'நிலையாமையாவது - தோற்றமுடையன யாவும் நிலை யுதலில்லாத் தன்மை. மயங்கியவழிப் பேய்த் தேரிற் புனல் போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றில்

37. குறள், 281.
38. குறள், 27.
39. குறள், 307.

அரவு போலக் கெடுதலிற் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்து இறக்கு மென்பாரும், ஒருவாற்ருன் வேறுபடுதலும் ஒருவாற்ருன் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமை யும் ஒருங்கேயுடைய வென்பாரும் எனப் பொருட் பெற்றி கூறுவார் பல திறத்தராவர்'

என்று எழுதுவர். இவை இவருடைய சமயப்பொது உணர்வை யும் காட்டும்.

இதிகாசங்களிலும் புராணங்களிலும் வரும் கதைகளையும் அங் கங்கே எடுத்துக் கூறி விளக்கம் தருவர். இராமன் இராவணனை இன்று போய் நாளைவா என்றது,[40] பாண்டவர் சூதிருல் துன்புற் றது,[41] இந்திரன் பிறர்மனை நயந்து சிறுமை எய்தியது,[42] நகுடன் அகத்தியனுல் சாபம் பெற்றது,[43] சிபி புருவுக்கு உடலை அரிந்து ஈந்தது,[44] திரிசிரபுரம் சிவனது ஆற்றலால் அழிந்தது,[45] ஆகிய வையும் இவருடைய உரையில் விளக்கம் கருதி இடம் பெற் றுள்ளன.

முடிவுரை

'நூல்களைக் கற்கின்ற அறிஞர்கள் சிந்திக்கின்றனர். சிந்தனை பலகோணங்களில் முட்டி விரிகிறது. நூலாசிரியனை விளக்க முயல்கின்றனர். தாம் எண்ணிய எண்ணங்களையும், உணர்ந்த உணர்வுகளையும் சொல்லில் பிறரும் எண்ண, உணர வடிக்கின் றனர். அந்த விளக்க வடிவங்களே உரையாக நூலாசிரியனை விளங்க வைக்கின்றன.[46] எனவே உரையாசிரியரின் விளக்க வடிவங்களே அவர்களுடைய பல்துறைப் புலமையினை உலகுக்குப் பறைசாற்றுகின்றன எனலாம்.'

40. குறள், 778.
41. குறள், 935.
42. குறள், 144.
43. குறள், 899.
44. குறள், 72.
45. குறள், 900.
46. மீனுட்சிசுந்தரம், டாக்டர். கா., பன்மையில் ஒருமை, பக். 62-63, வேலன் பதிப்பகம், கோவை, 1969

வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் இலக்கியமாக இலங்கும் திருக்குறளுக்கு உரைகாணும் முயற்சியில் நல்வெற்றி பெற்ற பரிமேலழகரும் அனைத்துத் துறைகளிலும் புலமை மிக்க பேரறிஞராகவே காணப்படுகிறார். 'அரசியல், பொருளியல், வடநூல், மருத்துவநூல், காமநூல் முதலிய பன்னூலறிவும் இவரிடம் செறிந்து விளங்கின என்பதனை இவர்தம் உரை கொண்டு தெரியலாம். பொருந்தாவுரை காணும் சில இடங்களைத் தவிர்த்து விட்டால் உரையாசிரியர் என்று வழங்கும் சிறப்பிற்குத் தகுதி சான்ற தலைமை இடத்தினை இவர்பெறுவர் என்பது திண்ணம்.'[47] எனவேதான் வள்ளுவருக்கு எத்தகைய சிறப்புகள் இலக்கிய உலகில் அளிக்கப்படுகின்றனவோ அத்துணைச் சிறப்புகளையும் பரிமேலழகர் பெற்று விளங்குகிறார்.

திருக்குறள் உரையின் நுட்பத்திலும் செம்மையிலும் உள்ளத்தைப் பறி கொடுத்த சைவப்புலவர் ஒருவர் உயர்ந்த தமிழ் நூல்களின் பட்டியலைத் தரும்போது திருக்குறள் ஒன்றாகவும் பரிமேலழகர் உரை மற்றொன்றாகவும் சிறப்பித்துக் கூறியுள்ளமையே இதனை நன்கு வலியுறுத்தும்.[48]

47. பாலசுப்பிரமணியன், டாக்டர் சி., இலக்கிய அணிகள், பக். 243, பாரிநிலையம, சென்னை, 1972.

48. வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தஉரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்

இப் பாடலினை உமாபதி சிவாசாரியார் பாடினார் என்பர். ஆனால் அவர் பாடியதற்கான ஆதாரம் ஏதுமில்லை என்றும் கூறுவர். மேலும் பார்க்க : தமிழிலக்கிய வரலாறு—13ஆம் நூ. பக். 90-91.

6

திருக்குறளும் நாமக்கல் கவிஞரும்

விடுதலைப் பணியும் தமிழ்ப் பணியும்

இந்திய விடுதலை வேள்விப் பணியில் ஈடுபட்டுத் தமிழ்ப் பணியையும், நாட்டுப் பணியையும் ஒருங்கே ஆற்றி உழைத்த தமிழ்ப் பெருமக்கள் பலர். 'அச்சமில்லை அச்சமில்லை' என்று ஆண்மைக் குரலெழுப்பிச் சங்கநாதம் செய்த தேசியக்கவி பாரதி, 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' எனக் காந்தியின் சாந்தியை அமைதிக்குரலால் இசைத்த நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் ஆகியோர் விடுதலை வானில் திகழ்ந்த தமிழ்ச் சுடர்கள். எட்டையபுரத்தார் தேசியக்கவி; நாமக்கல்லார் காந்தியக் கவி. முன்னவர் திலகர் சகாப்தத்தைச் சார்ந்தவர்; பின்னவர் காந்தி சகாப்தத்தைச் சார்ந்தவர். 'திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது! காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது' என்பர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்.[1] இவ்விருவருமே தமிழ்மொழிப் பற்றைத்—தமிழின உணர்வை வளர்க்கப் பணி புரிந்தனர். நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் ஒன்றுக்கொன்று பகையாகாதென்ற உண்மையை உணர்ந்து, நாட்டுப்பற்றைக் கொண்டு மொழிப்பற்றையும், மொழிப்பற்றைக் கொண்டு நாட்டுப் பற்றையும் நன்கு வளர்த்த நற்றமிழ்ச் சான்றோர்கள்.[2]

1. நாமக்கல் கவிஞா பாடல்கள், பக். 14, தணிகை உலகநாதன் (ப. ஆ.), லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை, 1950.
2. சிவஞானம், ம. பொ. சி., விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, பக். 141, இன்ப நிலையம், சென்னை, 1970.

விடுதலை வீரர்களின் இலக்கிய நோக்கு

தாய்மொழிப் புலமையுடைய தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு விடுதலை வேட்கையை—எழுச்சியை ஊட்டியவிதம் என்றும் நன்றியுடன் போற்றத்தக்கது; பொறிக்கத்தக்கது. நாடுபெற்ற நன்மையேயன்றி நம் நற்றமிழும் பெற்ற நன்மையை இங்குக் கருதுதல் நலம். இந்திய விடுதலை இயக்க வீரரும், சிலம்புச் செல்வருமான ம. பொ. சி. அவர்கள் இதுகுறித்துக் கூறுவது எண்ணி மகிழ்தற்குரியது.

> 'தாய்மொழிப் புலமையுடைய வ. உ. சிதம்பரனார், சி. சுப்பிரமணிய பாரதியார், திரு. வி. க., வ. வே. சு. அய்யர் போன்றவர்கள் விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களானார்கள். இதனால் தமிழ்மொழியின் வரலாற்றிலே முற்போக்கான ஒரு திருப்பம் ஏற்பட்டது. பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையிலே பார்த்தனர், தேச பக்தியுடைய தமிழர்கள். அத்துடனன்றித் தேசபக்தியை வளர்க்கும் புதிய இலக்கியங்களையும் படைத்தனர். ஆம், தேசபக்தி தமிழை வளர்த்தது. தமிழ் தேசபக்தியை வளர்த்தது. இதனால் மொழித் துறையிலே ஒரு சகாப்தம் பிறந்தது.'[3]

என்று உணர்ச்சி முழக்கமிடும் அவர்தம் கூற்றில் தமிழிலக்கிய ஆய்வின் குறிப்பிடத்தக்க திருப்புமுனை நன்கு நன்றியுணர்வோடு எடுத்துக் காட்டப்படுகின்றது.

நற்றமிழ்க் கவிஞர் இராமலிங்கர்

'பாட்டுக்கொரு புலவன் பாரதி'க்குப் பின்னர் நம் தமிழ் நாட்டில் விடுதலை வேட்கைப் பயிரைத் தம் கவிதைகளால் உரமூட்டி வளர்த்த சொல்லேருழவர் நாமக்கல் கவிஞர். 'பாரதிக்குப் பிறகு விடுதலைப் போர்க் கவிதைகள் தமிழுக்கு இராமலிங்கத்தால் தான் கிடைத்தது' என்ற சிறப்பினைப் பெற்றவர் கவிஞர்.[4]

3. சிவஞானம், ம. பொ. சி., விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, பக். 63.

4. தமிழவன், இருபதில கவிதை, பக். 38, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர் கோவில், 1971.

நாரத கீதமென்ன
    நயந்திகழ் பாடலாலே
பாரத நாட்டை என்றும்
    பணிந்திடும் சுப்ரமண்ய
பாரதி பாட்டைக் கண்ட
    பழையஇத் தமிழர் நாட்டில்
யாரது என்று கேட்க
    யானுமிக் கவிகள் சொன்னேன்[5]

என்று கவிஞர், தம்கூற்றிலேயே தாம் பாரதி வழி வந்தவர் என்பதைப் பறைசாற்றுகின்றார்.

அன்பு நெறியில் உரிமை வாழ்வை வழங்கிய காந்தியடிகளாரின் அருள்நெறியைப் பரப்பிய காந்தியுகக் கவிஞர்—காந்தியக் கவிஞர்-எழுத்தாளர்—பேச்சாளர்—அரசியலாளர் - ஓவியக் கலைஞர்—காவியக் கலைஞர்—இசைக் கலைஞர்—புதினக் கலைஞர்—உரையாசிரியர்—இலக்கியத் திறனாய்வாளர்—தமிழ்நாட்டு அரசவைக் கவிஞராகவும் விளங்கியவர் — நாமக்கல் கவிஞர். கவிஞரின் பாடல்கள் அடிமைத் தளையைத் தகர்க்க விழைந்த தமிழ் மக்களுக்கு உரமூட்டும் அருமருந்து. கத்தியின்றி இரத்தமின்றிச் சத்தியப் போரில் வீறுநடை போடச் செய்த வெற்றிச் சங்கு. ‘நாமக்கல் கவிஞர் காந்தியடிகளின் கொள்கைக்கு ஒரு கவிக்குரல்; காந்தீயத்தை இனிய கவிகளால் ஒலிக்கும் தமிழ்ச் சங்கு’[6] என்பர் அறிஞர் பெ. தூரன் அவர்கள்.

கவிஞரின் தமிழ்ப் பணி

சிலம்புச்செல்வர் அவர்கள் கூறுவதுபோலப்பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையில் பார்த்தவர் நாமக்கல் கவிஞர். இவர் எழுதிய நாற்பதிற்கும்மேற்பட்ட தமிழ் நூல்கள் இவர்தம்புலமைத் திறனுக்கும், ஆராத் தமிழ் வேட்கைக்கும் அரிய சான்றாகத் திகழ்வன. கவிதை நூல்களும், கட்டுரை நூல்களும், இலக்கியத் திறனாய்வு நூல்களும் தன் வரலாற்று நூலும் இவற்றுள் அடங்கும்.

5. நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 508.
6. நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 15.

இளங்கோவின் இன்பத் தமிழிலும், கம்பனின் கவிதை நலத்திலும், சங்க நூல்களின் இலக்கியச் சுவையிலும் பயில்தொறும் இன்பங் கண்டு மகிழ்ந்தவர் கவிஞர் என்பது அவர் எழுதிய 'என் கதை' என்னும் நூலாலும், கவிதைகளாலும் நன்கு அறியலாம்.[7]

நாமக்கல் கவிஞரின் நூல்களைத் திறனாய்வு செய்தால் விடுதலைக் கால இலக்கியச் சூழலில், காந்திய—அரசியல் பின்னணியில் தமிழ் வளர்த்த விதமும்—வளர்ந்த விதமும் விளங்கும். விடுதலை உணர்வும், தமிழ் உணர்வும் ஒருங்கே மக்களுக்கு ஊட்டிய விதம்—இலக்கிய ஆய்வில் அவர்தம் திறனாய்வுத்திறன் முதலாயின இனிது புலனாகும்.

முன்னோடியாக அவருடைய திருக்குறள் உள்ளத்தையும்—உரையையும்—ஆராய்ச்சியையும் மட்டும் இக் கட்டுரையில் காணலாம். இராமலிங்கனாரின் திருக்குறள் உள்ளத்தைப் பொதுவாகவும்—அவருடைய ஆய்வு நூல்களைச் சிறப்பாகவும் பகுத்து இரு வகை நிலையில் ஆராயலாம்.

திருக்குறள் பற்றிய அவருடைய கருத்து, அந்நீதி இலக்கியத்தில், அவர் தோய்ந்து தோய்ந்து உளம் ஒன்றி அதன் பெருமையை உலகிற்கு வழங்கும் உணர்வு—இரண்டும் பொதுவானவை. அவ்வுணர்வால் அவ்விலக்கியக் கடலுள் மூழ்கி எடுத்த ஆய்வு முத்துக்கள் அவருடைய படைப்புகள்—ஆய்வு நூல்கள், அந்நூல்களில் அவர் செய்த திறனாய்வுத்திறன் இவை இரண்டும் சிறப்பானவை. இவற்றை இக் கட்டுரையில் சுருக்கமாகக் காண்போம்!

திருக்குறளும் நாமக்கல் கவிஞரும்

உலக அறிஞர் அனைவரின் உள்ளத்தையும், உணர்வையும் தொட்டு, இணையில்லாத அற இலக்கியமாகத் திகழும் திருக்குறள், கவிஞரின் இலக்கியக் கவிதை உள்ளத்தையும் ஈர்த்ததில் வியப்பில்லை. அவர் படைத்த நூல்களுள் ஆறு நூல்கள் திருக்குறளைப் பற்றியதாகவே திகழ்கின்றன. கல்வி பயிலத் தொடங்கிய

7. நாமக்கல் கவிஞர், என கதை, பக். 135, பழனியப்பா பிரதர்ஸ சென்னை, 1955.

காலத்தும், கற்றவர்களிடத்து உரையாடும் போதும், ஏன் விடுதலை வேள்விச் சிறையில் வாடிய காலத்தும் இவருடைய உள்ளம் குறளையே சிந்தித்தது என்பதை அவருடைய, 'என் கதை' உணர்த்தும். அரசியல் வாழ்விலும் வள்ளுவத்தையே-வள்ளுவ வாழ்வையே அவர் உள்ளம் உள்ளியது என்று கூறலாம்.

சிறையில் மலர்ந்த சிந்தனையே இவருடைய, 'திருக்குறள் புது உரை.' வேலூர்ச் சிறையில் உருவான இச் சிந்தனை மலர், தமிழ் வளர்த்த மதுரைச் சிறையில் இதழ் விரித்தது. வேலூர்ச் சிறையில் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் அவர்கள் ஒரு பகுதியிலும் நாமக்கல் கவிஞர் அவர்கள் மற்றொரு பகுதியிலும் தமிழ் வகுப்பு நடத்தினார்கள். நாமக்கல் கவிஞரிடம் ஓமந்தூர் ரெட்டியார், கோபிசெட்டிப்பாளையம் சுப்பண்ணக் கவுண்டர், முத்துக் கவுண்டர், நல்லாக் கவுண்டர், தேவாரம் 'பாரதி', ஆசிரியர் திரு நாராயணசாமி முதலியோர் பாடம் கேட்டனர்.[8] நாள் தோறும் குறளில் ஓர் அதிகாரமும், கம்பராமாயணத்தில் இருபது பாட்டுகளும் படித்து வந்தார்கள்.

திருக்குறளைப் பரிமேலழகர் உரையைக் கொண்டு விளக்கி வருகையில் பலருக்கும் பல ஐயங்கள் எழுந்தன. விளங்காத—விளக்கமுடியாத இடங்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்த குறட்பாக்களைப் படித்தார்கள். ஒருநாள் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் வகுப்பு நடக்குமிடத்துக்கு வந்து பாடம் கேட்டார்கள். அன்று பொருள் செயல்வகை அதிகாரத்தில்,

> குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன
> றுண்டாகச் செய்வான வினை

என்ற குறளை நடத்திக் கொண்டிருந்தார் நாமக்கல் கவிஞர்.

'தன்கையிற் பொருளை வைத்துக்கொண்டு ஒரு காரிய முயற்சி செய்வதற்கும், மலையின்மேல் இருந்து கொண்டு கீழே நடக்கும் யானைச் சண்டையைப் பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம்?' என்று ஓமந்தூர் ரெட்டியார் கேட்டார். மீண்டும் பலமுறை படித்துப்

8. நாமககல் கவிஞர், என கதை, பக்.291

பார்த்தும் ஒருவருக்கும் விளங்கவில்லை. திரு. சத்தியமூர்த்தி அவர்கள், 'தன் முயற்சியாகத் தன்னுடைய தனத்தைக்கொண்டு காரியத்தைச் செய்யவேண்டியவன், தான் சும்மா இனிதிருந்துகொண்டு வல்லாரை ஏவிக் காரியத்தை முடித்துக்கொள்வான் என்பதில் அர்த்தமில்லையே என்றார். 'மிகவும் மதிநுட்பமுள்ள அந்த நியாயம் என் மனதுக்கும் சரியென்றே பட்டது' என்று எழுதுவர் நாமக்கல் கவிஞர். இறுதியில் ஓமந்தூர் ரெட்டியார் கவிஞரையே, திருக்குறளுக்கு எளிய நடையில் உரை எழுதுமாறு வற்புறுத்தினர். அன்றே திருக்குறளுக்கு உரை எழுதவேண்டும் என்ற வேணவா ஏற்பட்டதைக் கவிஞர் சுவைபடத் தன் வரலாற்றில் கீழ் வருமாறு எழுதுவர்:

> 'தப்போ தவறோ திருக்குறளுக்கு வேறு ஒரு உரை எளிய நடையாகவாவது எழுதிவிடுவது' என்ற தீர்மானத்தை அன்றைக்கே செய்துகொண்டேன். அதற்குப்பின் எந்நேரமும் அதே சிந்தனைதான். ஒரே ஒரு குறளைத் திருப்பித் திருப்பி வெவ்வேறு விதமாகப் பதம் பிரித்துப் பார்த்துக் கொண்டே சிற்சில இரவுகள் தூங்காமலேயே விடிந்து போகும்.'[9]

திருக்குறளுக்கு உரை காண்பதில் அவருக்கிருந்த ஆர்வமும், உழைத்த உழைப்பும் இக் கூற்றால் நன்கு விளங்கும். இலக்கியத் திறனாய்வாளர்கள் ஆராய்ச்சிப் பொருளில் எத்தகைய ஆர்வமும், ஓயாத உழைப்பும், ஒன்றிய உள்ளமும் கொண்டு விளங்கவேண்டும் என்ற அறிஞர்களின் கூற்றும் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாய் உள்ளது.[10]

1922இல் வேலூர்ச் சிறையில் உருவான இச் சிந்தனை மலர் மதுரையில் இதழ் விரித்து 1954இல் கோவையில் மணம் வீசித் திகழ்ந்தது. அன்று கோவையில் ஆளுநர் திரு. பிரகாசா அவர்கள் தலைமையில் இவ்வுரையை வெளியிட்டுக் கோவை நகர மக்கள்

9. நாமக்கல் கவிஞர், என் கதை, பக். 295.
10. Hudson, W. H., An Introduction to the study of Literature, p. 282. Kalyani Publishers, Ludhiana, 1971.

கவிஞரைப் பாராட்டினர்.[11] இவ்வுரை வெளிவருவதற்கு இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆயின.

கவிஞர் கூறும் திருக்குறட் பெருமை

தமிழ்மொழிக்கு அளவிலாத பெருமை சேர்த்த வள்ளுவத்தை உளமகிழ்ந்து போற்றும் உள்ளத்தினர் இராமலிங்கர். 'தரணி யெங்கும் இணையிலாத இல்லறத்தைப் போதித்த குறள்'[12] என்றும், 'இடர் நீக்கும் மருந்து'[13] என்றும், 'தூய வாழ்வின் தெளிவு காட்டும் பண்பினது'[14] என்றும், 'அன்பு தந்து அருள் விளக்கி அறிவு சொல்லும் அறமொழி'[15] என்றும் பலவாறு பாராட்டுவர். 'அறிவின் கடலைக் கடைந்து எடுத்த அமிழ்தம் திருக்குறள்' என்பர் கவிஞர்.[16]

காலங்காலமாய் நின்று உடல் வருந்தித் துன்புற்றுத் துறவறத்தால் பெறும் மெய்யறிவு, 'குறள் கற்ருல் உடனே ஓடிவரும்' என்று கூறும் கவிஞரின் கவிதை அவருடைய குறள் உள்ளத்தை— உள்ளத்தின் குரலை ஒலிப்பதாகும்.

காடுசென்று குகையடைந்து
கண்கள்மூடி எண்ணியும்
காவிகட்டி ஓடெடுத்துக்
கஷ்டவாழ்க்கை பண்ணியும்
தாடிவைத்து மொட்டைதட்டித்
தவசியென்ற பேருடன்
தரணிமெசச ஊர்கள் சுற்றித்
தருமபோதம் கூறியும்
கூடுவிட்டுக் கூடுபாயும
சித்துசெயயக் கோரியும்
கோடிகாலம் வாழஎண்ணிக்
காயகற்பம் தேடியும்

11. நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 90—9
12 —15 ,, ,, பக். 48.
16. ,, ,, பக். 22.

தேடுகின்ற உண்மையாவும்
　ஓடிவந்து நிற்குமே
தெய்வவாக்கு வள்ளுவன்
　திருக்குறள்கள் கற்கவே[17]

என்று பாடும் அவருடைய உள்ளத்தின் குரல், 'திருக்குறளின் பெருமையை' உள்ளபடியே உலகுக்குப் பறைசாற்றுவதாகும்.

கவிஞர் நோக்கில் வள்ளுவரும் காந்தியும் (அகநிலை ஆய்வு)

தமிழ்க் கவிஞர் இராமலிங்கனார், வள்ளுவத்துக்குக் காணும் விளக்கங்கள் புதுமை நிறைந்தனவாகத் திகழ்கின்றன. அறவழியும், அருள்நெறியும் கனிந்து திகழும் தேசத்தந்தை காந்தியின் வாழ்க்கை—சாந்தி வாழ்க்கை—அனுபவ அறிவோடு குறளை அணுகும் காந்தியக் கவிஞருக்கு—வள்ளுவரின் வாழ்வாகவே தென்படுகிறது. காந்தியின் எளிய வாழ்வு, கடையவனுக்கும் கடைத்தேற்றமளிக்க விரும்பும் தொண்டுள்ளம், பிறர் துன்பங் கண்டு கனிந்துருகும் அருள்நிலை முதலாயின வள்ளுவரின் வாழ்வு விளக்கமே—குறட் கருத்தேயாகும். எனவேதான் இராமலிங்கர் காந்தியைக் கூறவந்த இடத்தில் வள்ளுவரைக் காணுகிறார். வள்ளுவத்தை உணர்ந்த இடத்தில் காந்தியைக் காணுகிறார். வள்ளுவரையும் காந்தியையும் இணைத்துக் காட்டும் அவர்தம் பாடல்களில் சில துளிகள்:

வள்ளுவரின் வாழ்க்கைதனை நினைப்பூமூட்டி
　வான்புகழும் திருக்குறளை நடந்துகாட்டும்
கள்ளமிலாக காந்திமுனி[18]

தமிழர்கள் உலகுக்கீந்த வள்ளுவர் தானோ என்ன
அமிழ்தினும் உயர்ந்ததான அறமெலாம் நடந்துகாட்டும்
கமழ்மணம் உலகம் போற்றும் காந்தியார் ஏந்தும்கொள்கை
நமதெனும் பெருமையோடு நம்நாடு நன்மைபேசும்[19]

பொய்யா மொழித்திரு வள்ளுவனே
　பூமியில் மீண்டும் வந்ததுபோல்

17. நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 47—48.
18. ,, ,, பக். 32.
19. ,, ,, பக். 54.

மெய்யே தெய்வம் கொல்லாமை
மேலாம் அறமென வாழ்ந்துதினம்
செய்யாப் பெருந்தவம் செய்துலகின்
சேமம் தனதெனப் பாடுபடும்
துய்யோன் காந்தி மகாத்மா[20]

தெள்ளியநல் அறங்களையே தெளிவாய்ச் சொல்லித்
தினையளவும் பிசகாமல் நடந்து காட்ட
வள்ளுவனே மறுபடியும் வந்தான் என்ன
வழிகாட்டித் திருக்குறளை வாழ்ந்த வள்ளல்
பிள்ளைமனப் பேரறிஞன் பெம்மான் காந்தி[21]

என்று பாடும் அவர்தம் பாடல்கள்—அவர் உள்ளத்தையும், இந்திய மக்கள் உள்ளத்தையும் கொள்ளைகொண்ட தேசத் தந்தையை'வள்ளுவரே' எனக் கூறும். வள்ளுவத்தில் வையத்தை அளந்து காண விழையும் கவிஞர், இந்திய ஒருமைக்கும் இணைப்புப் பாலமாக வள்ளுவத்தையும் காந்தியையும் உருவாக்கி மகிழ்கின்றார். காந்தி கொண்ட கொள்கைகள் வள்ளுவர் வகுத்தவையே என்பதை,

திருக்குறள் அறிவெலாம்—ஒன்றாய்த்
திரண்டுள நெறியனவாம்
உருக்குறள் காந்திமகான்—தந்துள
ஒப்பரும் சாந்த வழி[22]

என்னும் பாடலால் புலப்படுத்துகின்றார். மேலும்,

உள்ளமும் உடலும் கூட
உலகெலாம் வணங்கும் ஜோதி
வள்ளலக் காந்தி செய்த
அறந்தரு வாழ்க்கை முற்றும்
தள்ளரும் அறங்க ளாகத்
தமிழத் திருக்குறளில் முன்பே
வள்ளுவன் வாழ்ந்து சொன்ன
கொலைதவிர் வாய்மை யாகும்[23]

20. நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 90.
21. ,, ,, பக். 51.
22. ,, ,, பக். 103.
23. ,, ,, பக். 151.

என்னும் கவிதையால் காந்தியக் கொள்கைகளுக்கும் வள்ளுவக் கருத்துக்களுக்கும் உள்ள இணைப்பினை எடுத்துக் காட்டுகின்றார்.

'இந்திய நாட்டின் ஞான நூல்களில் மறைந்துகிடந்த சாந்த— சத்திய—சன்மார்க்க வாழ்வின் பெருமையை மகாத்மா காந்தியவர்கள் தோன்றி வாழ்ந்து காட்டுகிற வரையிலும் மக்கள் உணரவும் முடியவில்லை; நம்பவும் முடியவில்லை. மகாத்மா காந்தியின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் செயலும் எனக்கு ஒவ்வொரு குறளை விளக்கியது. எக்காலத்துக்கும் அழியாத சத்தியங்களையே தழுவி அவர் நடத்திய வாழ்க்கை திருக்குறளின் பெருமையைத் தெளிவாகக் காட்டியது. அதுதான் காந்தியைப் போலவே வாழ்க்கை நடத்திய வள்ளுவரின் உள்ளத்தை உணரச் செய்தது. அந்த உணர்ச்சியின் உழைப்பும் பயனுமே எளியேனுடைய புது உரை. என்னுடைய புது உரையின் கையெழுத்துப் பிரதிகளைப் படித்து மகிழ்ந்து பாராட்டிய நண்பர்களிற் சிலர் நான் காந்தியக்கண்கொண்டு குறளுக்கு உரை கண்டிருப்பதாகப் புகழ்ந்தார்கள். ஆனால் அது சரியல்ல. நான் எனது உரையில் காந்தியடிகளின் பெயரைக்கூடச் சொல்லவில்லை. காந்தியடிகளின் அற்புத வாழ்க்கை திருக்குறளின் பெருமையை நான் உணர்தற்கு உதவியதென்றாலும் நான் அறிந்துகொண்ட உண்மை என்னவென்றால் திருக்குறளிலுள்ள ஞானந்தான் காந்தியார் வடிவெடுத்து வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டியது என்பதே.ஏனெனில் காந்திமகான் வந்ததும் வாழ்ந்ததும் நேற்று நடந்தவை. ஆனால் திருக்குறளிலுள்ள மெய்யறிவு எல்லையற்ற காலந்தொட்டு இந் நாட்டில் இருந்து வருவது ஆம்'[24]

என்று நாமக்கல் கவிஞர் கூறுவது அவருடைய வள்ளுவர்—காந்தி உள்ளத்தைத் தெள்ளிதின் காட்டும்.

24. நாமக்கல் கவிஞர், வள்ளுவரின் உள்ளம், பக். 94—95, இன்ப நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1963.

"வள்ளுவர் உலகம் உய்ய அறம் வகுத்தார். காந்தி அவ்வறங்களை நடத்திக் காட்டினார். காந்திக்காகவே அநேகம் குறள்களை வள்ளுவர் பாடினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது"[25] என்று தமிழறிஞர் இராய. சொக்கலிங்கம் அவர்கள் கருதுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"அறிவும், காந்திய அடிப்படையில் தோன்றும் சமூதாய உணர்வும் சேர்ந்து சமைந்த மிகவும் புதிய கோணத்திலிருந்து நாமக்கல் கவிஞர் வள்ளுவரைக் காண்கிறார். அவர் காணும் காட்சியை மிகவும் இனிய நடையில், பழகு தமிழில் நமக்குத் தருகின்றார். வள்ளுவர் பெருமையில் இதுவரை நமக்குத் தோன்றாத பல புதிய அம்சங்கள் கவிஞர் உரையில் புலனாகின்றன"[26] என்பர் அறிஞர் அ. சீநிவாசராகவன் அவர்கள்.

நாமக்கல் கவிஞரின் திருக்குறள் நூல்கள்

நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்களுள் ஆறு நூல்கள் திருக்குறளைப் பற்றியன :

1. வள்ளுவரின் உள்ளம், இன்ப நிலையம், சென்னை, ஜனவரி, 1954.
2. திருவள்ளுவர் திடுக்கிடுவார், இன்ப நிலையம், சென்னை, ஆகஸ்ட், 1954.
3. திருவள்ளுவரும் பரிமேலழகரும், இன்ப நிலையம், சென்னை, ஜனவரி, 1956.
4. திருவள்ளுவர் இன்பம், மங்கள நூலகம், சென்னை, 1953,
5. திருக்குறள் புது உரை, மங்கள நூலகம், சென்னை, ஆகஸ்ட், 1954.
6. திருக்குறள் புது உரைச்சுருக்கம், கவிஞர் பதிப்பகம், கோவை, 1960.

25. இராய. சொக்கலிங்கம், காந்தியும் வள்ளுவரும், (முன்னுரை), பாரதி பிக்சர் பாலெஸ், காரைக்குடி.

26. சீநிவாசராகவன், அ., நாமக்கல் கவிஞரின் திருக்குறள் உரை, பக். 8.

இவ்வாறனுள்ளும் திருக்குறள் புது உரையும், திருக்குறள் புது உரைச் சுருக்கமும் உரைவகையைச் சார்ந்தன. ஏனைய திறனாய்வு நூல்கள் எனலாம். திருக்குறள் புதுஉரைச் சுருக்கம் என்னும் நூல் 'திருக்குறள் புதுஉரை' வெளியீட்டு விழாவின்போது வழங்கிய உரையின் சுருக்கமாகும்.

அகநிலை ஆய்வும் புறநிலை ஆய்வும்

பொதுவாகக் குறளின் ஆய்வுமுறைகளை இருபெரும் பிரிவுகளாகக் கொள்ளலாம். திருக்குறளின் உள்நின்று அதன் அகநிலைச் செய்திகளனைத்தையும் திரட்டி ஆய்தல் ஒன்று; பிற இலக்கியங்களோடு திருக்குறளை ஒப்புநோக்கி அதன் பெருமையைத் தெளிதல் மற்றொன்று. இவற்றை அகநிலை ஆய்வு, புறநிலை ஆய்வு எனலாம்.[27]

கவிஞரின் ஆய்வுமுறையில் இவ்விரு வகை நிலைகளையும் காண முடிகிறது. திருவள்ளுவர் திடுக்கிடுவார், திருவள்ளுவரும் பரிமேலழகரும், வள்ளுவரின் உள்ளம் ஆகிய இம்மூன்று நூல்களுமே குறளின் அகச் செய்திகளைச் சிற்சில இடங்களில் ஒருசேரத் தொகுத்து ஆயும் ஆய்வானாலும், பெரும்பாலும் வள்ளுவரின் குறட்பாக்களுக்குச் சில இடங்களில் கூறிய பரிமேலழகரின் முரணான உரைகளின் மறுப்புரைகளாகவே விளங்குகின்றன. 'வள்ளுவரின் உள்ளம்' என்னும் நூலில் திருக்குறளுக்குப் புதுஉரை காண நேர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கிக் கூறுகிறார்.

குறளின் கருத்துக்களைக் காட்டக்கூடிய வள்ளுவர் காலத்து உரை நமக்குக் கிட்டவில்லை. எனவே அவர் காலத்துக்குப்பின் பல நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய உரையாசிரியர்கள் அனைவரும் அவருடைய உள்ளத்தை முழுதும் உணர்ந்தவர்கள் என்று கருத முடியாது என்று கவிஞர் கருதுகிறார்.

திருக்குறளின் பழைய உரையாசிரியர்களைப் பற்றிய கவிஞரின் கருத்துச் சிந்திக்கத்தக்கது:

27. சுப்பிரமணியம், டாக்டர் வி. ஐ., திருககுறள் மேற்கோள் விளக்கம்—நூலின் அணிந்துரை, பக. 11, ஆசிரியர் : டாக்டர் அ. தாமோதரன், தெற்காசியக் கழகம், மேற்கு ஜெர்மனி, 1970.

'குறள்களின் அடுக்கு முறையில் மட்டுமன்றிக் குறள்களுக்கு உரை சொல்லுவதிலும் ஒருவருக்கொருவர் பல இடங்களில் மிகவும் மாறுபடுகின்றனர். அது மட்டுமன்றி ஒவ்வொருவரும் வெவ்வேறு சமயச் சார்புகளைப் புகுத்திப் பொருள் செய்கின்றார்கள். காலம், இடம், நிறம், சமயம், ஜாதி முதலானவற்றையெல்லாம் கடந்து நிற்கின்ற சத்தியங்களைச் சொல்லுகின்ற திருவள்ளுவரின் கருத்துக்களுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத முறையில் இந்த உரையாசிரியர்கள் அவரவர்கள் மனம் போனபடி அவரவர்கள் காலம், இடம், சமயம் முதலியவற்றை ஒட்டிய முறையில் பொருள் செய்திருக்கிறார்கள். மேலும் இவர்களிற் சிலர் திருக்குறளின் அர்த்தங்களை விளங்க வைக்காமல் விஸ்தாரமான இலக்கண நுணுக்கங்களில் இறங்கி இலக்கணம் கற்ற பண்டிதர்களையும் பயமுறுத்துகின்றார்கள்'[28]

என்பது நாமக்கல் கவிஞரின் பழைய உரையாசிரியர்கள் பற்றிய மதிப்பீடு. இளம்பூரணர் முதல் இன்றைய உரையாசிரியர்கள் வரையில் அனைவருமே நூலாசிரியரைப் போற்றி நோக்கியும், உரையாசிரியரை உற்று நோக்கியும்தான் ஆய்ந்தனர். கட்டடக் கலைஞன் அடிக்கட்டடத்தை ஆராய்வதைப் போல இலக்கிய ஆராய்ச்சியாளர் பழைய உரை ஆராய்ச்சியாளர்களின் அடிப்படையை ஆராய்வது இயல்பு.[29] இங்ஙனம் ஆராய்வது நல்ல திறனாய்வாளனின் இலக்கியப் பண்பேயாகும். அந்த வகையில் கவிஞர் அவர்கள் பரிமேலழகரின் உரையை உற்றுநோக்கியும் ஒப்புநோக்கியும் ஆய்ந்த ஆராய்ச்சி உரை 'திருவள்ளுவரும் பரிமேலழகரும்' என்னும் நூல். பொதுவாக இலக்கியத்தைப் படைக்கும் கலைஞர் இலக்கியத்தை ஆயும் அறிஞராக இருக்க முடியாது என்றும், படைக்கும் திறனும், ஆயும் திறனும் ஆகிய இருவகைத் திறன்களும் ஒருவரிடத்து அமைதல் அரிது

28. நாமக்கல் கவிஞர், வள்ளுவரின் உள்ளம, பக் 20.
29. மீனாட்சிசுந்தரம், டாக்டர் கா., பன்மையில் ஒருமை, பக். 63, வேலன் பதிப்பகம், கோவை, 1967.

என்றும் கூறுவர். ஆனால் இத்தகைய இருவகைத்திறனும் இவரிடத்தில் பொருந்தி விளங்குவதைக் காணலாம்.

குறள் இலக்கியத் திறனாய்வுத்திறன்

அறிவிலும் கருத்திலும் சிறந்தவற்றைத் தேர்ந்தறிவதற்கும் பரப்புவதற்கும் உரிய பற்றற்ற முயற்சியே ஆராய்ச்சி.[30] இவ்விலக்கிய ஆராய்ச்சி செய்பவர் ஆர்வத்துடனும் நடுவுநிலைமை தவறா 'குணம் நாடி குற்றமும் நாடும்' பண்புள்ளவராகவும், 'எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும் அறிவு வேட்கை உடையவராகவும் இருத்தல்வேண்டும். அவ்வாறு இல்லையானால் இலக்கியத்தின் உயிர்நாடியை அறியாமற்போவதுடன் பிறழ உணர்த்தும் நிலைக்கும் ஆளாதல் வேண்டிய அவலநிலை அவர்க்கு வந்து சேரும்.

குறளுக்கு உரை செய்து அழியாப் புகழ்பெற்ற பரிமேலழகரும் குறட்பாக்களுக்குச் சில இடங்களில் பிறழ உரை செய்ய நேர்ந்ததைப் புலவர் பெருமக்கள் பலரும் சுட்டிக்காட்டி உள்ளனர்.[31] மூல ஆசிரியரான வான்புகழ் வள்ளுவருடன் ஒப்பப் போற்றப்பெறும் பரிமேலழகரைப்பற்றிக் கூறும்போது நடுவுநிலை பிறழாத நல்லுள்ளத்துடன் நாமக்கல் கவிஞர் அவரை அணுகுகிறார். பரிமேலழகரைப் பற்றிய கவிஞரின் ஆய்வு மொழிகள் பின் வருவன:

> 'பரிமேலழகரின் உரை மற்றெல்லா உரைகளிலும் மிகச் சிறந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தமிழுலகத்தின் நன்றி நிறைந்த வணக்கத்துக்கு உரியவர். தமிழ் மரபையும், தமிழ் இலக்கியங்களையும், தமிழ்ப் பண்புகளையும் தழுவித்தான் மிகுந்த நுண்ணறிவுடன் உரை செய்திருக்கிறார்.'[32]

30. Shairp, J. C., Aspects of Poetry, p. 41.
31. ஞானசம்பந்தன், அ. ச., இலக்கியக்கலை, பக். 34.
32. நாமக்கல் கவிஞர், வள்ளுவரின் உள்ளம், பக். 24.

'பரிமேலழகர் நாம் வணங்க வேண்டிய மிகவும் பெரிய வர். அவர் தோன்றியிராவிட்டால் உலக இலக்கியங் களுக்குள் தலைசிறந்த இலக்கியமாகிய திருக்குறள் இந்த வடிவத்தில் நமக்குக் கிடைத்திராது. மூலக் குறள்களின் வைப்பு முறைகளும் தடுமாறிச் சிதைந்துகிடந்த திருக் குறளைச் செப்பனிட்டுத் தந்த அழியாப்புகழ் அவருக்கே உரியது.'[33]

இவை பரிமேலழகரைப் பற்றிய கவிஞரின் புகழ்மொழிகள். ஆனால் குறைகள் கண்டவிடத்துச் சுட்டிக்காட்டிச் செல்லும் நல்லாய்வாளனின் தனிப்பண்பும் இவர்தம் திறனாய்வுத்திறனில் துலங்குகிறது. அதுவே மொழி வளர்க்கும் நற்பணியுமாகும். இத்தகைய புகழ்மாலையைச் சூட்டிய கவிஞர்,

"......ஆனாலும் என்ன? பரிமேலழகரும் அவருக்கு முன்னாலிருந்தவர்கள் இயற்றியிருந்த உரைகளைச் சொந்த மாக ஆராயாமல், தவறான உரைகளைத் தந்துவிட்டார் என்பதை எடுத்துச்சொல்லக் கூடாதா? நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றம்தான் என்ற பரம்பரையில் வந்த நாம் இதை ஒத்துக் கொண்டால் என்ன? பரிமேலழகர் மிகப்பெரிய உரையாசிரியர் தான். ஆனால் திருக்குறள் அவரைவிட மிகப் பெரிய விஷயம் அல்லவா? பரிமேலழகர்மீது நமக்குள்ள பாசத்தால் திருக்குறளுக்குத் தீங்கு வரச் செய்யலாமா?'[34]

என்று கூறும்போது கவிஞரின் திருக்குறட்பற்றையும், நடுநிலைத் திறனாய்வுப் பண்பையும் ஒருங்கே கண்டு மகிழமுடிகிறது.

'திருக்குறளுக்கு உரை சொல்லும்போது, திருவள்ளுவர் எதைக் கருதியிருக்கிறார் என்பதை ஆய்ந்தறிந்து சொல்லவேண்டும். திருவள்ளுவர் கருத்தை அறிந்து கொள்ள முடியாமல் சொந்த யுக்தியைக் கொண்டு உரை செய்து விட்டாலும், திருவள்ளுவர் எதைச் சொல்ல மாட் டாரோ, அதைச் சொல்லிவிடாமலாவது உரைகாண

33. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவரும் பரிமேலழகரும், பக். 7.
34. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவரும் பரிமேலழகரும், பக். 7—8.

வேண்டும். பரிமேலழகர் உரையில் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்தை ஆராயாமல் அவர் எண்ணாத உரைகள் எழுதப்பட்டிருக்கின்றன என்பது மட்டுமன்றிச் சில இடங்களில் திருவள்ளுவர் எதைச் சொல்ல மாட்டாரோ அதை உரையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. திருவள்ளுவர் எதைச் சொல்லமாட்டார் என்பது உண்மையை நாடுகின்ற எல்லாருக்கும் எளிதிற் புலனாகும். திருக்குறள் முழுவதிலும் மிகவும் உச்சமான அறவொழுக்கம்தான் சொல்லப்படுகிறது. அற ஒழுக்கத்துக்கு மாறான எதையும் திருவள்ளுவர் சொல்ல மாட்டார் என்ற ஒன்றே திருவள்ளுவர் எதைச் சொல்லி யிருக்க மாட்டார் என்ற உணர்ச்சியை உண்டாக்கும். திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கவே மாட்டார் என்று நாம் நிச்சயமாகக் கூறமுடியுமோ அதையே பரிமேலழகர் திருக்குறளுக்குப் பல இடங்களில் கூறியுள்ளார்'

என்று தெளிவாக ஆய்ந்து அதனைத் தம் நூலில் விரிவாக விளக்குகின்றார், நாமக்கல் கவிஞர்.[35] சான்றாக ஒன்று மட்டும் காண்போம் :

ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்[36]

என்பது 'வினை செயல் வகை' அதிகாரத்தில் உள்ள குறட்பா. வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை என்ற நிரல் வைப்பில் இவ் வதிகாரம் மூன்றாவதாகும். குற்றமற்றசெயல்களை, மனவுறுதியுடன் செய்ய வேண்டியவழி முறைகளைக் கூறுவது இம் மூன்றதிகாரங்களின் பொருள்களாம். பரிமேலழகர் அங்கவியலில் இக் குறட்பா வருவதால் இப்பாட்டிற்குப் பொருள்எழுதும்போது, வினைசெய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போராற் செய்தல் நன்று. அஃதியலாவிடத்துச் சாம, பேத, தானம் என்ற மற்ற மூன்று உபாயங்களுள் ஏதாவது ஓர் உபாயத்தால் செய்ய வேண்டும் என்கிறார். இவ்வுரையை மறுத்துக் கவிஞர் கூறுகின்ற

35. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவர் திடுக்கிடுவார், பக். 27—51.
36. திருக்குறள், 673.

ஆய்வுரை மிகவும் நுட்பமும் திட்பமும் வாய்ந்தது! அது பின்வருமாறு :

'இந்த உரையின்படி 'வினை' என்பதற்கும் போர் என்பது பொருளாகின்றது. 'செல்லும் வாய்' என்பதற்குச் 'சாம, பேத, தானம் என்பவற்றுள் ஒன்று' என்பது பொருளாகிறது. 'மேலும் போர் புரிய நினைக்க வேண்டியவர்களும்கூட முதலில் சாம, பேத, தானம் என்ற மூன்று உபாயங்களையும் முறையே கையாள வேண்டுமென்றும் இந்த மூன்று உபாயங்களாலும் முடியாது போனால்தான், கடைசிப் பட்சமாகத் தண்டம் என்ற போர் புரிதலை மேற்கொள்ள வேண்டும் என்பது வழக்கமாகச் சொல்லப்படுகிற நெறிமுறை. அப்படியிருக்க, இந்த உரையில் எந்தக் காரியத்தையும் போர் செய்து முடித்துக் கொள்வதுதான் நல்லது! அப்படிப் போர்செய்ய முடியாத போதுதான் 'சாம, பேத, தானம்' என்ற மற்ற மூன்று உபாயங்களில் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது மிகவும் விபரீதமானது. இது எல்லா நீதி நூல்களுக்கும் விரோதமானது.

'இது (இக் குறளுக்குச் சொல்லப்பட்ட விசேடவுரை) அரசனையும் அமைச்சனையும் சேர்த்துக் குழப்புகிறது. இங்கே பகைவன் யார்? போர் எதற்காக? அரசனுக்கானாலும் அமைச்சனுக்கானாலும், 'வினை செயல் வகை' என்பது போர்புரியும் வேலை ஒன்றுதானா தொழில்? 'வினை' என்ற சொல்லுக்குப் 'போர்' என்பது பொருளானால் 'வினைத்தூய்மை' என்பதற்குப் 'போரின் தூய்மை' என்றும், 'வினைத்திட்பம்' என்பதற்குப் 'போர் செய்யும் திட்பம்' என்றும் பொருள் கொள்ளலாமா? 'வினை' என்ற பதத்திற்கு 'வேலை', 'தொழில்', 'செய்கை', 'காரியம்' என்பவைகளே பொருளாகும்; போர் நடக்கும் சூழ்நிலைகளில் 'போர்வினை', 'சமர்வினை' என்று கொள்ளவேண்டிய இடங்களில் அது போரைக்

குறிக்கலாம். 'வினை' என்ற தனிச் சொல்லுக்குப் 'போர்' என்ற அர்த்தம் எங்குமில்லை. இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் செய்துள்ள இந்த உரையில்தான் 'வினை' என்ற சொல்லுக்குப் 'போர்' என்ற பொருள் புகுத்தப்பட்டு விட்டது. அதிலிருந்து பிற்காலத்திய அகராதிகளிலும் 'வினை' என்ற பதத்திற்குப் 'போர்' என்பதும் ஒரு அர்த்தமாக அச்சடிக்கும் வழக்கம் உண்டாகி விட்டது'

என்ற நாமக்கல் கவிஞரின் மறுப்புரையிலும்—விளக்கவுரையிலும் பொதுவாகப் பொருள் கூறவேண்டியவிடத்துப் பரிமேலழகர் வலிந்து பொருள் கொள்வதை மறுக்கின்றார்.

நாமக்கல்லாரின் திருக்குறள் புது உரை அமைப்பும் சிறப்பும்

மக்கள் வாழ்வின் பல்வேறு கூறுகளும் அமையப் படைப்பது தான் இலக்கியம். அத்தகைய இலக்கியக் கலைக்குப் பொருள் காண வேண்டும் எனின், பொருள் காண்பார்க்குப் பலதுறையறிவு வேண்டும் என்பது தானே விளங்கும். ஒரு நூலின் கருத்தையும், பாட்டின் பொருளையும் காண்பதற்கும், ஆய்வதற்கும் பல்துறை அறிவு வேண்டும் என்பர்.

''ஆராய்ச்சிக்கு உயிர்நாடியாக இருப்பது—இருக்கவேண்டியது நடுநிலை நெஞ்சம். **விருப்பு வெறுப்பால் உண்மை விளங்குவதினும்** நடுநிலைப் பார்வையாலேயே நன்கு விளங்கும்''; ''ஆராய்ச்சியின் விருப்பத்திற்குப் பலர்/பலகாலம்/பலபடி போலவே பல கலை அறிவும் (Inter-face/disciplinary knowledge) தேவை'' என்பர் ஆராய்ச்சி நெறிமுறை உணர்ந்த அறிஞர்.[37]

இந்த வகையில் நாமக்கல் கவிஞரின் புத்துரை - ஆய்வு உரை அமைந்துள்ளதை அவரே தம் முன்னுரையில் கூறுவதனின்றும் நன்கு உணரலாம் :

'இந்த நூலுக்குத் திருக்குறள் 'புதுஉரை' என்று பெயரிடப் பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் இதி

37. சஞ்சீவி, டாக்டர் ந., ஆராய்ச்சி நெறிமுறைகள் (கட்டுரைபக். 94, 95) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை, 1975.

லுள்ள உரைகள் மிகவும் எளிய நடையில் ஒரு புது முறையில் சொல்லப்படுகின்றன என்பதற்காக மட்டும் அல்ல. பழைய உரைகளில் பல குறள்களுக்கு மிகவும் தவருகச் செய்யப்பட்டுள்ள உரைகளுக்கு முற்றிலும் வேறுபட்ட புது உரைகள் சொல்லப்பட்டிருப்பதே 'புது உரை' என்ற பெயருக்குக் காரணம். பத்து உரையாசிரியர்கள் எழுதிய பழைய உரைகளுக்குள் பரிமேலழகர் செய்த உரையே பாடமாகப் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. பரிமேலழகர் மிகச் சிறந்த அறிஞர் என்பதில் ஐயமில்லை. ஆனால் திருவள்ளுவருடைய காலத்துக்குச் சுமார் 1400 ஆண்டுகளுக்குப் பின்னால் பரிமேலழகர், திருவள்ளுவருடைய கருத்தையும் திருவள்ளுவர் காலத்தில் அரங்கேற்றப்பட்ட உரைகளையும் ஆராய்ந்தெழுத அவகாசமில்லாதவராகி, தம்முடைய காலத்தில் வழங்கிய உரைகளையும், அப்போதிருந்த சமூகப்பழக்க வழக்க சம்பிரதாயங்களையும் தழுவித் தம்முடைய உரையைச் செய்திருக்கிருர். பரிமேலழகருக்கு முன்னால் திருக்குறளுக்கு உரை செய்திருந்த ஒன்பது பேர்களும் அவரவர் மனம் போனபடி குறள்களின் வரிசைக் கிரமங்களை மாற்றிக்கொண்டு, வைப்பு முறையைச் சீர்கெடுத்திருந்தார்கள். அதை ஒழுங்குபடுத்த மூலத்தின் ஏட்டுப்பிரதிகளைத் தேடி ஆராய்வதற்கே பரிமேலழகர் அரும்பாடு பட்டிருக்க வேண்டுமென்று அனுமானிக்க இடமிருக்கிறது. அதனால் உரைகளையும் ஆராய்ந்து மாற்றியமைக்க அவருக்கு அவகாசம் இல்லை போலும். எனவே அவருடைய உரைகளும் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்கு ஒவ்வாதனவாகவும் தத்துவங்களுக்கும் சத்தியங்களுக்கும் முரண்பட்டனவாகவும் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் முற்றிலும் வேறுபட்ட பொருத்தமான புது உரைகளைச் செய்திருப்பதே இந் நூலின் சிறப்பு.'[38]

38. நாமக்கல் கவிஞர், திருக்குறள் புது உரை, பக். 4.

கவிஞருடைய உரையமைப்பின் சில கூறுகளை மட்டும் ஈண்டுக் காண்போம் :

> பெறுமவற்றுள் யாமறி வதில்லை யறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற.[39]

இக் குறட்பாவிற்கு உரையெழுதிய பரிமேலழகர் 'அறிவறிந்த மக்கள்' என்ற கருத்து பெண்பாலை யொழித்து நின்றது' என்று கூறுகிறார். இவ்வதிகாரப் பெயர் 'புதல்வரைப் பெறுதல்' என்பதனை மறுத்து 'மக்கட்பேறு' என்றே கவிஞர் உரைக்கின்றார். இக் குறட்பாவிற்குக் கவிஞர் எழுதிய உரையில் வள்ளுவர் சடங்குகளைத் திணிக்க விரும்பாதவர் என்று கூறும் முடிவு ஏற்றுக் கொள்ள வேண்டிய முடிபேயாகும். அவருடைய விளக்க உரை வருமாறு :

> 'அறிவறிந்த மக்கள்' என்பதற்கு 'அறிய வேண்டியவற்றை அறியக் கூடிய புத்தி கூர்மையுள்ள மக்கள்' என்பது மட்டும்தான் அர்த்தம். 'அறிவறிந்த மக்கள்' என்பது பெண் மக்களை நீக்கி, ஆண்மக்களை மட்டும்தான் குறித்தது என்பது சரியல்ல. 'மக்கட்பேறு' என்ற அதிகாரம் ஆண்மக்கள் வேறு,பெண் மக்கள்வேறு என்று பிரித்து எழுதப்பட்டிருக்கிறதென்றால் திருவள்ளுவர் பெருமைக்கு நாம் செய்யக்கூடிய அநியாயம் அதைவிட வேறில்லை. மேலும் 'அறிவறிந்த' என்பது இம்மை, மறுமை....... என்பவைகளுக்கான 'அறிவை அறிந்த' என்று நீட்டிப் பொருள் செய்தாலும் ஆண்கள் மட்டும் தானா இம்மை, மறுமைகளை அறிய வேண்டியவர்கள்? பெண்கள் அவற்றை அறிய வேண்டாமா? அறியக்கூடாதா? அல்லது அறியக்கூடிய புத்தி கூர்மை பெண்களுக்கு இருக்க முடியாதா? 'அறிவறிந்த' என்பதற்கு ஆண்மக்கள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் (திவசம் முதலியன) என்ற, 'அறிவை அறிந்த' என்று பொருள் கொள்வதற்குப் பதங்களில் இடமில்லை.

39. திருக்குறள், 61.

ஆண்மக்கள் அறிய வேண்டிய அறிவு, நீர்க்கடன் செய்வது மட்டுமல்ல. மேலும் நீர்க்கடன் என்பது ஒரு சாராருடைய சடங்கு நம்பிக்கை. திருவள்ளுவர் அப்படிப்பட்ட நம்பிக்கைகளை அவமதிப்பதில்லையானலும் சடங்குகளை அவர் திணிப்பதில்லை. அதனால்தான் எல்லா மதத்தினரும் திருக்குறளைப் பொதுமறையாகப் போற்றுகின்றார்கள். எது எப்படியிருந்தாலும் ஆண்மக்கள்தாம் 'அறிவறிந்த மக்கள்' என்று வள்ளுவர் எண்ணியிருக்கவே முடியாது.'

இங்ஙனம் இவர் கூறும் உரை விளக்கங்கள் காலத்திற்கு ஏற்றவையாகவும் விளங்குகின்றன.

நாமக்கல் கவிஞரின் புது உரையைப் படிக்கக் கேட்ட தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்கள், "புது உரை, பழமைக்கு முரண்படாதது; புதுமைக்கு அரண்செய்வது; காலத்துக்கு ஏற்றது; அதன்கண் காந்திய மணங்கமழ்கிறது" என்று பாராட்டினர்.[40]

'பகுத்தறிவுக் கருத்தையும் ஏற்று, சமயப் பண்பையும் முழுதளவாக ஏற்றவர் கவிஞர் இராமலிங்கனர். இப் பண்பு திருவள்ளுவரை அணுக உதவும் பண்பே. அவரும் அணுகியுள்ளார். ஆனல் அவர் பகுத்தறிவு வேருக, சமயப் பண்பு வேருகத் தொடர்பற்றுச் செல்வதால், இரண்டும் இணைந்த திருவள்ளுவர் பண்பை எட்டிப்பிடித்தும், நம் காலக் காற்று அவரைப் பிடி நழுவ விட்டுப் பின் தட்டித்தடவும்படி செய்து விடுகிறது'

என்று பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார் இவர் உரையியல்பைப் பற்றி உரைப்பர்.[41]

40. நாமக்கல் கவிஞர், திருக்குறள் புது உரை, பக். 5.

41. அப்பாத்துரையார், கா., பன்மொழிப்புலவர், மணிவிளக்கவுரை, பக். 288.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்[42]

என்னும் குறட்பாவிற்கு இராமலிங்கனார் தரும் விளக்கவுரை நயமாக உள்ளது. அதன் விளக்கவுரை பின்வருமாறு :

> 'கல்வி கற்பது அறிவுக்காக. நாம் எவ்வளவு கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்து கொண்ட அறிவுக்கு மேல் இன்னும் அறியவேண்டிய அறிவு இருந்து கொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்றபோது அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக இருக்கிறது. ஆகவே நாம் அறிந்து கொள்ள முடியாத அறிவு இருந்து கொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் 'வாலறிவன்' என்றும் 'பகவன்' என்றும் சொல்லு கிறோம். அந்தப் பகவான் என்ற பூரண அறிவிற்கு மிகவும் குறைந்ததுதான் நம்முடைய அறிவு என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம் கற்ற கல்வியின் பயன் என்னவோ! ஒப்புக்கொண்டால் அதற்கு வணங்க வேண்டும்.'

இவ்விளக்கவுரைப் பகுதி திருவள்ளுவர் உள்ளம் தொடுகிறது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் திருவள்ளுவரே 'அறிதோறும் அறியாமை கண்டற்றால் (1110) என்று கூறிய கருத்தையே இது இக் குறட்பா உரையில் கொண்டு இணைக்கிறது. அத்துடன் 'வாலறிவன்' ஆகிய கடவுள் அறிவின் பூரணம், எல்லையற்ற அறிவின் எட்டாத எல்லை என்பது 'சமயங்களின் முடிவு, வள்ளுவரின் முடிவேயாகும்.

'கல்வியின் இலக்கு இறைவனே' என்று கவிஞர் முடிவாகக் கூறத் தவறியமையின் பின்வருமாறு கருதுகிறார் பன்மொழிப் புலவர் :

42. திருக்குறள், 2.

"கிட்டத்தட்ட நேர்மை உரை கண்டுணர்ந்தும் 'கடவுள் கல்வியின் இலக்கு' என்று கூறத்துணியாத நம்காலப் போலிப் பகுத்தறிவு, நம் காலப் போலி ஆத்திகம் ஆகிய இவற்றின் பிடியில்பட்டு, கண்டு எடுத்த வைரத்தை எறிந்து விட்டுக் கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து அடுக்குகிறார் கவிஞர்".[43]

பழைய உரையாசிரியர் காளிங்கர் ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதிக் குறளிலும் அடுத்த அதிகாரத்திற்குரிய பொருளை இயைபு படுத்திக் காட்டிச் செல்வர். நாமக்கல் கவிஞர் ஒவ்வொரு குறளின் இறுதியிலும் அடுத்த குறளுக்குரிய பொருளோடு தொடர்பு படுத்தி உரையமைத்துள்ளார்.

முதற் குறட்பாவான 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற குறளுக்குக் கருத்துரையாக,

"எழுத்தைக் கொண்டு எழுதினவனை எண்ணிப் பார்க்கிறோம். அதேபோல உலகத்தைக் கொண்டு அதை உண்டாக்கினவனை எண்ண வேண்டும்"

என்று கூறியபின், அடுத்த குறளுக்கு இயைபாக, 'அப்படி எண்ணாமல் பல நூல்களைக் கற்றவர்களிலும் கூட அநேகர் அவனை வணங்க மறுக்கிறார்களே' என்றுகூறி அடுத்த குறளுக்குப் பொருள் தொடர்பு ஏற்படுத்துகின்றார். இவ்வாறே அதிகாரத்தினுள் பொருள் இயைபுஏற்படுத்தித் தொகுத்துரைக்கும் இயல்பு இனியதாயிருக்கின்றது.

அறத்துப்பால் தவிர, பொருட்பால், காமத்துப்பால் ஆகிய இரண்டிற்கும் இவர் தந்துள்ள முன்னுரை குறிப்பிடத்தக்கது. சில இடங்களில் அதிகார வைப்பு முறைக்கான காரணங்களையும் சுட்டிச் செல்வர். எனவேதான் 'திருக்குறள் உரை வேற்றுமை'

43. அப்பாத்துரையார், கா., திருக்குறள் மணிவிளக்கவுரை,பக். 239.

கண்ட இரா. சாரங்கபாணி அவர்கள்,

> "நாமக்கல் கவிஞர் தம் நிறைந்த வாழ்க்கைப் பயிற்சியால் சில குறள்களுக்குப் புதுவதாகவும் பொருத்தமாகவும் உரைகளை வழங்கியுள்ளார். குறளுக்குக் குறள் வைப்புமுறைக் காரணங்கண்டு எழுதுதல் இவர்தம் உரையியல்பாகும்."

என்று போற்றுவர்.[44]

ஒரு குறளுக்குப் பொருள் நாடும்பொழுது அந்தக் குறளுக்கு முன்னும் பின்னுமுள்ள குறட் கருத்துக்களையும் அறிந்து பொருள் காணவேண்டும் என்னும் கருத்துடையவர் கவிஞர். சான்றாகத் 'தவம்' என்னும் அதிகாரம் முழுவதற்கும் இவர் புதுமையாகவும், பொருத்தமாகவும் உரை கண்டிருப்பதைக் கூறலாம்.[45] வள்ளுவர் கூறிய கருத்தினை வைத்தே ஏனைய குறள்களுக்கும் பொருள் காணும் நினைவாற்றல் திறனும் நன்கு பொருந்தி விளங்குவதைக் குறள் 506 உரையில் காணலாம்.

> "பொதுவாக ஒரு குறளுக்கு உரை செய்யும்போது அந்த உரை திருக்குறளின் பண்புகளுக்குப் பொருந்துமா என்பதைக் கவனிக்க வேண்டும். கூர்ந்து பார்த்தால் எந்த உரை பொருந்தும் எது பொருந்தாது என்பதைத் தீர்மானிக்கத் திருக்குறளே வழிகாட்டும்"[46]

என்னும் இவர்தம் கூற்று இவருடைய திறனாய்வின் வன்மையையும் வள்ளுவரின் உள்ளத்தை உணர்ந்த நெஞ்சப் பாங்கையும் இனிது புலப்படுத்தும்.

தொகுப்புரை

இதுகாறும் கூறியவற்றால் விடுதலைப் பணியையும், தமிழ்ப் பணியையும் ஒருங்கே ஆற்றிய காந்தியுகக் கவிஞர் இராமலிங்க

44. சாரங்கபாணி, இரா., திருக்குறள் உரைவேற்றுமை, பக். 10., செல்வி பதிப்பகம், 1963.
45. நாமக்கல் கவிஞா, திருவள்ளுவரும் பரிமேலழகரும், பக். 32—78.
46. ,, ,, திருவள்ளுவரும் பரிமேலழகரும், பக். 86.

ஞரின் திருக்குறட் பற்றையும், திருக்குறளின் பெருமையை அவர் உலகிற்கு உணர்த்திய விதத்தையும், வள்ளுவமே காந்தீயம் என்று கொண்ட உள்ளத்தையும் இனிது அறியலாம். நாமக்கல்லாரின் குறள் ஆய்வு நூல்களால் அவர்தரும் புதுமை விளக்கங்களையும், பழமைக்கு மாறுபடாத ஆனால், புதுமைக்கு அரண் செய்யும் புத்துரையின் அமைப்பினையும் ஆய்வுத் திறனையும் உணரலாம்.

சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்,

> "நூலாசிரியரின் உள்ளத்தை உள்ளவாறுணர்ந்து சாதிக்கண் கொண்டும், சமயக்கண் கொண்டும், கட்சிக்கண் கொண்டும் காணாமல், சமன் செய்து சீர்தூக்கும் கோல் போன்ற உள்ளம் உரையாசிரியருக்கு இருக்க வேண்டிய உண்மையை நன்கு உணர்ந்த நாமக்கல் கவிஞர்,
>
> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு
>
> என்னும் வாய்மொழியின் வழிநின்று முந்தையோர் உரைகளை யெல்லாம் ஆராய்ந்து தம் புது உரையைத் திறம்பட உரைக்கின்றார்"

என்று இவருடைய உரைச் சிறப்பினைப் பாராட்டுவதே அவ் உரையின் தனிச்சிறப்பினை நன்கு உணர்த்துவதாகும்.[47]

47. நாமக்கல் கவிஞர், திருக்குறள் புதுஉரை, பக். 7.

நடை நலம்

வாழும் இலக்கியங்கள்

கலைகளில் சிறந்தது இலக்கியக்கலை. உலக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படியான மொழியின் வழியே தோன்றுவது அது. ஒரோவழி வரலாற்றை மாற்றியமைக்கும் ஆற்றல் பெற்ற இலக்கிய உலகில் என்றும் வாழும் இனிய இலக்கியங்களாகத் திகழ்வன சிலவேயாகும்.

உணர்த்தும் திறன்கள்

காலங்களைக் கடந்தும் கருத்துக்களை கடந்தும் இன்றும் அவை ஏற்றமும் எழிலும் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் அவ்விலக்கியங்கள் பெற்றிருக்கின்ற பல்வேறு தனிச் சிறப்பியல்பு களேயாகும். கூறும் கருத்தால் மட்டும் அவை கவின் பெற்றுத் திகழவில்லை. உணர்த்தும் திறத்தாலும் அவை ஒளிபெற்றும் உயிர் பெற்றும் திகழ்கின்றன. கவிதை உணர்வு, கூறும் பொருளில் இல்லை; உணர்த்தும் திறத்தில் உண்டு என்பர்.

தான் பெற்ற உணர்ச்சிகளைப் பிறரும் பெறுதற்குக் கவிஞன் சில உத்திகளைக் கையாளுகின்றான். கற்பனை, சொல்நயம், ஒலிநயம், யாப்பு அணி அழகுகள், குறிப்பு, சுவைப்பொருள்கள் முதலியன அத்தகைய உத்திகள். இவற்றுள் சிலவேனும் பொருந்தி விளங்கும் படைப்பையே பலரும் பாராட்டுவர். இத்துணை அழகுத்திறன்கள் அனைத்தும் இயல்பாகப் பொருந்தி அமையும் கவின்கலையே கவிதைக்கலை.

நடைநலம்

இவற்றுள் கவிஞன் எது முதன்மையானது என்றெல்லாம் பகுத்தும் தொகுத்தும் பார்த்து அமைத்தால் அவனுடைய நடை நலம்பெறுது. அதுபோலவே கவிஞனின் படைப்பில் ஏதேனும் ஒன்றைமட்டும் பிரித்து இதுதான் 'நடைச்சிறப்பு' என்று நாம் தனியாகவும் எடுத்துரைக்க இயலாது. இத்தகைய உத்திகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இணைந்தும் இழைந்தும் விளங்கினுல்தான் செய்யுள்நெறி-செய்யுள்நடை நலமுறும்.[1]

நடை-சொல்லும் பொருளும்

தமிழில் 'நடை' என்பதற்கு 'இயக்கம்' என்ற அடிப்படை ஒருமைப்பாடுடைய பல்வேறு பொருள்கள் உள்ளன.[2] அவற்றுள் ஒன்று எழுதுகின்ற மொழியின் இயல்பைச் சுட்டுவதாகும். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி 'பாஷையின் போக்கு' (Style in language) என்று கூறுகிறது.[3] 'நட' என்பதே எல்லாச் சொற்களுக்கும் பகுதியாக விளங்குகிறது. சொன்னடை, வாக்கிய நடை, செய்யுள் நடை, நூல் நடை என்ற வழக்காறுகளில் இச்சொல் ஆகுபெயர்ப் பொருளிலேயே வருகிறது என்பர்.

தொல்காப்பியரும், வள்ளுவரும், பிறரும் 'நடை' என்னும் சொல்லாட்சியைப் பல்வேறு இடங்களில் எடுத்தாண்டுள்ளனர்.

1. Cleanth Brooks, Robert Penn Warren, Fundamentals of Good Writing, p. 332. London.

2. 'நடை' என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி தரும் 22 பொருள்கள் : 1) காலாற் செல்கை; 2) கிரகம முதலியவற்றின் கதி; 3) பிரயாணம்; 4) அடிவைக்கும் கதி; 5) வழி; 6) வாசல்; 7) இடைகழி; 8) கப்பலேறும் வழி; 9) ஒழுக்கம்; 10) வழக்கம்; 11) பாஷையின் போக்கு; 12) வாசிப்பிளேட்டம்; 13) இயல்பு; 14) அடி; 15) கூத்து; 16) தொழில்; 17) செல்வம்; 18) ஒழுக்க நூல்; 19) நித்திய பூசை; 20) கோயில்; 21) தடவை; 22) நீண்டநாள் (குறிப்பு)-'நடை' என்னும் சொல்லினை அடியாகக் கொண்டே 57 சொற்கள் தமிழ்ப்பேரகராதியில் குறிக்கப்பட்டுள்ளன.

3. தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, பக். 2145.

தொல்காப்பியரும், பிறரும் ஆண்டுள்ள ஆட்சியையும், வள்ளுவர் 'சொல்லின் நடை தெரிந்த' என்று கூறுவதையும் கீழே காணலாம்:

'உரைவகை நடையே நான்கென மொழிப'[4]

'ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியெனமொழிப'[5]

'நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி'[6]

'காட்டிய நடைநெறி கடைப் பிடித்திவற்றோடு
கூட்டி உணர்தல் ஆன்றோர்கடனே'[7]

'விருத்தியாகும் விகற்ப நடை பெறுமே'[8]

'நாற்பா நடை தெரிந்த நன்னூற் பெரும்புலவர்'[9]

'எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு
இழுக்கா நடையது யாப்பெனப் படுமே'[10]

'ஆறு வழகினைக் காந்தியென் கின்றதது தமிழின்
நாறு விதமாய் நடைபெற் றியலு...'[11]

'இடை தெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடை தெரிந்த நன்மையவர்'[12]

எனவரும் இலக்கண, இலக்கிய ஆட்சிகளில் 'நடை' மொழியின் நடையைச் சுட்டுவதாகவே ஓரளவு கொள்ளலாம்.

நடை நயம் உணர்ந்த சான்றோர்

இலக்கியத்தை ஆழ்ந்து பயின்றவர்கள் அதன் சொல் நோக்கையும், பொருள் நோக்கையும், தொடை நோக்கையும்

4. தொல். செய். 171.
5. தொல். செய். 107.
6. தண்டி. 8.
7. தண்டி. 26.
8. நன்னூல், 4.
9. யாப். விருத்தி, ஒழிபு இயல், பக். 379.
10. யாப்பருங்கலம், 1.
11. வீரசோழியம், அலங். 149.
12. குறள், 712.

நடை நோக்கியும் கண்டு மகிழ்ந்தனர் என்பதனைப் பின்வரும் பாடலாலும் அறிய முடிகிறது. பிள்ளைப் பெருமாளையங்கார் எனப்படும் அழகிய மணவாளதாசரின் பாடலைச்

'சொல் நோக்கும் பொருள் நோக்கும்
தொடை நோக்கும் நடை நோக்கும்
எந்நோக்கும் காண இலக்கியம் ஆவது'

என்னும் பாடலால் பாராட்டிப் பாடினார் ஒரு பழம் புலவர்.[13] 'நடை நோக்கு' என்பதற்கு 'வைதருப்பம் கௌடம் முதலாகக் கூறப்படுகின்ற நடைகளால் வரும் அழகு' என்றே உரை எழுதுவர் அஷ்டப் பிரபந்தத்தைப் பதிப்பித்த திரு வை.மு. சடகோப ராமாநுஜாசாரியர் (பக்-3).

'தெரிதீங்கிளவி',[14] 'தெளிதீங்கிளவி'[15] 'அமிழ்தத்தன்ன அந்தீங்கிளவி'[16], 'செவிநுகர் கனிகள்'[17] ''செஞ்சொற் கவியின்பம்'[18], 'செஞ்சொற் புலவன்'[19], 'அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர்,[20], 'சொல்வலை வேட்டுவன்'[21] முதலான தனிச்சொற்கள் கவிஞர்கள் நடையமைப்புக்காகச் சொல்லாட்சியை எத்துணை அளவு போற்றினர் என்பதையும் நமக்கு இனிது உணர்த்தும்.

ஈரடியால் இப்பேருலகை அளந்த வள்ளுவப் பெருந்தகையின் கீழ்வரும் தொடர்களும் நடையமைப்பிற்குச் சொல்லமைப்பு எத்துணை அளவு தேவை என்பதைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

13. திருவரங்கக் கலம்பகம், சிறப்புப்பாயிரச் செய்யுள்.
14. குறுந்தொகை, 250.
15. நற்றிணை, 164.
16. குறுந்தொகை, 206, அகம் 3, நற். 221, ஐங். 490, 499.
17. கம்பராமாயணம், பாலகாண்டம், நாட். 51.
18. கம்ப. பாலகாண்டம், மிதிலைக்காட்சி, 23.
19. நன்னூல், 23.
20. புறநானூறு, 235.
21. புறநானூறு, 252.

'எண் பொருளவாகச் செலச் சொல்' [22]

'திறன் அறிந்து சொல்லுக' [23]

'வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து சொல்லுக' [24]

'நிரந்து இனிது சொல்லுக' [25]

'மாசற்ற சில சொல்' [26]

'கற்றதுணர விரித்துரை' [27]

'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்' [28]

'சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்' [29]

'ஆராய்ந்த சொல்வன்மை' [30]

இத்தொடர்கள்- 'உணர்த்தும் திறன்' கவிஞர்க்கும் ஏனையோருக்கும் எத்துணையளவு இன்றியமையாதது என்பதையும் தெளிவாக்குகின்றன. எனவே எண்ணங்களையும், மனத்தில் எழும் உணர்வுகளையும் வார்த்தைகளால் வடித்துக் கொடுக்கும் கலைத் திறனையே 'நடை' யென்று இயம்பலாம்.[31]

"நூனடையாவது நூல் செல்லும் செலவு, நூற்பொருள் செல்லும் செலவு எனபதாம். கானடையின் நோக்கமாவது ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குச் சென்று சேர்தல். நூனடையின் நோக்கமாவது ஒருகருதது ஒருவன் மனத்திலிருந்து பிறனொருவன் மனத்துச் சென்று சேர்தல்" [32]

22. குறள். 424.
23. குறள். 644.
24. குறள். 645.
25. குறள். 648.
26. குறள். 649.
27. குறள். 650.
28. குறள். 643.
29. குறள். 711.
30. குறள். 682.
31. Alan Warner, A Short Guide to English Style, p. 1.
32. தமிழ் வியாசங்கள், பக். 186.

என்று திருமணம் செல்வக் கேசவராய முதலியார் விளக்குவதும் இங்கு ஒப்பு நோக்கற்கு உரியதாகும்.

நடை - பொருள்

உரையாசிரியர் இளம்பூரணர்,

ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப [33]

என்னும் செய்யுளியல் நூற்பாவில் 'நடையென்றது அப் பாக்கள் இயலுந்திறம்' என்றே பொருள் எழுதுவது உளங்கொளத் தக்கது.

கவியரசர் கம்பரும் சிறந்த பாட்டு எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கியுள்ளார்:

புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்.

பெண்மையிலும், பொய்கையிலும், அயோத்திநகர அமைப்பிலும், படையமைப்பிலும், தேனீ இனத்திலும், வளஞ்சுரக்கும் கோதாவரியிலும் கவிதைநடையைக் கண்டகவிஞன் கம்பன். [34] கோதாவரியாற்றின் தெளிந்த ஒழுக்கத்திற்கு ஒப்புமைகூறி அணிநயம், ஆழ்ந்த பொருட்சிறப்பு, அகப்பொருள் துறைகள், ஐந்திணை வருணனை முதலியன அமைந்து தெளிவும், குளிர்ந்த ஒழுக்கமும் உடையதாக விளங்குவதே பாட்டு என்பது கம்பரின் கூற்றாகும்.

வடமொழி நூலார் நடையை 'ரீதி' என வழங்குகின்றனர். ஆங்கிலத்தில் நடையென்பதற்கு நேரான சொல்

33. தொல். இளம், செய். 104.
34. சுப்பிரமணியன், டாக்டர் எஸ். வி., மாந்தர் சிறப்பு, பக். 60-70 (கம்பன்கண்ட கவிதை), ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், 1974.

'STYLE' என்பதாகும். முதன் முதலில் இச் சொல் பண்டைய மக்கள் எழுதுவதற்குப் பயன்படுத்திய எழுதுகோலினையே குறித்தது என்பர்.[35]

தமிழ், வடமொழி இலக்கண நூலாரும், இலக்கியத் திறனாய்வாளரும் 'நடையின் இலக்கணம்' குறித்துக் கூறுவதை இனிச் சுருக்கமாகக் காண்போம்:

நடையின் இலக்கணம்

உரிய சொற்கள் உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே நடை. மொழியில் அழுத்தத்தையும் தெளிவையும் உருவாக்க முயலும் எல்லா வழிவகைகளையும் மொழிநடையியலின் கீழ் அடக்கலாம். இவற்றில் எல்லா மொழிகளிலும் பழமையான மொழியிலும் கூட, ஊடுருவிச் செல்லும் உருவகங்களும் எல்லா அணி உருவங்களும், சொற்றொடர் அமைப்பும் அடங்கும். அடுக்குநிலை, நிறைவு, உயர்வுநவிற்சி, உச்சநிலை என்றின்ன உருவங்களை விழுமிய மொழிநடைக்குரியவை என்பர்.[36]

வச்சணந்தி மாலை

தமிழிலக்கணத்தில் (செய்யுளியலில்) கூறப்பட்ட இலக்கணங்களுள் சிலவும், பிறவும் நடையின் இலக்கணத்திற்கும் பொருந்தி விளங்குவதை நாம் காண முடியும்.

எடுத்த பொருளிளேனு டோசை யினிதாய்
அடுத்தவைசெஞ் சொல்லாய் அணியும் - தொடுத்த
தொடையும் விளங்க அவைதுதிப்பச் சொல்லின்
இடமுடைய மாமதுர யாப்பு.[37]

35. Style : 1. a sharp, slender pointed instrument of iron or other material used by the ancients for writing by scratching on wax tablets. One end was blunt and smooth, and was used to make erasures—Webster's New Twentieth English Dictionary of the English Language, p. 1810,

36. ரெனிவெல்லாக, ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, பக். 262.

37. வச்சணந்திமாலை, பக். 30.

என்று வச்சணந்திமாலை கூறும் இலக்கணத்திலும் ஓசையும், பொருளும், அலங்காரமும், தொடையும் செய்யுளின் அழகுக்கும் நடைக்கும் இன்றியமையாத இயல்புகள் என்ற குறிப்புக் காணப் பெறும்.

நன்னூல்

சொற்களை வீணாக விரியாது சுருங்கி நிற்கச் சொல்லுதல், சுருங்கச் சொல்லினும் பொருளை ஐயமற விளங்கவைத்தல், படிப்போருக்கு இனிமைதரல், நல்ல சொற்களைச் சேர்த்தல், சந்த இன்பம் உடையதாய் இருத்தல், ஆழ்ந்த பொருளினை உள்ளடக்கியிருத்தல், விழுமியது பயத்தல் முதலான பல இயல்புகள் நூலுக்கு அழகென்றார் பவணந்தியார்.[38] இத் திறங்களையே நடையமைப்பிற்குரிய இலக்கணங்களாகவும் நாம் கொள்ளலாம். இவ்வாறே நன்னூலார் கூறும் முப்பத்திரண்டு உத்தி வகைகளும்,[39] பத்து வகைக் குற்றங்களும்[40] இவற்றோடு எண்ணத் தக்கனவாம்.

குன்றக் கூறல், மிகைபடக் கூறல்,
கூறியது கூறல், மாறுகொளக் கூறல்,
வழூஉச்சொற் புணர்த்தல், மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்

முதலாய குற்றங்கள் படிப்பவருக்கும், கேட்பவருக்கும் சுவை நலனைத் தாராததால் இக் குற்றங்களின்றியேதாம் விரும்பிய கருத்தைப் பிறருக்கும் உணர்த்த வேண்டும் என்பது புலனும்.

தொல்காப்பியம்

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி எனப.[41]

38. நன்னூல், பாயிரம். 13.
39. நன்னூல், பாயிரம். 12.
40. நன்னூல், பாயிரம். 14.
41. தொல். செய். 177

என்னும் நூற்பா தொல்காப்பியர் 'முதுமொழி'க்கு வகுத்துள்ள இலக்கணமாகும். இந் நூற்பாவிற்கு உரைவிளக்கம் தந்த பேராசிரியர்,

> "கூரியதாய்ச் சுருங்கி விழுமிதா யெளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளொன்றினை முடித்தற்கு வருமாயின், அங்ஙனம் வந்ததனைப் பொருண் முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழியென்ப புலவர்" [42]

என்று கூறுவர். எளிமை, தெளிவு, நுட்பம், சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் முதலாய பண்புகளே இங்கும் சுட்டப்படுதல் நோக்கத்தக்கது.

தொல்காப்பியர் கூறும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு முதலான இயல்புகளுள் சில செய்யுளின் அழகுக்கும், நடையமைப் பிற்கும் உரியன. மெல்லிய சொற்களால் ஒள்ளிய பொருள் மேல் சொல்லப்படுவது அம்மை[43]. செய்யுள் சொல்லாகிய திரிசொல்லினுல், ஓசை இனியதாக அமைக்கப்படுவது அழகு[44] இழுமென்ற மெல்லிய சொற்களால் விழுமிய கருத்துகளைக் கூறுவது தோல்[45]. இன்னும் தொல்காப்பியர் கூறும் 'வண்ணம்' முதலானவும் நடையமைப்பிற்குக் கூறப்படும் இலக்கணங்களாகக் கொள்ளலாம்.[46]

எனவே இவற்றால் வலியுறுத்தப்படும் மூன்று முதன்மையான நடையியல்புகள், சுருக்கமுடைமை, ஓசையினிமை, விழுமிய கருத்து என்பனவாம்.

நடை நலமுறுதற்குரிய பண்புகளுள் ஒன்றான சொல்லாட்சிச் சிறப்பையே இவை வலியுறுத்துகின்றன எனலாம்.

கோவிந்த சதகம்

> பாவுக்கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்ப்பூங்
> காவுக்கழகு மயிலுங் கண்டாய் கமலப்

42. தொல. பொருள். பேரா. நூ. 489 உரை.
43. தொல். பொருள். 536.
44. தொல். பொருள். 537.
45. தொல். பொருள். 539 .
46. தொல். பொருள். 513-534 .

பூவுக்கழகு மணமுந் திருவும் புவிபுரக்கும்
கோவுக்கழகு செங்கோலச் சுதாநந்த கோவிந்தனே[47]

என்னும் பாடலால் பல்வேறு அழகுகளைக் கூறவந்த நாராயணபாரதியார், பாவிற்கு அழகு தரும் இயல்புகளாகப் பொருட்சுவையையும் சொற்சுவையையும் கூறுவது உளங்கொளற் குரியது. அழகுகளில் தலையாயதாக 'பா அழகை' இங்கு அவர் கூறுவதும் பொருண்மையுடையதாம்.

கிறித்தவ மறை

சொற்களின் ஆற்றல் சொல்லுந்தரமன்று. ஊழித்தீப்போல் மாந்தரின் உள்ளத்தே பரவி உணர்ச்சித் தீயினை மூட்டும் ஆற்றல் சொற்களுக்கு உண்டு. கிறித்தவ வேதத்தின் மறையில்

'முதலில் சொல்லே இருந்தது, அதுகடவுளோடு
இருந்தது, அதுவே கடவுளாய் இருந்தது'[48]

என்று வரும் கூற்றின் ஆற்றல் சொல்லாற்றலின் சிறப்பை இனிது விளக்குவதாம்.

வள்ளுவரும் பரிமேலழகரும்

வள்ளுவர் 'சொல்வன்மை' அதிகாரத்தில் கூறும் கருத்துகள் யாவும் 'உணர்த்தும் திறன் எத்துணை அளவு நடையில் அமைக்கப்பெற வேண்டும் என்பதற்குக் கூறும் விளக்க களாகவே அமைகின்றன. பரிமேலழகர் அவ் வதிகாரத்தில் விளக்கும் கருத்தும் இங்கு ஒப்புநோக்குதற்குரியது. அவர் தம்முடைய உரையில்,

'அக் குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல்
இனிதாதல், விழுப்பயன்தருதல் என்றிவை முதலாயின'[49]

என்று சொல்வன்மையின் இயல்புகளைக் கூறுவர்.

47. கோவிந்த சதகம், பாடல். 27.
48. புதிய ஏற்பாடு, யோவான். 1 : 1.
49. குறள். 643. உரை

மொழிப் புலமை

ஒரு சொல்லின் உரிய பொருளைத் தெரிந்து அச் சொல்லை ஆளுதலே மொழிப் புலவரின் திறனாகும்.

> எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
> செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.[50]

என்பதும் இங்கே எண்ணத்தகும்.

புலவர்கள் சொற்களை எங்ஙனம் ஆய்ந்தாய்ந்து பெய்துள்ளனர் என்பதைக் கார்நாற்பது என்னும் நூல் அழகுறக் கூறும்:

> முல்லைக் கொடி மகிழ மொய்குழலார் உண்மகிழ
> மெல்லப் புனல் பொழியும் மின்னெழில்கார் தொல்லை நூல்
> வல்லார் உளமகிழத் தீந்தமிழை வார்க்குமே
> சொல்லாய்ந்த கூத்தர்கார் சூழ்ந்து [51]

என்னும் பாடல் 'சொல்லாய்ந்த கூத்தர்' என்று சொற்பயிற்சி மிக்குடையாரைக் கூறும். சொற்சுவையினைத் தராத நூல் பெருமைக்குரிய நூலாகாது என்று திருவள்ளுவமாலைப் பாடலும் கூறுவது எண்ணுதற்குரியது.[52] எனவே சொல்லாட்சித்திறனும் நடையழகுக்கு இன்றியமையாத ஒன்று என்பதும் இதனால் புலனாகும். 'பொருட்செறிவுள்ள செஞ்சொற்களால் அமைக்கப்பட்டு இசைக்கப்படுவதே கவிதை' என்று எசராபவுண்டு (Ezra Pound) கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.[53]

வடமொழி 'ரீதி'

வடமொழி இலக்கண நூலார் தம் 'அலங்கார சாஸ்திரங்களில்' நடையைப் பற்றி நன்கு ஆய்ந்துள்ளனர். 'ரீதி' என்று

50. நன்னூல், 388.
51. கார் நாற்பது, சிறப்புப்பாயிரச் செயயுள்.
52. திருவள்ளுவமாலை, பாடல். 39.
53. தேசிகன், ரா. ஸ்ரீ., கவிதைக்கலை, முதற்பகுதி, பக். 81. (மேற்கோள்) பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா, 1966.

இதனை வழங்குவர் / கவிதையின் உயிர்நிலை 'ரீதி' என்பர் வாமனர்.[54]

ஆங்கிலத்தில் உள்ள Rhythm என்ற சொல்லுங்கூட வட மொழி மூலச் சொல்லிலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டு மென்று கருதுகின்றனர். 'ரீ' என்றால் 'கதி' என்ற பொருளைத் தரும். ஒழுங்கான முறையில் ஓடுவதற்குத்தான் Rhythm என்று பெயர்[55] என்று கூறுவதும் ஆராயத் தக்கதே. இங்கு 'இழும்' என்ற தமிழ்ச் சொல்லின் ஒலியினையும் ஒருபுடை ஒப்புமையாகக் கருதலாம்.

டாக்டர் S.K. டே அவர்கள் 'Sanskrit Poetics' என்னும் தம் நூலில் 'Style' என்பதனை ரீதி (Riti) என்று கூறுவது எந்த அளவிற்குப் பொருந்தும் என்பதனை விரிவாக ஆராய்ந்துள்ளார்.[56]

சொல்லும் பொருளும் காவியத்தின் உடல் என்றும், உவமை முதலான அணிகள், மனிதன் தேவைக்கேற்ப அணியும் அணி கலன்கள் போன்றவை என்றும், 'ரீதி' என்பது, மனிதனுடைய இயல்பு போன்றது என்றும், 'த்வனி' அல்லது 'வியங்கியம்' என்ற ஒன்றே காவியத்தின் உயிர் என்றும் ஆனந்தவர்த்தனர் போன்றோர் கருதுவதும் இங்கு உளங்கொளத்தக்கது.[57]

தண்டியலங்காரம் கூறும் செய்யுள் நெறி

வடமொழி நூலார் கூறும் 'ரீதி'யைத் தமிழ்த் தண்டியலங் கார நூல் வைதருப்ப, கௌட நெறிகள் என்று இருவகையாகப் பகுத்துக் கூறுகிறது. செய்யுளின் நடைநலம் அறிதற்கு இதனை யும் சுருக்கமாகக் காண்பது இன்றியமையாததாகும்.

> செறிவே, தெளிவே, சமநிலை, இன்பம்,
> ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை,
> காந்தம், வலி, சமாதி யென்றுங்கு

54. Raghvan, Dr. V., Studies on some concepts of the Alamkara Sastra, p. 160, Adayar Library, Madras, 1973.
55. தேசிகன், ரா. ஸ்ரீ., கவிதைக்கலை (முதற்பகுதி) பக். 29.
56. Dae, Dr. S. K., Sanskrit Poetics II, P. 115 and 116.
57. திருஞானசம்பந்தம், பெ. : 'தொனிக் கொள்கை', வானொலிப் பேச்சு 11.8.1969.

ஆய்ந்த ஈரைங் குணனும் உயிரா
வாய்ந்த வென்ப வைதருப் பம்மே[58]

என்பது தண்டியலங்காரம் கூறும் செய்யுள் இயல்புகளாம். அவற்றின் விளக்கம் பின்வருமாறு:

1. பாடலில் நெகிழ்ந்த ஓசையின்றிச் சொற்கள் ஒன்றோடொன்று இறுகச் செறிந்து வருவது - செறிவு.[59]

2. பாடலைப் படித்த அளவிலேயே பொருள் எளிதில் விளங்குவது - தெளிவு.[60]

3. வன்மை, மென்மை, இடைமை என மூவினமும் தம்முள் கலந்து வருவது - சமநிலை.[61]

4. சொல்லினாலும், பொருளினாலும் பொருளைச் சுவைபடத் தொடுப்பது - இன்பம்.[62]

5. வெறுக்கத்தகும் இன்னா இசையின்றி வரத் தொடுப்பது—ஒழுகிசை.[63]

6. பாடலிலுள்ள வெளிப்படையான பொருளேயன்றிக் குறிப்பாகச் சிறப்பானதொரு பொருள் தோன்றப்பாடுவது - உதாரம்.[64]

7. கருதிய பொருளை விளக்குதற்குரிய விரிக்கும் சொல்லைச் செய்யுளுள்ளே உடையதாய்ப் பிறிது மொழிகூட்டியுரைக்கும் இயல்பின்றி வரத் தொடுப்பது - உய்த்தலில் பொருண்மை.[65]

58. தண்டியலங்காரம் 14.
59. ,, 16.
60. ,, 17.
61. ,, 18.
62. ,, 19.
63. ,, 20.
64. ,, 21.
65. ,, 22.

8. உலக நடை இறவாமல் புகழ்வது - காந்தம்.[66]

9. தொகைச் சொற்கள் மிக்கு வருவது - வலி.[67]

10. முக்கியப் பொருளின் வினையை ஒப்புடைப் பொருள் மேல்தந்து புணர்ந்து உரைப்பது - சமாதி.[68]

இத்தகைய பத்து நெறிகளால் செய்யுள் அமைவதில் கௌடருக்கும், வைதருப்பருக்குமிடையே கருத்து வேறுபாடுகளும் உண்டு.[69] இவையேயன்றி உவமை, உருவகங்களும், சொல்லணிகளும் நடைநலத்திற்குத் துணை புரிவனவாகவும் அமைகின்றன.

66. தண்டியலங்காரம், 23.
67. ,, 24.
68. ,, 25.
69. கௌடருக்கும் வைதருப்பருக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்:

வைதருப்ப நெறி	கௌட நெறி
1. செறிவு முதலிய பத்துக் குணங்களையும் ஏற்கும்.	அப் பத்தனுள் சிலவற்றை ஏற்கும்.
2. பெரும்பாலும் மூவினங்களால் இயன்ற பாடலையே விரும்புவர்.	ஓரினமான எழுத்துகளால் இயன்ற பாடலையே விரும்புவர்.
3. பொருள் எளிதில் விளங்கத்தக்கதாக இருக்க வேண்டும் என்பர்.	பொருள் அரிதில் புலப்படுதலை விரும்புவர்.
4. வழிமோனை, தொகைகள் ஆகியனவெல்லாம் ஓரளவிருப்பினும் ஏற்பர்.	அவை மிகுதியாக இருத்தலை விரும்புவர்.
5. ஒன்றனைப்புகழுங்கால் உலகியற்கைக்கு மாறுபடலாகாது என்பர்.	ஒன்றனைப் புகழுங்கால் உலக இயற்கையை நோக்காது, எத்துணை உயர்த்த வேண்டுமோ, அத்துணையும் உயர்த்திச் சொல்லலாம் என்பர்.

இருவருக்கும் ஒத்த நெறிகள்:

பொருள் காரணமான இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலிற் பொருண்மை, சமாதி என்பன. சொல்லின்பம் வலி என்பன கௌடருள் ஒருசாரார் விரும்புவன.

—தண்டியலங்காரம், பக். 29-30, கு. சுந்தரமூர்த்தி பதிப்பு.

திறனாய்வாளர் கண்ட நடைநலம்

மேலைநாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் அனைவரும் 'நடையினை', எழுதும் ஆசிரியரின் இயல்போடேயே பெரும்பாலும் இணைத்துப் பேசுகின்றனர்.[70] கவிஞருடைய நடை அவருடைய உள்ளத் தெளிவையும், கலைச்சுவைகளில் திளைத்த அவருடைய பண்பையும் புலப்படுத்தும்[71] என்பர்.

நடை என்பது ஆசிரியரின் தன்மையை வெளிப்படுத்தும் மொழி.[72] உள்ளத்தின் திட்பம் நடையின் திட்பமாகும்; உள்ளத்தின் தெளிவு நடையின் தெளிவாகும். ஆசிரியரின் குழப்பமும், சிக்கலும் அவருடைய நடையிலும் தென்படும் என்பர். எனவே ஆசிரியரின் நடையே அவருடைய இயல்பைக் காட்டும் உரைகல் என்று கூறுவர்.[73] நடை ஆசிரியருடைய உள்ளத்தின் சொல் லோவியம் (Style is the mental picture of the man who writes) என்றும், குணத்தை அறியுங்கலை (Physiognomy of the mind)[74], என்றும் கூறுவர்.

ஆசிரியர்கள் பண்படுத்திப் பண்படுத்திப் பயன்படுத்தும் சொற்களாலும், அடைமொழிகளாலுமே நடையின் இயல்பினை அறிந்து கொள்ள முடிகிறது என்பது பொதுவாக அவர்களுடைய கொள்கையாகும். சொற்கள் எண்ணத்தின் கருவிகள். எத்துணை அளவு அவை கூர்மையாகவும், திட்பமாகவும், மழுங்காமலும் இருக்கின்றனவோ அத்துணை அளவு எண்ணத்தின் வெளிப்பாடும் நுட்பமாகவும், திறனுடையதாகவும் விளங்கும். நுட்பம் (Accuracy) எளிமை (Ease) நயம் (Grace) என்னும் மூவகைப் பண்புகளே நல்ல நடையின் இயல்புகள் என்பர் சாப்மென்[75] (Chapman).

70. Murray, M., Problem of Style, P. 8.
71. Hudson, W. H., An Introduction to the study of Lit., p. 29.
72. Fyre, N., Anatomy of Criticism, p. 268.
73. Encyclopaedia Brittannica, Vol. II, p. 332.
74. Ibid. p. 332.
75. Alan Warner, A Short Guide to English Style, p. 6.

நடை வேறுபாடு

ஆசிரியர் (Author), காலம் (Age), நோக்கம் (Purpose), கருத்து (Theme), இடம் (Geography), மக்கள் (Audience) முதலியவற்றால் நடையின் தன்மையும் வேறுபடும்.[76] சங்ககாலப் புலவர் ஒருவரின் நடைக்கும், இக்காலப் புலவர் ஒருவரின் நடைக்கும் மாற்றமிருப்பது தெளிவாம். காலம், நோக்கம், கருத்து, இடம், மக்கள் முதலியவற்றின் இடையீடுகளால் அவர்களுடைய நடையும் மாற்றமுறும். 'அகவற்பா' பயின்று வந்த சங்ககாலமும் 'விருத்தப்பா' மிகுதியும் வழங்கிய இடைக்காலமும், மறுமலர்ச்சித் தமிழ்நடை காணும் இக்காலமும் காலத்தால் நடையியல்பும் வேறுபடும் என்பதைத் தெற்றெனப் புலனாக்குகின்றன. இவ்வாறே தான்கூற விழையும் நோக்கம், கருத்து ஆகியன கருதியும் நடையமைப்பில் மாற்றம் ஏற்படலாம். இடத்திற் கேற்றவாறும், தமக்கு முன் உள்ள மக்களுடைய உணர் திறனுக்கு ஏற்ற வாறும் உணர்த்தும் கலைத்திறனும் அமைதல் இயல்பேயாம். எனவே இதனாலும் நடையமைப்பும், திறனும் வேறுபடும் என்பது உண்மையே.

இங்ஙனம் நடை வேறுபடுதற்குரிய, காரணங்களையும், நடை வகைகளையும் தனியாகவும் விரிவாகவும் ஆராய்தல் தக்கது.

இலக்கியக் கலையின் உயிரும் - உள்ளமும்

இலக்கியக் கலையின் உயிர் கவிதைக் கலை; உள்ளம் கட்டுரைக் கலை. நீல வானத்தை அணிசெய்யும் ஞாயிறும் திங்களும்போல இலக்கிய வானத்தை எழில் செய்யும் இருபெருஞ்சுடர்கள் கட்டுரையும் கவிதையும் என்பர் அறிஞர்.[77] இதுகாறும் கூறப்பெற்ற நடையிலக்கணங்கள் அனைத்தும் செய்யுளுக்கே எனினும் இவற்றுள் பலவும் உரைநடைக்கும் பொருந்தி வருவனவாம்.

76. Ghosh, Prof. D. N., Principles of Literary Criticism, pp. 142—144.

77. சஞ்சீவி, டாக்டர் ந., ஆராய்ச்சிக் கட்டுரைகள்—முதல் தொகுதி, பக். 150.

செய்யுள்

சிறப்பாக உணர்ச்சியும், கற்பனையும், வடிவமும் செய்யுளுக்கு மேலும் பொலிவையும் வலிவையும் அளிக்கின்றன.[78] யாப்பிலக்கணம் ஒன்றே செய்யுளையும், உரைநடையையும் வேறுபடுத்துகிறது. பாடல்களுக்கு உறுப்பாக எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவற்றைக் குறிப்பிடுவர். இந்த உறுப்புக்களை ஏற்றபெற்றி அமைத்துக் கவிஞர் தாம் கருதிய பொருள் பொலிவுற, அணிநலம் திகழ, அமைக்கப் பெறுவதே யாப்பு அல்லது செய்யுள் என்று கூறுவர்.[79] உரைநடையினைக் காட்டிலும் செய்யுள் உள்ளத்தைக் கொள்ளைகொள்வதற்குக் காரணம் அதன் வடிவமைப்பே.

> 'விஷயத்தை ஜடத்தன்மையிலிருந்து விடுதலை அளிக்கவே யாப்புத் தோன்றியது. ஸிதாரின் தந்திகள் கட்டுண்டு முடக்கப்பட்டு உள்ளனவே தவிர, அதன் தந்தியிலிருந்து இசை வெளிப்படுகிறது. யாப்பு, தந்திகள் சுருதி கூட்டிய ஸிதார் போன்றது. சொற்களின் உள்ளத்துள் அடங்கி இருக்கும் இசையை அது வெளிப்படுத்திய வண்ணம் இருக்கிறது. வில்லுக்கு இது நாண் போன்றது. சொல்லை அது அம்புகள்போல் குறியின் மையத்துள் படும்படி வீசுகிறது.'

என்னும் வங்க மகாகவி தாகூரின் கருத்து இங்கு எண்ணுதற்குரியது.[80]

> 'குறிப்பாகத் தமிழ்ப்பாட்டுகளில் எதுகை அமைப்பு இணையற்ற ஒன்ருக உள்ளது. பழந்தமிழ் இலக்கியங்

78. Alden, Raymond Macdonald, An Introduction to Poetry, p. 128.
79. யாப்பு அமைதி குறித்துப் பின் வரும் நூலில் விரிவாகக் காணலாம்: சண்முகம் பிள்ளை, மு., திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், சென்னைப் பலகலைக் க்ழகம், 1971.
80. தாகூர், ரவீந்திரர் கட்டுரைத்திரட்டு (இரண்டாம் தொகுதி), பக். 281,

களில் இவ்வமைப்புமுறை பெரிதும் பின்பற்றப்படவில்லை. ஆனால் சங்க காலத்தின் இறுதியில் எதுகையமைப்பு இன்றியமையாத ஒன்றாக யாப்பு உறுப்புகளில் காணப்படலாயிற்று. வடமொழி சார்ந்த மொழிகளில் இவ்வாறு தொடர்ந்து எதுகை அமைப்புக் காணல் அரிது. ஏனைய மொழிகளிலும் அவ்வாறே. பாடல்களின் தொடக்கத்தில் காணப்பெறும் இத் தமிழ் ஒலி நயமாண்பு ஐரோப்பியக் கவிதைகளின் ஈற்றில் பின்பற்றப் பட்டு வருவதோடு ஒப்பிடற்குரியது'

என்பர் அறிஞர் ஏ. எல். பாசம் அவர்கள்.[81]

உரை நடை

செய்யுளில் எதுகை மோனைகளோடு சீர்களின் இயைபும் சந்தவின்பம் தருவது போலவே உரைநடையிலும் சந்தவின்பம் தரும் கூறுகள் உண்டு. எதுகை, மோனை ஏற்ற அளவில் வருவதும், குறில், நெடில்கள் இடத்திற்கேற்ப அளவுபட வருதலும், வல்லினம், மெல்லினம் முதலியன விரவி வருதலும், இன்றியமையாத சந்திகளை மாத்திரம் அமைத்து இசையறுப்பதும் இதனுடைய கூறுகள் எனலாம். இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், மீமிசை, மடக்கு, சிலேடை, சொற்பின்வருநிலை, விரோத அணி முதலியவற்றால் சொல்லின்பம் பெற வைப்பதும் இங்கே உளங்கொளத் தக்கது.

81. Basham, A. L., The wonder that was India, p. 463.

துணை நூல்கள்

இலக்கியம்

1. அகநானூறு, எஸ். இராஜம் பதிப்பு, சென்னை, 1953.
2. அஷ்டப் பிரபந்தம், பிள்ளைப் பெருமாளையங்கார், சடகோப ராமாநுஜாசாரியர் உரை, சென்னை, நளவருடம்.
3. ஐங்குறுநூறு, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1958.
4. கம்பராமாயணம், பால, ஆரண்ய காண்டங்கள், வை. மு. கோ. பதிப்பு, சென்னை, 1965.
5. கார் நாற்பது, வேங்கடசாமி நாட்டார், ந. மு., உரை, கழக வெளியீடு, சென்னை, 1967.
6. குறுந்தொகை, சாமிநாத அய்யர், உ. வே.,பதிப்பு, சென்னை. 1962.
7. கோவிந்த சதகம், நாராயண பாரதியார், மதராஸ் அச்சியந்திர சாலை, சென்னை, 1917.
8. சங்க இலக்கியம் (தொ 1, 2), வையாபுரிப் பிள்ளை, ப. ஆ, சமாஜப் பதிப்பு, பாரிநிலையம், சென்னை, 1967.
9. சிலப்பதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1956.
10. சீவக சிந்தாமணி, உ. வே. சா. பதிப்பு, சென்னை, 1949.
11. திருக்குறள், வை. மு. கோ. பதிப்பு, சென்னை, 1965.
12. திருக்குறள் உரைக்கொத்து, (அறம், பொருள் இன்பம், திருப்பனந்தாள் வெளியீடு, 1969, 1960, 1970.
13. திருவாய் மொழி (முதல் பத்து) சென்னைப் பல்கலைக் கழகம் சென்னை, 1952.
14. நற்றிணை, நாராயணசாமி ஐயர், பி. அ. உரை, கழக வெளியீடு, சென்னை, 1956.
15. நாமக்கல் கவிஞர் பாடல்கள், தணிகை உலகநாதன் (ப. ஆ), லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை, 1950.

16. நாலடியார், களத்தூர் வேதகிரி முதலியார் உரை, வித்தியா ரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1936.

17. பதினெண்கீழ்க்கணக்கு, (முதல் தொகுதி), எஸ். இராஜம் வெளியீடு, 1959.

18. புறநானூறு, சாமிநாத அய்யர், உ. வே., பதிப்பு, சென்னை, 1935,

19. பெருங்கதை, உ. வே. சா. பதிப்பு, சென்னை, 1968.

20. மணிமேகலை, உ. வே. சா. பதிப்பு, 1931.

இலக்கணம்

21. தண்டியலங்காரம், சுந்தரமூர்த்தி, கு., (ப. ஆ), திருப்பனந்தாள். 1967.

22. தொல்காப்பியம், எழுத்து, நச்சர் உரை, கழகப் பதிப்பு, சென்னை, 1961.

23. தொல்காப்பியம், பொருள், இளம்பூரணர், பேராசிரியர், கழக வெளியீடு, சென்னை, 1961.

24. நன்னூல், ஆறுமுகநாவலர் பதிப்பு, சென்னை, 1963.

25. யாப்பருங்கலம், வேணுகோபாலப்பிள்ளை (ப. ஆ), அரசினர் சுவடிகள் நூலகம், சென்னை, 1960.

26. வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும், கழக வெளியீடு, சென்னை, 1931.

27. வீரசோழியம், பவானந்தர் கழகப் பதிப்பு, சென்னை, 1942.

இலக்கிய ஆராய்ச்சி

28. அப்பாத்துரையார், கா. திருக்குறள் மணி விளக்கவுரை, தொகுதி 1, சென்னை, 1967.

29. அரவிந்தன், மு. வை. உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1968.

30. அருணாசலம், மு., தமிழிலக்கிய வரலாறு. 13ம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், 1970.

31. கைலாசபதி, டாக்டர் க., ஒப்பியல் இலக்கியம், பாரிநிலையம், சென்னை, 1969.

32. ஞானசம்பந்தன், அ. ச., இலக்கியக்கலை, கழக வெளியீடு, சென்னை-1956.

33. சஞ்சீவி, டாக்டர் ந., ஆராய்ச்சிக் கட்டுரைகள், முதல்தொகுதி பாரி நிலையம், சென்னை, 1970.

34. சஞ்சீவி, டாக்டர், ந., இலக்கிய இயல் அ. ஆ., தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1974.

35. சண்முகம்பிள்ளை, மு., திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும், சென்னைப்பல்கலைக்கழகம், 1971.

36. சாமிநாதையர், உ. வே., சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், சென்னை, 1953.

37. சாரங்கபாணி, இரா. திருக்குறள் உரைவேற்றுமை, செல்வி பதிப்பகம், 1963.

38. சிவஞானம், ம. பொ., விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, இன்பநிலையம், சென்னை, 1970.

39. சுப்பிரமணியன், டாக்டர் எஸ். வி. (ப. ஆ), ஆராய்ச்சி நெறி முறைகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

40. சுப்பிரமணியன், டாக்டர், எஸ். வி, மாந்தர் சிறப்பு, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1974.

41. செல்வக்கேசவராய முதலியார், திருமணம், தமிழ் வியாசங்கள், டயோசிசன் பிரஸ், வேப்பேரி, 1926.

42. சொக்கலிங்கம், இராய., காந்தியும் வள்ளுவரும் பாரதி பிக்சர் பாலெஸ், காரைக்குடி.

43. தமிழவன், இருபதில் கவிதை, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர் கோவில், 1971.

44. தாகூர், ரவீந்திரர் கட்டுரைத்திரட்டு, இரண்டாம் தொகுதி, த. நா. குமாரஸ்வாமி தமிழாக்கம், சாகித்திய அக்காதெமி புதுதில்லி, 1965.

45. தாமோதரன், டாக்டர், அ., திருக்குறள் மேற்கோள் விளக்கம், ஹைடல்பர்க் பல்கலைக்கழகம், மேற்கு ஜெர்மனி, 1970.

46. திருநாவுக்கரசு, க. த., திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971.

47. தேசிகன், ரா. ஸ்ரீ. கவிதைக்கலை, முதற் பகுதி, பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா, 1965.

48. நாமக்கல் கவிஞர், என் கதை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1955.

49. நாமக்கல் கவிஞர், திருக்குறள் புதுஉரை, மங்கள நூலகம், சென்னை, 1954.

50. நாமக்கல் கவிஞர், திருக்குறள் புதுஉரைச் சுருக்கம் கவிஞர் பதிப்பகம், கோவை, 1960.

51. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவர் இன்பம், மங்கள நூலகம், சென்னை, 1953.

52. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவர் திடுக்கிடுவார், இன்பநிலையம், சென்னை-1953.

53. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவரும் பரிமேலழகரும், இன்பநிலையம், சென்னை, 1956.

54. நாமக்கல் கவிஞர், வள்ளுவரின் உள்ளம், இன்பநிலையம், சென்னை, 1954.

55. பாலசுப்பிரமணியன், டாக்டர் சி, இலக்கிய அணிகள், பாரி நிலையம், சென்னை, 1972.

56. மீனாட்சி சுந்தரம், டாக்டர் கா., பன்மையில் ஒருமை, வேலன் பதிப்பகம், கோவை, 1969.

57. ரெனி வெல்லாக், ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, குளோறியா சுந்தரமதி (தமிழாக்கம்), உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழக வெளியீடு, பாரிநிலையம், சென்னை, 1966.

58. வரதராசன் டாக்டர். மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1972.

நிகண்டு, அகராதிகள்

59. சூடாமணி நிகண்டு, முத்துத்தம்பி பிள்ளை (ப ஆ), நாவலர் அச்சுக் கூடம், 1915.

60. தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1963.

61. பழந்தமிழ்ச் சொல்லடைவு, புதுவை பிரெஞ்சு ஆய்வக வெளியீடு, 1968.

மலர்

62. தமிழியல் ஓர் அகநோக்கு—டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி மணிவிழாமலர், ஆர். சந்திரசேகரன், கே. பி. கணேசன் (ப. ஆ), கோவை, 1972.

63. திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க 4ஆவது ஆண்டுமலர், 1967.

பிற

64. புதிய ஏற்பாடு, இந்தியா இலங்கை வேதாகமச் சங்கம். பெங்களூர், 1959.

65. திருஞான சமபந்தம், பெ., தொனிக் கொள்கை, வானொலிப் பேச்சு, 11-8-69.

ஆங்கில நூல்கள்

66. Alan Warner, A Short Guide to English Style, Oxford University Press, 1964.

67. Basham, A. L., The wonder that was India.

68. Brooks & Warren, Fundamentals of Good Writing, London, N. D.

69. De, Dr. S. K., Sanskrit Poetics, Part I, London, 1923.

70. Encyclopaedia Brittannica, Vol, 21., Chicago, 1969.

71. Fyre, N. Anatomy of Criticism.

72. Ghosh, Prof. D. N., Principles of Literary Criticism, Kitab Ghar, Gwaliar, 1970.

73. Hudson, W. H., An Introduction to the Study of Literature, Kalyani Publishers, Ludhiana, 1971.

74. Lyon, P. H. B., The Discovery of Poetry, Edward Arnold, London, 1932.

75. Macdonald, Alden Raymond, An Introduction to Poetry, Henry Holt and Company, New York, 1927.

76. Murray, M., The Problem of Style, Oxford University Press, 1956.

77. Raghavan, Dr. V., Studies on Some Concepts of the Alamkara Sastra, The Adayar Library and Research Centre, Madras, 1973.

78. Shairp, J. C, Aspects of Poetry.

79. Webster's New Twentieth English Dictionary of the English Language, The Publisher's Guild, INC, Newyork, 1964.

பொருளடைவு

(எண் : பக்க எண்)



- இ. சுந்தரமூர்த்தி
  5-2-1942
  வெள்ளலூர் (கோவை)
- எம். ஏ., புலவர்
  மானிடவியல் (டிப்.)
  தொல்லியல், மொழியியல்
  (சான்றிதழ்)
- பரிமேலழகர் உரைத்திறன்
  ஒரு திறனாய்வு
  (டாக்டர் பட்ட ஆய்வு)
- திருக்குறள் அணிநலம்
  (சென்னைப் பல்கலைக் கழக
  வெளியீடு)
  50 ஆய்வுக் கட்டுரைகள்